**ம.அ.1.ந.க.எண்.பி1/ 06548/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 02.12.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.591/2014 **பொருள் எண்.01**

**பழுதடைந்த அங்கன்வாடி கட்டிடங்களை இடிப்பதற்கு அனுமதி**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–1, பகுதி–1, வார்டு–4ல் உள்ள சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்படும் அங்கன்வாடி கட்டிடங்கள் பயன்படுத்த முடியாத அளவு பழுதடைந்து எந்த நேரமும் இடிந்து விழக்கூடிய அபாயகரமான நிலையில் உள்ளது. எனவே, பழுதடைந்த கட்டிடங்களை இடித்து அப்புறபடுத்துவது அவசியம் மற்றும் அவசரமான செயலாகும். இக்கட்டிடங்கள் அப்போதைய திருவொற்றியூர் நகராட்சியால் கட்டப்பட்டது. இதனுடைய தற்போதைய புத்தக மதிப்பு மற்றும் அனைத்து விவரங்களும் வருமாறு.

| வரிசை எண் | வார்டு எண்–4 | மண்டலம்–1 |
|---|---|---|
| 1 | இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–1, பகுதி–1, வார்டு–4ல் இராமநாதபுரம் 10வது தெருவில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்படும் அங்கன்வாடி கட்டிடம் |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1963ம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 7.0மீ X 13.0மீ= 91 சதுரமீட்டர் (துரைதளம் மட்டும்) |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள நிலத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 91 சதுரமீட்டர் |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.4000/– |
| 6 | அந்த கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை. |
| 7 | அந்த கட்டிடம் இடித்தற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | மறுகட்டுமானம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8 | கட்டிடம் இடிப்பதற்கு காரணம் ? | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது. |
| 9 | கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்– 1 |
| 10 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண். | தீர்மான எண்:82/2014, நாள்.10 .07. 2014 |

| **வரிசை எண்** | **வார்டு எண்–4** | **மண்டலம்–1** |
|---|---|---|
| 1 | இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–1, பகுதி–1, வார்டு–4ல் எர்ணாவூர் மாங்காளியம்மன் கோயில் தெரு பகுதியில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்படும் அங்கன்வாடி கட்டிடம் |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1973ம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 22.2மீ X 6.3மீ= 139.86ச.மீட்டர் (துரைதளம் மட்டும்) |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள நிலத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 140சதுரமீட்டர் |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.4500/– |
| 6 | அந்த கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை. |

| | | |
|---|---|---|
| 7 | அந்த கட்டிடம் இடித்தற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | மறுகட்டுமானம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8 | கட்டிடம் இடிப்பதற்கு காரணம் ? | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது. |
| 9 | கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர் – 1 |
| 10 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண். | தீர்மான எண்:83/2014, நாள்.10.07.2014 |

எனவே, மண்டலம்–1, பகுதி–1, வார்டு–4ல் இராமநாதபுரம் 10வது தெரு மற்றும் எர்ணாவூர் மாங்காளியம்மன் கோயில் தெரு பகுதியில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்படும் இரண்டு அங்கன்வாடி கட்டிடங்களை இடிப்பதற்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“16.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.35/2014, நாள்.16.12.2014–ன்படி நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“19.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.459/2014, நாள்.19.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.6.ந.க.எண்/2986/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.11.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.592/2014 **பொருள் எண்.02**

**பொதுக்கழிப்பிடக் கட்டிடம் இடிப்பதற்கு அனுமதி.**

| வரிசை எண் | வார்டு–69 | மண்டலம்–6 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–6, வார்டு–69ல் ஆண்டர்சன் சாலையில் அமைந்துள்ள பழுதடைந்த பொதுக் கழிப்பிடக் கட்டிடம் . |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | தோராயமாக 38 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாகும் |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 36.00 ச.அடி |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 180.00 ச.அடி |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.7,544/– |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | ஆம் |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | அம்மா உணவகம் Phase II |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | அம்மா உணவகம் Phase II |
| 9. | கட்டித்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | 6வது மண்டல வார்டு குழு |
| 10. | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண், மற்றும் நாள். | மண்டலம்–6 வார்டு குழு தீர்மான எண்.99, நாள்.18.08.2014 |

எனவே, மண்டலம்–6, வார்டு–69ல் ஆண்டர்சன் சாலையில் அமைந்துள்ள பழுதடைந்த பொதுக் கழிப்பிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.42/2014, நாள்.17.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“19.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.456/2014, நாள்.19.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.அ.14.ந.க.எண்.4280/2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 31–10–2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.593/2014 **பொருள் எண்.03**

**<u>பழுதடைந்த பேருந்து நிழற் குடை இடிப்பதற்கு அனுமதி</u>**

| வரிசை எண் | வார்டு-187 | மண்டலம்-14 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-14, பகுதி-42, வார்டு-187ல் மடிப்பாக்கத்தில் உள்ள சபரி சாலை மற்றும் பொன்னியம்மன் கோவில் தெரு சந்திப்பில் உள்ள மிகவும் பழுதடைந்த பேருந்து நிழற் குடை. |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 1988 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | – |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு? | 250 ச.அடி |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ. 18121.46 |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | இல்லை |
| 7 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | பேருந்து நிற்கும் இடம் மாற்றப்பட்டு விட்டதால் அவ்விடத்தில் பணி ஏதும் மேற்க்கொள்ளபடவில்லை. |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளது. |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | மாமன்ற உறுப்பினர் வார்டு - 187, மற்றும் மண்டல அலுவலர் - 14. |
| 10 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | 187வது மண்டலம் வார்டு குழு தீர்மான எண். 462/2014, நாள்:09/07/2014 |

எனவே, மண்டலம்-14, பகுதி–42, வார்டு-187ல் மடிப்பாக்கத்தில் உள்ள சபரி சாலை மற்றும் பொன்னியம்மன் கோவில் தெரு சந்திப்பில் உள்ள மிகவும் பழுதடைந்த பேருந்து நிழற் குடை இடிப்பதற்கு நிலைக்குழு(பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.455/2014, நாள்.19.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ9/1931/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.11.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.594/2014 **பொருள் எண்.04**

**நிலம் மற்றும் உடைமைத்துறை – மண்டலம்–15, வார்டு–195, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய ஒக்கியம் துரைப்பாக்கம் அடுக்குமாடி குடியிருப்பு திட்டப்பகுதி – சிமெண்ட் சாலைகளை சென்னை மாநகராட்சியின் தொடர் பராமரிப்புக்காக பெற்றுக் கொள்ள அனுமதி**

மண்டலம்–15, வார்டு–195, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய ஒக்கியம் துரைப்பாக்கம் அவசர சுனாமி மறு குடியமர்வு திட்டத்தின் கீழ் 2048 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளதாகவும், இத்திட்டப்பகுதியில் அமைந்துள்ள சிமெண்ட் சாலைகளை சென்னை மாநகராட்சி வசம் தொடர் பராமரிப்பிற்கு ஒப்படைக்கும் பொருட்டு நீளம், அகலங்களுடன் கூடிய வரைபடம் மற்றும் தான பத்திரத்தை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய ஈ.டி.ஆர்.பி. தெற்கு கோட்ட நிர்வாகப்பொறியாளரின் கடித ந.க.எண்.45/ETRPS (Dn)/2014, நாள்.11.06.2014 (ம) 25.08.2014ன்படி தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் அனுப்பிவைத்துள்ளது.

மேற்படி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்படவுள்ள சிமெண்ட் சாலைகளை ஆய்வு செய்து சரியான விவரங்களுடன் வார்டு குழு பரிந்துரை பெற்று அனுப்புமாறு 15–வது மண்டல அலுவலரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதன் அடிப்படையில் மேற்கண்ட சிமெண்ட் சாலைகளை சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்வதற்கு 15–வது மண்டலம் வார்டுக் குழு தீர்மானம் எண்.283, நாள்:18.8.2014ன்படி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

எனவே, மண்டலம்–15, வார்டு–195, தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய ஒக்கியம் துரைப்பாக்கம் அடுக்குமாடி குடியிருப்பு திட்டப்பகுதி புல எண்–403/5 மற்றும் 403/6ல் அடங்கியுள்ள 17905 சதுர மீட்டர் பரப்பளவுள்ள 11 சிமெண்ட் சாலைகளை சென்னை மாநகராட்சி பராமரிப்புக்கு எடுத்துக் கொள்ள நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண்.472/14 நாள்.22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பே.சா.து.ந.க.எண்.பி1/2620/2014**

**முதன்மைச் செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 29–11–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.595/2014 பொருள் எண்.05

**சாலை (ம) பாலங்கள் துறை – முக்கிய சாலைகள் விரிவாக்கம் (LPS) தயாரித்தல் பணிக்கு நில எடுப்பு தொடர்பாக – அரசின் தக்க ஆணைகள் பெறுதல் பொருட்டு நில எடுப்பு அட்டவணை (LPS) தயாரித்தல் மற்றும் சாலை விரிவாக்கம் சம்மந்தமாக சமூக பிரச்சினைகள் (Social Impact Assessment) குறித்து – கூட்டம் (Stake Holders Meeting) நடத்தப்பட்டு அறிக்கை சமர்ப்பித்தல் ஆகிய பணிகளை தனியார் கலந்தறிதற்குரியவர்கள் மூலம் மேற்கொள்ள – கொள்கையளவு அனுமதி**

சென்னை மாநகரத்தில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காணும் வகையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் 2வது முழுமைத்திட்டத்தில் (Second Master Plan) தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதான சாலைகளையும் மற்றும் மாநகராட்சியால் அவசியம் மற்றும் சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் இதர சாலைகளையும் அகலப்படுத்துவதற்கான முயற்சிகளை சென்னை மாநகராட்சி மேற்கொண்டு 14 முக்கிய சாலைகளை அகலப்படுத்தும் பணிக்கு முதற்கட்ட நடவடிக்கையான நில எடுப்பு அட்டவணை (Land Plan Schedule) தயாரிக்கும் பணிக்கு மாமன்ற தீர்மானத்தின் அடிப்படையில் ஒப்பம் கோரப்பட்டு தகுதி வாய்ந்த தனியார் நிறுவனங்கள் (Private Consultancy) மூலமாக பின் வரும் சாலைகளில் நில எடுப்பு அட்டவணை (Land Plan Schedule) தயாரிக்கும் பணிக்கு பணியாணை வழங்கப்பட்டு அளவீட்டு பணிகள் (Surveying Works) தற்பொழுது நடைபெற்று வருகிறது.

சாலைகளின் விவரம் பின்வருமாறு:

1. பேப்பர் மில்ஸ் சாலை
2. செம்பியம் ரெட்ஹில்ஸ் சாலை
3. காளியம்மன் கோயில் தெரு
4. நெல்சன் மாணிக்கம் சாலை
5. என்.எஸ் கே சாலை (ஆற்காடு சாலை)
6. சாந்தோம் நெடுஞ்சாலை (காரணீஸ்வரர் பகோடா சாலை முதல் டி.ஜி.எஸ் தினகரன் சாலை சந்திப்பு வரை)
7. சர்தார் பட்டேல் சாலை (அண்ணா சாலை முதல் மத்திய கைலாஷ் வரை)
8. டாக்டர் முத்துலட்சுமி சாலை (எல்.பி.ரோடு)
9. கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலை (சர்தார் பட்டேல் சாலை முதல் பழைய மகாபலிபுரம் சாலை வரை)
10. மேற்கு சைதாப்பேட்டையில் உள்ள கோடம்பாக்கம் சாலை
11. ஜெயராமன் தெரு
12. மசூதி தெரு
13. பெரம்பூர் பேரக்ஸ் சாலை (புரசைவாக்கம் நெடுஞ்சாலை சந்திப்பு முதல் புளியாந்தோப்பு நெடுஞ்சாலை சந்திப்பு வரை)
14. ஸ்ட்ராஹான்ஸ் சாலை (அங்காளம்மன் கோயில் தெரு சந்திப்பு முதல் பிரிக்கிலின் சாலை சந்திப்பு வரை)

இந்நிலையில், 28.08.2014 அன்று நடை பெற்ற மன்றக்கூட்டத்தில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் புதியதாக விரிவாக்கம் செய்யப்பட வேண்டிய கூடுதல் சாலைகளின் விவரங்களை கீழ்க்கண்டவாறு அறிவிப்பு செய்துள்ளார்.

1) சூளை மேடு நெடுஞ்சாலை
2) ராயப்பேட்டை நெடுஞ்சாலை
3) டாக்டர் நடேசன் சாலை
4) ஆர்.கே.மடம் சாலை
5) வேளச்சேரி பிரதான சாலை (கன்னிகாபுரம் நீச்சல் குளத்திலிருந்து விஜயநகரம் பேருந்து நிலையம் வரை)
6) புரசைவாக்கம் நெடுஞ்சாலை
7) ரிப்பன் மாளிகையின் பின்புறம் உள்ள அல்லி குளம் இணைப்புச் சாலை

மேற்கண்ட சாலைகளுடன், கோடம்பாக்கம் நெடுஞ்சாலை மற்றும் வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை சந்திப்பில் ஒரு வாகன போக்குவரத்து மேம்பாலம் அமைக்கப்படும் உத்தேச திட்டம் உள்ளதால், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையை விரிவாக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி உயரதிகாரிகளின் ஆய்வு கூட்டங்களின் போது பாலங்கள் துறை கேட்டுக்கொண்டதால் வள்ளுவர் கோட்ட நெடுஞ்சாலையை சாலை விரிவாக்க பணி மேற்கொள்ள தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மாமன்ற உறுப்பினர் திருமதி.பி. சாந்தி, 113வது வார்டு, 9வது மண்டலம் அவர்கள் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கு அளித்த 03.09.2014 நாளிட்ட மனுவில் சென்னை மாநகராட்சி ஆயிரம் விளக்கு தொகுதி 113 வது வார்டில் உள்ள கோடம்பாக்கம் நெடுஞ்சாலை மிகவும் போக்குவரத்து நெரிசல் வாய்ந்த சாலை என்பதால் கோடம்பாக்கம் மேம்பாலம் முதல் அண்ணா மேம்பாலம் (ஜெமினி) வரையிலான சாலையினை விரிவாக்கம் செய்வது என்பது இன்றியமையாததாக உள்ளதால் மேற்படி சாலையை விரைவில் விரிவாக்கம் செய்து தருமாறு கோரியுள்ளார்.

மேலும் மண்டலம்–13, வார்டு–182ல் உள்ள உட்புறச் சாலையான அவ்வை நகர் முதன்மைச்சாலை திருவான்மியூர் பகுதியை இராஜீவ் காந்தி சாலையுடன் இணைக்கும் முக்கிய சாலையாக உள்ளதால், இச்சாலையில் மிகுந்த போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் இச்சாலையை சாலை விரிவாக்கம் செய்யக் கோரும் துணை மேயர் அவர்களின் 19.09.2014 நாளிட்ட கோரிக்கையை செயல்படுத்திட அவ்வை நகர் முதன்மைச் சாலை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே, வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் அறிவிப்பு செய்த 7 சாலைகள் மற்றும் மேற்குறிப்பிட்ட 3 சாலைகளையும் (வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை (டாக்டர் எம்.ஜி.ஆர் சாலை), அவ்வை நகர் முதன்மைச்சாலை வார்டு–182, மண்டலம் –13 (உட்புற சாலை) சேர்த்து மொத்த 10 சாலைகளின் விவரங்கள் பின்வருமாறு

1) சூளை மேடு நெடுஞ்சாலை
2) ராயப்பேட்டை நெடுஞ்சாலை
3) டாக்டர் நடேசன் சாலை
4) ஆர்.கே.மடம் சாலை
5) வேளச்சேரி பிரதான சாலை (கன்னிகாபுரம் நீச்சல் குளத்திலிருந்து விஜயநகரம் பேருந்து நிலையம் வரை)
6) புரசைவாக்கம் நெடுஞ்சாலை
7) ரிப்பன் மாளிகையின் பின்புறம் உள்ள அல்லி குளம் இணைப்புச் சாலை
8) வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை
9) கோடம்பாக்கம் நெடுஞ்சாலை (டாக்டர் எம்.ஜி.ஆர் சாலை)
10) அவ்வை நகர் முதன்மைச்சாலை (உட்புற சாலை) வார்டு–182, மண்டலம் –13

மேற்கண்ட 10 சாலைகளில் சூளை மேடு நெடுஞ்சாலை, அல்லி குளம் இணைப்புச் சாலை மற்றும் அவ்வை நகர் முதன்மை சாலை (உட்புற சாலை) ஆகிய 3 சாலைகள் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் 2வது முழுமை திட்டத்தில் இடம் பெறாததால் இச்சாலைகள் விரிவாக்கம் குறித்து கருத்துரு அளிக்க சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு 27.10.2014 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. கருத்துரு பெறப்பட்டவுடன் சாலை விரிவாக்கம் சம்மந்தமாக தக்க மேல் நடவடிக்கை எடுக்கவும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் 2வது முழுமை திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள கீழ்கண்ட மற்ற 7 சாலைகளை விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டது.

**அட்டவணை –1**

| வ. எண் | மண்டலம் / வார்டு எண் | சாலையின் பெயர் | நீளம் (தோராயமாக) மீட்டரில் | தற்போதைய அகலம் (சராசரி) (மீட்டரில்) | உத்தேசிக்கும் அகலம் (மீட்டரில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 9 | ராயபேட்டை நெடுஞ்சாலை (திரு.வி.க. சாலை) | 4100 | 13–15 | 18.30 |
| 2 | 9 | டாக்டர் நடேசன் சாலை | 1235 | 14 | 18.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | 9 /124 &126/13 | ஆர்.கே. மடம் சாலை | 2185 | – | 30.50 |
| 4 | 13 /174 &178 | வேளச்சேரி பிரதான சாலை (கன்னிகாபுரம் நீச்சல் குளத்திலிருந்து விஜய நகர பேருந்து நிலையம் வரை) | 3820 | 15 | 45.00 |
| 5 | 6 | புரசைவாக்கம் நெடுஞ்சாலை | 1468 | 6.30 | 24.00 |
| 6 | 9 | வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை (வில்லேஜ் சாலை) | 1753 | 18.00 | 27.00 |
| 7 | 9 | கோடம்பாக்கம் நெடுஞ்சாலை (டாக்டர் எம்.ஜி.ஆர் சாலை) | 2110 | – | 27.00 |

மேலும் மேற்கண்ட 7 சாலைகளில் விரிவாக்க பணிகள் மேற்கொள்ள நில எடுப்பு சட்டம் 2013 (No.30 of 2013) சட்டத்தின் கீழ் நிலங்களை கையகப்படுத்தவும் மற்றும் அரசிற்கு முன்மொழிவுகள் அனுப்பவும் கீழ்காணும் விவரங்கள் தேவைப்படுகிறது.

1) சாலைகளுக்கு விரிவாக்க சாத்திய கூறுகள் ஆராயப்பட்டு பின்னர் அதன் அடிப்படையில் சாலை விரிவாக்கப் பணிக்கு உட்படும் நிலங்களின் கிராமத்தின் பெயர்கள், பிளாக் எண்கள், நகர புல எண்கள், அவற்றின் மொத்த பரப்பு, வகைப்பாடு, விரிவாக்க சாலைக்கு (நில எடுப்பு – LPS) தேவைப்படும் பரப்பு, நில உரிமைதாரர்களின் பெயர்கள், புல வரைப்படம் மற்றும் கூட்டு வரைப்படங்கள் ஆகியவற்றினை உரிய படிவத்தில் விரிவான அறிக்கையாக தாக்கல் செய்யவேண்டும்.

2) அ) எந்த நோக்கத்திற்காக நிலம் மைகயப்படுத்தப்பட வேண்டும் அவற்றின் பயன்பாடு

ஆ) இத்திட்டத்தில் உள்ள சமூக பிரச்சினைகள் (Social Impact Assessment) ஏதேனும் உள்ளனவா ? இருப்பின் அவற்றின் விவரம்.

இ) முதன்மைச் செயலர் / ஆணையர் தலைமையில்

1) சென்னை மாவட்ட ஆட்சியர்
2) சாலைகள் துறை,
3) போக்குவரத்து காவல் துறை,
4) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்,
5) நில உரிமைதாரர்கள் மற்றும்
6) சாலை பயன்படுத்துவோர் ஆகியயோரை அழைத்து நடத்தப்பட்ட கூட்டத்தின் (Stake Holders Meeting) கருத்துரு மற்றும் சாலை விரிவாக்கத்திற்கு தேவைப்படும் நிலங்களின் முழுமையான மதிப்பீடு செய்யப்பட வேண்டும்

இத்திட்டத்தில் உள்ள சமூக பிரச்சினைகள் (Social Impact Assessment) ஏதேனும் உள்ளனவா ? என்று ஆராய வேண்டும்.

3) மேலும் அட்டவணை–1ல் உள்ள சாலைகளுக்கு சாலை விரிவாக்க பணிகளை செயல்படுத்த அரசின் கொள்கையளவு அனுமதி பெறவேண்டும்

1. நிலஎடுப்பு அட்டவணை தயாரிக்கும் (Land Plan Schedule) பணி மேற்கொள்ளவும் சாலை விரிவாக்கம் சம்மந்தமாக சமூக பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை தாக்கல் செய்யவும் மற்றும் சாலையை பயன்படுத்தும் பொது மக்களுடன் சம்மந்தப்பட்ட அரசு துறை அதிகாரிகளுடன் சேர்த்து நடத்தப்பட்ட கூட்டத்தின்(Stake Holders Meeting) கருத்துரு சமர்ப்பிக்கபடவேண்டிய இப்பணிகளுக்கு தனியார் கலந்தறிதற்குரியவர்கள் (Private Consultants) மூலம் மேற்கொள்ளவும்,

2. மேலும் அரசிற்கு பிரேரனைகள் முன்மொழிவுகள் அனுப்பவும் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் விரிவாக்க பணிகளை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் கொள்கையளவு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919ன் கீழ் சட்டப்பிரிவு விதி 78(பி) ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.460/14, நாள்.19.12.2014—ன்படி இதற்கு நிலைக்குழு(பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண்.475/14 நாள்.22.12.2014—ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.2.ந.க.எண்.C1/1923/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 12.12.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.596/2014 **பொருள் எண்.06**

**மண்டலம் – 2 (மணலி) – பகுதி – 4 முதல் 5, வார்டு – 15 முதல் 21 வரை 305 துப்புரவு தொழிலாளர்களை சுவர்ண ஜெயந்தி நேரு வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி**

சுவர்ண ஜெயந்தி நேரு வேலை வாய்ப்பு திட்ட அலுவலர் அவர்களின் 03.06.2014 நாளிட்ட குறிப்பில் மண்டலம் – 1 முதல் 15 வரை உள்ள மண்டல அலுவலர்கள் சுவர்ண ஜெயந்தி நேரு வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசித்து வரும் குறைந்தது 5 நபர்கள், அதிகபட்சம் 20 நபர்கள்வீதம், ஒரு குழுவாக அமைத்து அக்குழுவினர், வார்டு அளவில், தேவைக்கேற்ப ஈடுபடுத்தி துப்புரவு பணி – பணிபுரியும் அண்டை வீட்டுக்குழுக்கள் / மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள், ஊக்குநர், பிரதிநிதி ஆகியோரை சம்மந்தப்பட்ட துப்புரவு ஆய்வாளர், துப்புரவு மேற்பார்வையாளர், பகுதி உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் ஆகியோர், மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மண்டலங்களிலும், அனைத்து வார்டுகளுக்கும் தேவையான துப்புரவு பணியாளர் முழுவதுமாக நியமித்து துப்புரவு பணியை நூறு சதவீதம் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக சமர்ப்பிக்கப்படுவது, மண்டலம் – 2ல் வார்டு – 15 முதல் 21 வரையில் உள்ள 7 வார்டுகளில் 876 உட்புற சாலைகளும், 24 பேருந்து சாலைகளும் (நெடுஞ்சாலை) உட்பட உள்ளது. இப்பகுதியில் 131868 மக்கள் சுமார் 18373 குடியிருப்புகளில் வசிக்கின்றனர். இப்பகுதிகளில் தூய்மை பணிகள் தொய்வில்லாமல் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது. மேலும், பிரதான பேருந்து சாலைகள், அங்காடி அமைந்துள்ள சாலைகள் போன்றவற்றில் இரவு நேர தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் எழுந்துள்ளது.

மண்டலம் – 2 (மணலி)யில் வார்டு – 15 முதல் 21 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வார்டு – 15 முதல் 21 வரை உள்ள வார்டுகளில் தற்போது தனியார் ஏஜென்சி மூலம் துப்புரவு தினக்கூலி பணியாளர்கள் நாள் ஒன்றுக்கு ரூ.295/– என்ற அடிப்படையில் நியமிக்கப்பட்டு துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்தம் 31.07.2014 அன்றுடன் முடிவடைகிறது. அதனை தொடர்ந்து இந்த 7 வார்டுகளிலும் துப்புரவு பணி மேற்கொள்ள தனியார் அளிக்கும் தினக்கூலி பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

எனவே இக்கருத்துகளின் அடிப்படையில் 305 துப்புரவு பணியாளர்கள் தேவை என கணக்கிட்டு பணியமர்த்த வேண்டி உள்ளது.

1. ஆய்வின்படி பகுதி 4ல் தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை 118
2. ஆய்வின்படி பகுதி 5ல் தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை 187
3. தற்போது பகுதி 4 மற்றும் 5ல் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 39
4. மறு ஆய்வின்படி பகுதி 4 மற்றும் 5ல் தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை 305

| வ எண் | பகுதி எண் | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | மொத்தம் பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் (வருடத்திற்கு) |
|---|---|---|---|---|
| 1 | 4 | 118 | 305 | 3,28,40,875 |
| 2 | 5 | 187 | | |

எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், கூட்ட நடவடிக்கை குறிப்பில் அறிவித்தபடி எந்த ஒரு தெருவும் விடுபடாமல் ஆய்வு மற்றும் அளவீடு செய்து அதன் பின்னர் ஒருங்கிணைந்து அதன் அடிப்படையில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்– 2ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த தலைமைபொறியாளர் அவர்களின் சுற்றறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.295/– வீதம் 305 துப்புரவு பணியாளர்களுக்கு ஆகும் தோராய செலவு ரூ.295X305X365 என ஓராண்டிற்கு ரூ.3,28,40,875/– தொகை தேவைப்படுகிறது.

மன்றத்தீர்மான எண் 760/2013 நாள்: 22.11.2013ன்படி சென்னை மாநகராட்சியில் இயங்கும் அம்மா உணவகங்களில் பணிபுரிய அண்டை வீட்டு/ மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் பணியாளர்களை பயன்படுத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதேபோல் சுவர்ண ஜெயந்தி நேரு வேலைவாய்ப்பு திட்டத்தில் உள்ள குழுக்களின் நபர்களை (305 எண்ணிக்கை) துப்புரவு பணிக்கு பயன்படுத்தலாம்.

எனவே, மண்டலம் – 2ல் பகுதி – 4 மற்றும் 5, வார்டு – 15 முதல் 21 வரை துப்புரவு பணிகள் தங்கு தடையின்றி நடைபெற வேண்டி

1. மண்டலம் – 2ற்கு துப்புரவு பணிக்கு தேவையான 305 நபர்களை, சென்னை மாநகராட்சியில் இயங்கும் அம்மா உணவகங்களுக்கு பணிபுரிய அண்டை வீட்டு / மகளிர்சுய உதவிக்குழுக்கள் மூலம் பணியாளர்களை பயன்படுத்துவது போல் சுவர்ண ஜெயந்தி நகர்புற வேலைவாய்ப்புத்திட்டத்தின் மூலம் அண்டை வீட்டுக்குழுக்களாக பதிவு செய்யப்பட்ட ஆண் / பெண் உறுப்பினர்களைக் கொண்ட குழுக்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ளவும்.
2. மேற்படி குழுவிற்கு வேலை செய்த நாட்களுக்கான தொகை குழு பெயரில் பதிவு செய்யப்பட்ட வங்கி கணக்கில் செலுத்தவும்.
3. மேற்சொன்ன துப்புரவு பணியாளர்களுக்கு துப்புரவு பணிக்கு தேவையான நலப்பொருட்களான முக கவசம், கையுறை, மற்றும் ஒளிரும் மேல்சட்டை போன்றவற்றிற்கும் சேர்த்து மொத்த தொகைக்காக நாள் ஒன்றுக்கு ரூ.295/– வீதம் ஓராண்டிற்கு ரூ.3,28,40,875/–க்கு நிர்வாக அனுமதிக்கும் மற்றும் துப்புரவு பணியாளர்கள் நல பொருட்களான கையுறை, முககவசம், மற்றும் ஒளிரும் மேல்சட்டை அணியாத பட்சத்தில் குழுவினர் மூலமாக ஊதியத்திலிருந்து ஒரு நபருக்கு நாளொன்றிற்கு ரூ.32.00 வீதம் பிடித்தம் செய்யப்படவும்
4. இப்பணிக்கான தொகைக்கு கணக்கு குறியீட்டு எண் 40–41–03 கணக்கு தலைப்பு எண் 230–15–01–00 மேற்கொள்ளவும்

எனவே, மேற்கண்ட 1 முதல் 4 முடியவுள்ள இனங்களுக்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (சுகாதாரம்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.43/14, நாள்.17.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு(சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண்.477/14, நாள்.22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.1ந.க.எண்.பி1/7275/2013(Grid-III)**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19–12–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.597/2014 பொருள் எண்.07

**சென்னை மாநகராட்சி – மண்டலம் – 1 – சென்னை பெருநகர வளர்ச்சித்திட்டம் ( Chennai Megacity Development Mission) சென்னை மாநகர விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – (Grid III) சிப்பம்–2ல் ஒப்பந்ததாரர். திரு.பாபுஜி சிவில் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது – பணி மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது – சேமிப்பு தொகையில் மறுவகைப்பாடு ஒப்புதல் அதே ஒப்பந்தகாரருக்கு பணி ஆணை வழங்க அனுமதி**

சென்னை மாநகராட்சி மற்றும் விரிவாக்கப்பட்டப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான, சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ், முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதற்கிணங்க இச்சிறப்பு திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், நடைபாதைகள், மற்றும் தெருவிளக்குகள் ஆகிய அடிப்படை வசதிகள் மேம்படுத்துவதற்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சி மண்டலம்–1ல் ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனை தொடர்ந்து, இப்பணியினை, மதிப்பீடு தொகை ரூ. 18,93,47,922.34/– ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பாபுஜி சிவில் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்அவர்கள், கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (+) 12.70% கூடுதலாக கொடுத்துள்ளதை தொடர்ந்து மேற்படி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு செய்யப்பட்டு மதிப்பீட்டை விட கூடுதலாக (+) 6.90% ஒப்பத்தொகை ரூ.20,24,13,436.16/– க்கு ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இத்தருணத்தில் சில சாலைகளில் சாலையின் இருபுறமும் ஒழுங்குப்படுத்துதல் (Alignment) மற்றும் நேர் கோட்டில் சீர் அகலம் கொண்ட சாலை அமைக்கும் போது ஏற்பட்ட அளவு குறைவினால், சேமிப்பு தொகையாக ரூ.5,23,29,910.16 (ரூபாய் ஐந்து கோடியே இருபத்து மூன்று லட்சத்து இருபத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து பத்து ரூபாய் பதினாறு பைசா மட்டும்) உள்ளது.

இந்நிலையில் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் வேண்டுதலின்படியும் அவசியம், அவசரம் கருதியும், போக்குவரத்தின் நலன் கருதியும் சென்னை பெரு நகர வளர்ச்சி திட்டம் – III சேமிப்பு தொகையிலிருந்து புதிதாக சாலைகள் அமைக்க எடுக்கப்பட்ட சாலைகள், ஏற்கனவே ஒப்பம்–1ல் எடுக்கப்பட்ட சாலைகள் அருகாமையில் உள்ளது. அப்பணிக்கு அதே சி.பி.ஆர் (CBR)எண் உள்ளதால், முந்தைய வடிவமைப்பு இப்பணிகளுக்கும் பொருந்தும். மேலும் புதிதாக எடுக்கப்பட்டுள்ள சாலையின் பரப்பளவு ஒப்பீடு செய்யப்பட்டதில், அதன் பரப்பளவு 28637 ச.மீ ஆக உள்ளது. எனவே, அதே ஒப்பந்ததாரர் மூலம் இம்மாறுப்பாட்டினால் ஏற்பட்டுள்ள பணிகளை செய்யலாமென கருதப்படுகிறது. இந்நிலையில் ஒப்பந்ததாரர் திரு.பாபுஜி சிவில் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்அவர்களின் ஒப்பத்தில் அளித்துள்ள ஒப்ப சதவீதத்தின் படி பணிகளை மேற்கொள்ள இசைவு கடிதம் அளித்துள்ளார்.

மேற்படி ஒப்பங்கள் இப்பணியினங்களின் மொத்த அளவுகளுக்காக தயார் செய்யப்பட்டு ஒப்பம் கோரப்பட்டுள்ளதால் முழுமையாக இப்பணியினை மேற்கொண்டு முடிக்க வேண்டியது அவசியமாகிறது.

கீழ்கண்ட சாலைகளில் சேமிப்பு தொகையில் பணிகளை மேற்கொள்வதற்கு பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண். | கோட்ட எண் | புதியதாக மேற்கொள்ளப்படவிருக்கும் சாலைகளின் பெயர் | பரப்பளவு ச.மீ | மதிப்பீட்டு தொகை ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | 5 | நெய்தல் நகர் பிரதான தெரு | 3660 | 68.40 |
| 2 | 5 | நெய்தல் நகர் 1வது தெரு | 594 | 5.70 |
| 3 | 5 | நெய்தல் நகர் 2வது தெரு | 2016 | 30.50 |
| 4 | 5 | நெய்தல் நகர் 2வது குறுக்கு தெரு | 250 | 4.30 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | 5 | நெய்தல் நகர் 3வது தெரு | 732 | 11.50 |
| 6 | 6 | இராஜா சண்முகம் நகர் 6வது தெரு | 1200 | 19.80 |
| 7 | 6 | டி.கே.எஸ். நகர்,1வது,2வது தெரு | 1660 | 35.40 |
| 8 | 6 | இராஜா சண்முகம் நகர் 5வது தெரு | 1100 | 18.60 |
| 9 | 6 | இராஜா சண்முகம் நகர் 13வது தெரு | 1400 | 23.20 |
| 10 | 6 | ஜோதி நகர் பிரதான சாலை | 2450 | 42.20 |
| 11 | 6 | ஜோதி நகர் மெயின் குறுக்கு தெரு | 1130 | 20.10 |
| 12 | 6 | முருகப்பா நகர் பாரதி தெரு | 240 | 4.10 |
| 13 | 6 | ராஜா சண்முகம் நகர் 1 முதல் 6 குறுக்கு தெரு | 1125 | 18.00 |
| 14 | 6 | ராஜா சண்முகம் நகர் 3வது தெரு | 1920 | 28.70 |
| 15 | 7 | கங்கையம்மன் நகர் | 3150 | 69.90 |
| 16 | 7 | ராதாகிருஷ்ணன் பிரதான சாலை | 1250 | 28.60 |
| 17 | 10 | வடக்கு மாட வீதி முதல் சந்து | 460 | 7.66 |
| 18 | 10 | மேற்கு மாட வீதி ( திருவொற்றியூர் ) முதல் சந்து | 340 | 5.90 |
| 19 | 10 | கோமாத நகர் 3வது தெரு | 440 | 7.41 |
| 20 | 10 | வடக்கு ரயில்வே ஸ்டேஷன் 1வது குறுக்கு தெரு | 260 | 4.42 |
| 21 | 10 | வடக்கு ரயில்வே ஸ்டேஷன் 2வது குறுக்கு தெரு | 180 | 3.26 |
| 22 | 10 | வடக்கு ரயில்வே ஸ்டேஷன் 3வது குறுக்கு தெரு | 320 | 5.55 |
| 23 | 11 | பூங்கா நகர் பிரதான சாலை | 900 | 9.93 |
| 24 | 12 | எழுத்துக்காரன் தெரு | 1860 | 28.20 |
| | | மொத்தம் | 28637 | 501.93 |

மேற்கண்ட பணிகளை பொது மக்கள் நலன் கருதி பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால், ஒளிவு மறைவற்ற ஒப்பந்த புள்ளியின்படி சாலைகள் அமைக்கவும், ஏற்கனவே, பணியை செய்து வந்த ஒப்பந்ததாரரான திரு. பாபுஜி சிவில் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்அவர்களுக்கு சிப்பம் 1ல் செய்யப்பட்டுள்ள பணிகளில் சேமிப்பு தொகை உள்ளதால், அதே ஒப்பந்ததாரரான திரு. பாபுஜி சிவில் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்அவர்களை கொண்டு பணிகளை மேற்கொள்ளவும், அதே ஒப்பந்த சதவீதத்தின்படி 25 சதவீதத்திற்கு மிகாமலும், ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் ஒப்ப உடன்படிக்கையின்படி பணி மேற்கொள்ளவும், மேலும், இப்பணியினை Project Sanction Committee ஒப்புதலுடன் பணியினை செய்திடவும், நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது .

"19.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண். 462/14 நாள் 19.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண். 478/14 நாள் 22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.2ந.க.எண்.இ1/3361/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19–12–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.598/2014 பொருள் எண்.08

**மண்டலம் – 2 (மணலி) – சென்னை பெருநகர வளர்ச்சித்திட்டம் (Chennai Megacity Development Mission) சென்னை மாநகர விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – (Grid III) சிப்பம் –2ல் ஒப்பந்ததாரர். திரு.R.ராமராவ் அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. பணி மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. சேமிப்பு தொகையில் மறுவகைப்பாடு ஒப்புதல் அதே ஒப்பந்தகாரருக்கு பணி ஆணை அளிக்க அனுமதி**

சென்னை மாநகராட்சி மற்றும் விரிவாக்கப்பட்டப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான, சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ், முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதற்கிணங்க இச்சிறப்பு திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், நடைபாதைகள், மற்றும் தெருவிளக்குகள் ஆகிய அடிப்படை வசதிகள் மேம்படுத்துவதற்காக அரசாணை (2D) எண்.100 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 15.10.2011படி அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சி மண்டலம்–2 (மணலி)ல் 2 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனை தொடர்ந்து, இப்பணியினை சிப்பம்–2ல், மதிப்பீடு தொகை ரூ. 16,19,07,957.55/– ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இப்பணிக்கு இரு ஒப்பங்கள் பெறப்பட்டது. இதில், குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.R.ராமராவ் அவர்கள், கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (+) 18.75% கூடுதலாக கொடுத்துள்ளதை தொடர்ந்து மேற்படி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு செய்யப்பட்டு மதிப்பீட்டை விட கூடுதலாக (+)9.10% ஒப்பத்தொகை ரூ.17,66,41,581.69/–க்கு மன்ற தீர்மாணம் எண்.47/2014 ன்படி ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இத்தருணத்தில் சில சாலைகளில் சாலையின் இருபுறமும் ஒழுங்குப்படுத்துதல் (Alignment) மற்றும் நேர் கோட்டில் சீர் அகலம் கொண்ட சாலை அமைக்கும் போது ஏற்பட்ட அளவு குறைவினால், சேமிப்பு தொகையாக ரூ. 73,44,664.96 (ரூபாய் ஏழுபத்தி மூன்று லட்சத்து நாற்பத்தி நான்காயிரத்து ஆறுநூற்றி அறுபத்தி நான்கு ரூபாய் தொண்ணூற்றி ஆறு பைசா மட்டும்) உள்ளது.

இந்நிலையில் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள், வேண்டுதலின்படி, போக்குவரத்தின் நலன் கருதியும் சேமிப்பு தொகையிலிருந்து புதிதாக சாலைகள் அமைக்க எடுக்கப்பட்ட சாலைகள், ஏற்கனவே சிப்பம்–2ல் எடுக்கப்பட்ட சாலைகள் அருகாமையில் உள்ளது. அப்பணிக்கு அதே சி.பி.ஆர். (CBR) எண் உள்ளதால், முந்தைய வடிவமைப்பு இப்பணிகளுக்கும் பொருந்தும். மேலும் புதிதாக எடுக்கப்பட்டுள்ள சாலையின் பரப்பளவு ஒப்பீடு செய்யப்பட்டதில், அதன் பரப்பளவு 3873 ச.மீ ஆக உள்ளது. எனவே, அதே ஒப்பந்ததாரர் மூலம் இம்மாறுப்பாட்டினால் ஏற்பட்டுள்ள பணிகளை செய்யலாமென கருதப்படுகிறது. இந்நிலையில் ஒப்பந்ததாரர் திரு.ஆர். ராமராவ் அவர்களின் சிப்பம் 2ல் அளித்துள்ள ஒப்ப சதவீதத்தின் படி பணிகளை மேற்கொள்ள இசைவு கடிதம் அளித்துள்ளார்.

கீழ்கண்ட சாலைகளில் சேமிப்பு தொகையில் பணிகளை மேற்கொள்வதற்கு பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ.எண். | கோட்ட எண் | புதியதாக மேற்கொள்ளப்படவிருக்கும் சாலைகளின் பெயர் | பரப்பளவு ச.மீ | தொகை ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | 15 | மணலி புது நகர் 30 அடி சாலை 13 வது பிரதான சாலை (பகுதி) | 1050.00 | 20.47 |
| 2 | 15 | மணலி புது நகர் 40 அடி சாலை சமூக நலக்கூடம் அருகில் | 413.00 | 7.81 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 16 | ஆண்டார்குப்பம் விநாயகர் கோயில் தெரு | 700.00 | 12.17 |
| 4 | 16 | சடையாங்குப்பம் அம்மன் கோயில் தெரு | 560.00 | 9.68 |
| 5 | 18 | சி.பி.சி.எல் 1வது பிரதான சாலை | 1150.00 | 23.06 |
| | | மொத்தம் | 3873 | 73.19 |

மேற்கண்ட பணிகளை பொது மக்கள் நலன் கருதி பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால், ஒளிவு மறைவற்ற ஒப்பந்த புள்ளியின்படி சாலைகள் அமைக்கவும், ஏற்கனவே, சிப்பம் 2ன் பணியை செய்து வந்த ஒப்பந்ததாரரான திரு. ஆர். ராமராவ் அவர்களுக்கு சிப்பம் 2ல் செய்யப்பட்டுள்ள பணிகளில் சேமிப்பு தொகை உள்ளதால், அதே ஒப்பந்ததாரரான திரு.R.ராமராவ் அவர்களை கொண்டு பணிகளை மேற்கொள்ளவும், அதே ஒப்பந்த சதவீதத்தின்படி 25 சதவீதத்திற்கு மிகாமலும், ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் ஒப்ப உடன்படிக்கையின்படி பணி மேற்கொள்ளவும், மேலும், இப்பணியினை Project Sanction Committee ஒப்புதலுடன் பணியினை செய்திடவும், ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண். 463/14 நாள் 19.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண். 479/14 நாள் 22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.3.ந.க.எண்.இ1/4454/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19–12–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.599/2014 பொருள் எண்.09

**மண்டலம் – 3 (மாதவரம்) – சென்னை பெருநகர வளர்ச்சித்திட்டம் ( Chennai Megacity Development Mission) சென்னை மாநகர விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – (Grid III) சிப்பம் –2ல் ஒப்பந்ததாரர் திருவாளர்.T.M..சுப்பிரமணியம் அண்டு கம்பெனி அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. பணி மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. சேமிப்பு தொகையில் மறுவகைப்பாடு ஒப்புதல் அதே ஒப்பந்தகாரருக்கு பணி ஆணை அளிக்க –அனுமதி**

சென்னை மாநகராட்சி மற்றும் விரிவாக்கப்பட்டப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான, சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ், முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதற்கிணங்க இச்சிறப்பு திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், நடைபாதைகள், மற்றும் தெருவிளக்குகள் ஆகிய அடிப்படை வசதிகள் மேம்படுத்துவதற்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சி மண்டலம் – 3 (மாதவரம்)ல் 2 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனை தொடர்ந்து, இப்பணியினை சிப்பம் – 2ல், மதிப்பீடு தொகை ரூ. 17,94,99,264.82/– ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.T.M..சுப்பிரமணியம் அண்டு கம்பெனி அவர்கள், கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (+) 15.00% கூடுதலாக கொடுத்துள்ளதை தொடர்ந்து மேற்படி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு செய்யப்பட்டு மதிப்பீட்டை விட கூடுதலாக (+) 7.80% ஒப்பத்தொகை ரூ. 19,35,00,207.00/–க்கு மன்ற தீர்மாணம் எண்.20/2014 ன்படி ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இத்தருணத்தில் சில சாலைகளில் சாலையின் இருபுறமும் ஒழுங்குப்படுத்துதல் ( Alignment) மற்றும் நேர் கோட்டில் சீர் அகலம் கொண்ட சாலை அமைக்கும் போது ஏற்பட்ட அளவு குறைவினால், சேமிப்பு தொகையாக ரூ. 2,83,86,962.00 ( ரூபாய் இரண்டு கோடியே எண்பத்தி மூன்று இலட்சத்து எண்பத்தி ஆராயிரத்து தொள்ளாயிரத்தி அறுபத்தி இரண்டு மட்டும்) உள்ளது.

இந்நிலையில் பொதுமக்கள், வேண்டுதலின்படி, அவசியம் அவசரம் கருதியும் போக்குவரத்தின் நலன் கருதியும் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்–III சேமிப்பு தொகையிலிருந்து புதிதாக சாலைகள் அமைக்க எடுக்கப்பட்ட சாலைகள், ஏற்கனவே சிப்பம்–2ல் எடுக்கப்பட்ட சாலைகள் அருகாமையில் உள்ளது. அப்பணிக்கு அதே சி.பி.ஆர். (CBR) எண் உள்ளதால், முந்தைய வடிவமைப்பு இப்பணிகளுக்கும் பொருந்தும். மேலும் புதிதாக எடுக்கப்பட்டுள்ள சாலையின் பரப்பளவு ஒப்பீடு செய்யப்பட்டதில், அதன் பரப்பளவு 9363 ச.மீ ஆக உள்ளது. எனவே, அதே ஒப்பந்ததாரர் மூலம் இம்மாறுப்பாட்டினால் ஏற்பட்டுள்ள பணிகளை செய்யலாமென கருதப்படுகிறது. இந்நிலையில் ஒப்பந்ததாரர் திருவாளர்.T.M..சுப்பிரமணியம் அண்டு கம்பெனி அவர்களின் சிப்பம் 2ல் அளித்துள்ள ஒப்ப சதவீதத்தின் படி பணிகளை மேற்கொள்ள இசைவு கடிதம் அளித்துள்ளார்.

மேற்படி ஒப்பங்கள் இப்பணி இனங்களின் மொத்த அளவுகளுக்காக தயார் செய்யப்பட்டு ஒப்பம் கோரப்பட்டுள்ளதால் முழுமையாக இப்பணியினை மேற்கொண்டு முடிக்க வேண்டியது அவசியமாகிறது.

கீழ்கண்ட சாலைகளில் சேமிப்பு தொகையில் பணிகளை மேற்கொள்வதற்கு பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ.எண். | கோட்ட எண் | புதியதாக மேற்கொள்ளப்படவிருக்கும் சாலைகளின் பெயர் | பரப்பளவு ச.மீ | தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1 | 28 | சுபம் நகர் 2வது தெரு | 180.00 | 4.14 |
| 2 | 28 | சுபம் நகர் 3வது தெரு | 200.00 | 4.60 |
| 3 | 28 | சுபம் நகர் 4வது தெரு | 200.00 | 4.60 |
| 4 | 28 | சுபம் நகர் 5வது தெரு | 525.00 | 12.08 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | 28 | படவட்டம்மன் கோயில் 1வது சந்து | 120.00 | 2.76 |
| 6 | 28 | படவட்டம்மன் கோயில் 2வது சந்து | 90.00 | 2.07 |
| 7 | 28 | படவட்டம்மன் கோயில் கன்னிகா தெரு | 330.00 | 7.59 |
| 8 | 28 | படவட்டம்மன் கோயில் 2வது தெரு தனபால் தெரு | 240.00 | 5.52 |
| 9 | 28 | படவட்டம்மன் கோயில் 2வது தெரு | 525.00 | 12.07 |
| 10 | 28 | படவட்டம்மன் கோயில் 2வது தெரு 1வது சந்து | 240.00 | 5.52 |
| 11 | 28 | படவட்டம்மன் கோயில் 2வது தெரு 2வது சந்து | 280.00 | 6.44 |
| 12 | 28 | படவட்டம்மன் கோயில் 2வது தெரு 3வது சந்து | 75.00 | 1.73 |
| 13 | 28 | படவட்டம்மன் கோயில் 2வது தெரு 4வது சந்து | 90.00 | 2.07 |
| 14 | 28 | படவட்டம்மன் கோயில் 3வது தெரு | 137.00 | 3.16 |
| 15 | 28 | படவட்டம்மன் கோயில் 4வது தெரு | 320.00 | 7.36 |
| 16 | 28 | வரதப்பா தெரு, கே.கே.தாழை | 490.00 | 11.27 |
| 17 | 28 | கேத்சமேனி நகர் தெரு | 193.00 | 4.43 |
| 18 | 28 | கன்னிகா தோட்டம் தெரு | 330.00 | 7.59 |
| 19 | 28 | வாசுகி நகர் பிரதான தெரு (பட்டம்மாள் பிரதான தெரு) | 1120.00 | 25.76 |
| 20 | 28 | வாசுகி நகர் 1வது தெரு (பட்டம்மாள் 1வது தெரு) | 350.00 | 8.05 |
| 21 | 28 | வாசுகி நகர் 2வது தெரு (பட்டம்மாள் 2வது தெரு) | 350.00 | 8.05 |
| 22 | 28 | வாசுகி நகர் 3வது தெரு (பட்டம்மாள் 3வது தெரு) | 375.00 | 8.63 |
| 23 | 28 | சிவபாதம் 1வது தெரு கே.கே.தாழை | 840.00 | 19.32 |
| 24 | 28 | சிவபாதம் 2வது தெரு கே.கே.தாழை | 608.00 | 13.97 |
| 25 | 28 | சிவபாதம் 3வது தெரு கே.கே.தாழை | 630.00 | 14.49 |
| 26 | 28 | பக்தவச்சலம் நகர் தெரு | 525.00 | 12.08 |
| | | மொத்தம் = | **9363.00** | **215.35** |

மேற்கண்ட பணிகளை பொது மக்கள் நலன் கருதி பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால், ஏற்கனவே, சிப்பம் 2ன் பணியை செய்து வந்த ஒப்பந்ததாரரான திருவாளர்.T.M..சுப்பிரமணியம் அண்டு கம்பெனி அவர்களுக்கு சிப்பம் 2ல் செய்யப்பட்டுள்ள பணிகளில் சேமிப்பு தொகை உள்ளதால், அதே ஒப்பந்ததாரரான திருவாளர்.T.M..சுப்பிரமணியம் அண்டு கம்பெனி அவர்களை கொண்டு பணிகளை மேற்கொள்ளவும், அதே ஒப்பந்த சதவீதத்தின்படி 25 சதவீதத்திற்கு மிகாமலும், ஏற்கனவே உள்ள ஒப்பந்தாரரின் ஒப்ப உடன்படிக்கையின்படி பணி மேற்கொள்ளவும், மேலும், இப்பணியினை Project Sanction Committee ஒப்புதலுடன் பணியினை செய்திடவும் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண். 464/14 நாள் 19.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண். 480/14 நாள் 22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.3.ந.க.எண்.இ1/4453/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19–12–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.600/2014 பொருள் எண்.10

**சென்னை மாநகராட்சி – மண்டலம் – 3 (மாதவரம்) – சென்னை பெருநகர வளர்ச்சித்திட்டம் (Chennai Megacity Development Mission) சென்னை மாநகர விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – (Grid III) சிப்பம் –1ல் ஒப்பந்ததாரா். திரு.K.துர்வாசலு அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. பணி மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. சேமிப்பு தொகையில் ஒப்புதல் அதே ஒப்பந்தகாரருக்கு பணி ஆணை அளிக்க அனுமதி**

சென்னை மாநகராட்சி மற்றும் விரிவாக்கப்பட்டப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான, சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ், முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதற்கிணங்க இச்சிறப்பு திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், நடைபாதைகள், மற்றும் தெருவிளக்குகள் ஆகிய அடிப்படை வசதிகள் மேம்படுத்துவதற்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சி மண்டலம் – 3 (மாதவரம்)ல் 2 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனை தொடா்ந்து, இப்பணியினை சிப்பம்–1ல், மதிப்பீடு தொகை ரூ.18,01,46,837.04/– ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.K.துர்வாசலு அவர்கள், கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (+) 14.72% கூடுதலாக கொடுத்துள்ளதை தொடா்ந்து மேற்படி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு செய்யப்பட்டு மதிப்பீட்டை விட கூடுதலாக (+)8.00% ஒப்பத்தொகை ரூ.19,45,58,584.00/–க்கு மன்ற தீர்மாணம் எண்.19/2014 ன்படி ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இத்தருணத்தில் சில சாலைகளில் சாலையின் இருபுறமும் ஒழுங்குப்படுத்துதல் (Alignment) மற்றும் நேர் கோட்டில் சீர் அகலம் கொண்ட சாலை அமைக்கும் போது ஏற்பட்ட அளவு குறைவினால், சேமிப்பு தொகையாக ரூ.2,36,43,380.00 (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்தி ஆறு இலட்சத்து நாற்பத்தி மூன்றாயிரத்தி முன்றூற்றி எண்பது மட்டும்) உள்ளது.

இந்நிலையில் பொதுமக்கள், வேண்டுதலின்படி, அவசியம் மற்றும் அவசரம் கருதியும் போக்குவரத்தின் நலன் கருதியும் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்–III சேமிப்பு தொகையிலிருந்து

புதிதாக சாலைகள் அமைக்க எடுக்கப்பட்ட சாலைகள், ஏற்கனவே சிப்பம்–1ல் எடுக்கப்பட்ட சாலைகள் அருகாமையில் உள்ளது. அப்பணிக்கு அதே சி.பி.ஆர். (CBR) எண் உள்ளதால், முந்தைய வடிவமைப்பு இப்பணிகளுக்கும் பொருந்தும். மேலும் புதிதாக எடுக்கப்பட்டுள்ள சாலையின் பரப்பளவு ஒப்பீடு செய்யப்பட்டதில், அதன் பரப்பளவு 10623 ச.மீ ஆக உள்ளது. எனவே, அதே ஒப்பந்ததாரா் மூலம் இம்மாறுப்பாட்டினால் ஏற்பட்டுள்ள பணிகளை செய்யலாமென கருதப்படுகிறது. இந்நிலையில் ஒப்பந்ததாரா் திரு.K.துர்வாசலு அவர்களின் சிப்பம் 1ல் அளித்துள்ள ஒப்ப சதவீதத்தின் படி பணிகளை மேற்கொள்ள இசைவு கடிதம் அளித்துள்ளாா்.

மேற்படி ஒப்பங்கள் இப்பணி இனங்களின் மொத்த அளவுகளுக்காக தயார் செய்யப்பட்டு ஒப்பம் கோரப்பட்டுள்ளதால் முழுமையாக இப்பணியினை மேற்கொண்டு முடிக்க வேண்டியது அவசியமாகிறது.

கீழ்கண்ட சாலைகளில் சேமிப்பு தொகையில் பணிகளை மேற்கொள்வதற்கு பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ.எண். | கோட்ட எண் | புதியதாக மேற்கொள்ளப்படவிருக்கும் சாலைகளின் பெயர் | பரப்பளவு ச.மீ | தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1 | 28 | பவானி நகர் விரிவு தெரு | 324.00 | 7.45 |
| 2 | 28 | பவானி நகர் விரிவு 1வது குறுக்கு தெரு | 400.00 | 9.20 |
| 3 | 28 | பவானி நகர் விரிவு 2வது குறுக்கு தெரு | 330.00 | 7.59 |
| 4 | 28 | பவானி நகர் 1வது தெரு | 297.00 | 6.83 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | 28 | பவானி நகர் 2வது தெரு | 360.00 | 8.28 |
| 6 | 28 | துலுக்காணம் தோட்டம் தெரு | 1080.00 | 24.84 |
| 7 | 28 | சுப்பரமணி தெரு | 1080.00 | 24.84 |
| 8 | 28 | சுப்பரமணி குறுக்கு தெரு | 450.00 | 10.35 |
| 9 | 28 | கோவிந்தராஜ் தெரு | 192.00 | 4.43 |
| 10 | 28 | சுந்தரமூர்த்தி தெரு | 480.00 | 11.04 |
| 11 | 28 | சதாசிவம் தெரு | 500.00 | 11.50 |
| 12 | 28 | சதாசிவம் குறுக்கு தெரு | 450.00 | 10.35 |
| 13 | 28 | சதாசிவம் 1வது குறுக்கு தெரு | 180.00 | 4.14 |
| 14 | 28 | சதாசிவம் 2வது குறுக்கு தெரு | 160.00 | 3.62 |
| 15 | 28 | மங்களம் தெரு | 310.00 | 7.05 |
| 16 | 28 | குமரன் நகர் 1வது சந்து | 300.00 | 6.90 |
| 17 | 28 | ராஜேஸ்வரி அம்மாள் தெரு குமரன் நகர் | 135.00 | 3.10 |
| 18 | 28 | முருகப்பன் தெரு குமரன் நகர் | 265.00 | 6.03 |
| 19 | 28 | துரைராஜ் தெரு குமரன் நகர் | 160.00 | 3.68 |
| 20 | 28 | மங்கம்மாள் தெரு குமரன் நகர் | 265.00 | 6.03 |
| 21 | 28 | பாலமுருகன் தெரு குமரன் நகர் | 720.00 | 16.56 |
| 22 | 28 | மீனாட்சி பாரதி கூட்டுறவு நகர் குமரன் நகர் | 1200.00 | 27.60 |
| 23 | 28 | துரையம்மாள் தெரு | 160.00 | 3.68 |
| 24 | 28 | கண்ணு தெரு | 275.00 | 6.32 |
| 25 | 28 | தயாளன் தெரு | 275.00 | 6.32 |
| 26 | 28 | குப்பம்மாள் தெரு | 275.00 | 6.32 |
| | | மொத்தம் = | **10623.00** | **244.05** |

மேற்கண்ட பணிகளை பொது மக்கள் நலன் கருதி பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால், ஏற்கனவே, சிப்பம் 1ன் பணியை செய்து வந்த ஒப்பந்ததாரரான திரு.K.துர்வாசலு அவர்களுக்கு சிப்பம் 1ல் செய்யப்பட்டுள்ள பணிகளில் சேமிப்பு தொகை உள்ளதால், அதே ஒப்பந்ததாரரான திரு. K.துர்வாசலு அவர்களை கொண்டு பணிகளை மேற்கொள்ளவும், அதே ஒப்பந்த சதவீதத்தின்படி 25 சதவீதத்திற்கு மிகாமலும், ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் ஒப்ப உடன்படிக்கையின்படி பணி மேற்கொள்ளவும், மேலும், இப்பணியினை Project Sanction Committee ஒப்புதலுடன் பணியினை செய்திடவும், நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண். 465/14 நாள் 19.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண். 481/14 நாள் 22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.11.ந.க.எண்இ1/7406 /2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19–12–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.601/2014 பொருள் எண்.11

**மண்டலம்–11 (வளசரவாக்கம்) –சென்னை பெருநகர வளர்ச்சித்திட்டம் (Chennai Megacity Develoment Mission)சென்னை மாநகர வில்லிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது– (Grid – III ) சிப்பம்–1ல் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். Gurumurthy Engineering Enterprises அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. பணி மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்றுவருகிறது–சேமிப்பு தொகையில் மறுவகைப்பாடு ஒப்புதல் அதே ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்க அனுமதி**

சென்னை மாநகராட்சி மற்றும் விரிவாக்கப்பட்டப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான, சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் என்றும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்அறிவித்துள்ளதற்கிணங்க இச்சிறப்பு திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், நடைபாதை மற்றும் தெருவிளக்குகள் ஆகிய அடிப்படை வசதிகள் மேம்படுத்துவதற்காக அரசு நிதி ஒதுக்கீடுசெய்துள்ளது.

இதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சி மண்டலம்–11ல் (வளசரவாக்கம்) 1 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை கோரப்பட்டது. இதனை தொடர்ந்து, இப்பணியினை சிப்பம்–2யை, மதிப்பீடு தொகை ரூ.18,38,87,039.41/– ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இப்பணிக்கு இரு ஒப்பங்கள்பெறப்பட்டது. இதில், குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள் Gurumurthy Engineering Enterprises நிறுவனம் ஒப்பப்புள்ளி மதிப்பீட்டைவிட (+)15.44% கூடுதலாக கொடுத்துள்ளதை தொடர்ந்து மேற்படி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு செய்யப்பட்டு மதிப்பீட்டைவிட கூடுதலாக (+)9.81% ஒப்பத்தொகை ரூ.20,19,18,882.00/–க்கு மன்ற தீர்மானம் எண்–28/2014ன்படி ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. மன்றதீர்மானத்தின் படி பணி ஆணை வழங்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரர் Gurumurthy Engineering Enterprises அவர்களுக்கு உட்கட்ட கட்டமைப்புகளுக்கு உரிய பணிகளும் அமைந்துள்ளன.

இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. இத்தருணத்தில் 39 சாலைகளில் பணிகள் முடிக்கும் தருவாயில், சில சாலைகளில் மழைநீர் வடிகால்வாய் பணி மேற்கொள்ள வேண்டிய இடங்களில் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை குழாய்கள் அமைந்து இருப்பதால் அப்பணிகள் கைவிட நேர்ந்தது. அவற்றின் மதிப்பீட்டு தொகை ரூ.260.00இலட்சம், சில சாலைகளில் சாலையின் இருபுறமும் ஒழுங்குப்படுத்துதல் மற்றும் நேர்கோட்டில் சீர் அகலம் கொண்ட சாலை அமைக்கும் போது ஏற்பட்ட அளவு குறைவினால், சாலைப் பணியினால் ஏற்பட்ட சேமிப்புதொகை ரூ.153/–இலட்சம், சில நடைபாதைகளில் சாலையின் அகலம் குறைவாக உள்ளதால் அப்பணிகள் கைவிட நேர்ந்தது. அவற்றின் தொகையாக ரூபாய்.121.00 /– இலட்சம் மற்றும் சில சாலைகளின் அகலம் குறைவாக உள்ளதால் பணி மேற்கொள்ள இயலாத புதைவடம் பணியின் (cable duct) சேமிப்பு தொகையாக 80.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 6,14,00,000.00 (ரூபாய் ஆறு கோடியே பதினான்கு இலட்சம் மட்டும்) ஆக உள்ளது.

மேலும் இச்சேமிப்பு தொகையில் பொது மக்கள் பயன்பாட்டு நலன் கருதி அருகாமையில் அமைந்துள்ள மழைநீர் கால்வாய் பணிகள் மற்றும் பிரசாலைப் பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பின்வருமாறு பட்டியல் இடப்பட்டு உள்ளது.

**அ. மழைநீர் வடிகால்வாய்அமைக்கும் பணி**

| வ.எண் | கோட்டம் எண் | புதியதாகமேற்கொள்ளப்படவிருக்கும் சாலைகளின் பெயர் | நீளம் மீ | தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1 | 147 | ஆலப்பாக்கம் பிரதானசாலை | 600 | 87,99,690.80 |
| 2 | 147 | அஷ்டலட்சுமிநகர் 5வது பிரதானசாலை | 250 | 36,99,648.60 |
| 3 | 147 | பாரதிநகர் 3வது தெரு | 560 | 82,10,389.40 |
| 4 | 147 | பெருமாள்கோயில்தெரு | 300 | 44,05,470.40 |
| | | மொத்தம் | | **2,51,15,199.20** |

**ஆ. சாலைஅமைக்கும் பணி**

| வ. எண் | கோட்டம் எண் | புதியதாகமேற்கொள்ளப்படவிருக்கும் சாலைகளின் பெயர் | நீளம் மீ | தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1 | 147 | அஷ்டலட்சுமிநகர் 6வது, 7வது, 8வது தெரு | 585 | 49,74,305.00 |
| 2 | 147 | அஷ்டலட்சுமிநகர் 9வது, 10வது, 11வது தெரு | 570 | 47,83,835.00 |
| 3 | 147 | நடேசன் நகர் 1வது மற்றும் 2வது தெரு | 170 | 9,06,575.00 |
| 4 | 147 | அஷ்டலட்சுமிநகர் 5வது பிரதானசாலை | 250 | 42,83,065.00 |
| 5 | 147 | அஷ்டலட்சுமிநகர் 18வது தெரு | 280 | 22,73,077.50 |
| 6 | 147 | அஷ்டலட்சுமிநகர் 5வது மற்றும் 22வது தெரு | 90 | 13,54,932.50 |
| 7 | 147 | பல்லவன் நகர் பிரதானசாலை (PTC Officer Colony) | 350 | 59,96,052.50 |
| 8 | 147 | கோவிந்தப்பன் நாய்க்கர் 1வது தெரு மற்றும் 2வது தெரு | 260 | 28,16,452.50 |
| | | மொத்தம் | | **2,73,88,295** |

மேற்கண்ட பணிகளை பொது மக்கள் நலன் கருதி பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால், ஏற்கனவே, சிப்பம்–1ன் பணியை செய்து வந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள் Gurumurthy Engineering Enterprises அவர்களுக்கு சிப்பம்–1ல் செய்யப்பட்டுள்ள பணிகளில் சேமிப்பு தொகை உள்ளதால், அதே ஒப்பந்ததாரரான திருவாளர்கள் Gurumurthy Engineering Enterprises அவர்களை கொண்டு பணிகளை மேற்கொள்ளவும், அதே ஒப்பந்த சதவீதத்தின்படி 25 சதவீதத்திற்கு மிகாமலும், ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் ஒப்ப உடன்படிக்கையின்படி பணி மேற்கொள்ளவும், மேலும், இப்பணியினை Project Sanction Committee ஒப்புதலுடன் பணியினை செய்திடவும் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.469/14 நாள்.19.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண்.485/14 நாள்.22.12.2014–ன்படிஇதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.11.ந.க.எண்.இ1/6824/2014**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19–12–2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.602/2014 பொருள் எண்.12

**<u>சென்னை மாநகராட்சி – மண்டலம்–11, 12 (வளசரவாக்கம், ஆலந்தூர்) – சென்னை பெருநகர வளர்ச்சித்திட்டம் ( Chennai Megacity Development Mission) சென்னை மாநகர விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – (Grid III) சிப்பம் –2ல் ஒப்பந்ததாரர். திருவாளர். SSS கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது – பணி மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது – சேமிப்பு தொகையில் மறுவகைப்பாடு ஒப்புதல் அதே ஒப்பந்தகாரருக்கு பணி ஆணை வழங்க அனுமதி வேண்டி.</u>**

சென்னை மாநகராட்சி மற்றும் விரிவாக்கப்பட்டப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான, சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ், முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதற்கிணங்க இச்சிறப்பு திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், நடைபாதைகள், மற்றும் தெருவிளக்குகள் ஆகிய அடிப்படை வசதிகள் மேம்படுத்துவதற்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சி, மண்டலம் 11ல் (வளசரவாக்கம்) 27 சாலைகள் மற்றும் மண்டலம் 12ல் (ஆலந்தூர்) 29 சாலைகள் ஒருங்கிணைத்து ஒரு சிப்பமாக ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனை தொடர்ந்து இப்பணியினை சிப்பம் –2ல், கண்டுள்ளபடி மதிப்பீடு தொகை ரூ. 19,58,67,228.90/– ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இப்பணிக்கு இரு ஒப்பங்கள் பெறப்பட்டது. இதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.SSS கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் கொடுத்துள்ள ஒப்ந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (+) 12.32% கூடுதலாக கொடுத்துள்ளதை தொடர்ந்து மேற்படி நிறுவனத்திடம் விலை குறைப்பு செய்யப்பட்டு மதிப்பீட்டை விட கூடுதலாக (+) 10 % ஒப்பத்தொகை ரூ.19,18,19,783.86க்கு மன்ற தீர்மானம் எண்.28/2014ன்படி ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இத்தருணத்தில் சில இடங்களில் சாலையின் அகலம் குறைவாக இருந்ததால், தார்ச் சாலை பணி மற்றும் நடைபாதை பணி, மழைநீர் வடிகால்வாய் பணி மேற்கொள்ள இயலவில்லை. ஒப்ப அளவுக்கு அளவீடு செய்ததில் கீழ்கண்ட பணிகள் சேமிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

| வ.எண் | பணியின் விவரம் | சேமிப்பு தொகை |
|---|---|---|
| 1 | சாலைப் பணி | 61,77,575.00 |
| 2 | மழைநீர் வடிகால்வாய் பணி | 65,01,335.00 |
| 3 | நடைபாதை பணி | 69,89,061.00 |
| 4 | கேபிள் வடம் பதிக்கும் பணி | 5,71,337.00 |
| 5 | தெருவிளக்கு பணி | 8,67,167.00 |
| | **மொத்தம்** | **2,11,06,475.00** |

இந்நிலையில் பொதுமக்கள் வேண்டுதலின்படி, அவசர அவசியம் கருதியும் போக்குவரத்தின் நலன் கருதியும் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்– III சிப்பம்–2ல் சேமிப்பு தொகையிலிருந்து வார்டு–143, 144, 146 மற்றும் 167ல் புதிதாக சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள் அமைக்க எடுக்கப்பட்ட சாலைகள், ஏற்கனவே சிப்பம்–2ல் எடுக்கப்பட்ட சாலைகள் அருகாமையில் உள்ளது. அப்பணிக்கு அதே சி.பி.ஆர். (CBR) எண் உள்ளதால், முந்தைய வடிவமைப்பு இப்பணிகளுக்கும் பொருந்தும். எனவே, அதே ஒப்பந்ததாரர் மூலம் இம்மாறுப்பாட்டினால் ஏற்பட்டுள்ள பணிகளை செய்யலாமென கருதப்படுகிறது. இந்நிலையில் ஒப்பந்ததாரர் திருவாளர். SSS கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் சிப்பம் 2ல் அளித்துள்ள ஒப்ப சதவீதத்தின் படி பணிகளை மேற்கொள்ள இசைவு கடிதம் அளித்துள்ளார்.

மேற்படி ஒப்பங்கள் இப்பணி இனங்களின் மொத்த அளவுகளுக்காக தயார் செய்யப்பட்டு ஒப்பம் கோரப்பட்டுள்ளதால் முழுமையாக இப்பணியினை மேற்கொண்டு முடிக்க வேண்டியது அவசியமாகிறது.

அ. <u>சாலைப்பணிகள்</u>

| வ. எ | மண்டலம் எண். | கோட்டம் எண் | சாலையின் பெயர் | பரப்பளவு (ச.மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|
| 1 | 11 | 143 | எஸ் & பி கார்டன் 5வது குறுக்கு தெரு மற்றும் சர்வீஸ் ரோடு இணைப்பு சாலை | 2800 | 22,08,547.00 |
| 2 | 11 | 144 | வி.ஜி.பி அமுதா நகர் 3வது தெரு | 900 | 12,33,841.00 |
| | | | **மொத்தம்** | **3700 மீ** | **34,42,388.00** |

ஆ. <u>மழைநீர் வடிகால்வாய்பணி:</u>

| வ. எண் | மண்டலம் எண். | கோட்டம் எண் | சாலையின் பெயர் | நீளம் (மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|
| 1 | 11 | 143 | எம்.சி.கே. தெரு | 115 | 91,62,583.00 |
| 2 | 11 | 143 | எஸ் &பி கார்டன் 8வது குறுக்கு தெரு | 100 | |
| 3 | 11 | 143 | எஸ் &பி கார்டன் 1வது பிரதான சாலை (பகுதி பிளாட் எண் 41 முதல் பிளாட் எண் 81 வரை) | 115 | |
| 4 | 11 | 143 | எஸ்&பி கார்டன் 5வது குறுக்கு தெருவில் 1வது பிரதான சாலை முதல் சர்வீஸ் ரோடு வரை | 270 | |
| 5 | 12 | 167 | வோல்டாஸ் காலனி 50 அடி ரோடு | 735 | 82,25,934.00 |
| | | | **மொத்தம்** | **1335 மீ** | **1,73,88,517.00** |

<u>உத்தேசிக்கப்பட்ட மொத்த செலவு:</u>

சாலை அமைக்கும் பணி : 34,42,388.00
மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி : <u>1,73,88,517.00</u>
**மொத்தம்** : **<u>2,08,30,905.00</u>**

மேற்கண்ட பணிகளை பொது மக்கள் நலன் கருதி பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால், ஏற்கனவே, சிப்பம் 2ன் பணியை செய்து வந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். SSS கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு சிப்பம் 2ல் செய்யப்பட்டுள்ள பணிகளில் சேமிப்பு தொகை உள்ளதால், அதே ஒப்பந்ததாரரான திருவாளர்கள். SSS கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களை கொண்டு பணிகளை மேற்கொள்ளவும், அதே ஒப்பந்த சதவீதத்தின்படி 25 சதவீதத்திற்கு மிகாமலும், ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் ஒப்ப உடன்படிக்கையின்படி பணி மேற்கொள்ளவும், மேலும், இப்பணியினை Project Sanction Committee ஒப்புதலுடன் பணியினை செய்திடவும், நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது .

“19.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண். 468/14 நாள் 19.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண். 484/14 நாள் 22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.அ.14.ந.க.எண்.இ1/7545/2013</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19–12–2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.603/2014 **பொருள் எண்.13**

**<u>சென்னை மாநகராட்சி – மண்டலம் – 14 (பெருங்குடி) – சென்னை பெருநகர வளர்ச்சித்திட்டம் (Chennai Megacity Development Mission) சென்னை மாநகர விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – (Grid III ) சிப்பம் –1ல் ஒப்பந்ததாரா். திருவாளா்.DSR SONS INDIA ENGINEERS PVT LTDஅவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. பணி மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. சேமிப்பு தொகையில் மறுவகைப்பாடு ஒப்புதல் அதே ஒப்பந்தகாரருக்கு பணி ஆணை வழங்க அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி மற்றும் விரிவாக்கப்பட்டப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான, சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ், முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சா் அவா்கள் அறிவித்துள்ளதற்கிணங்க இச்சிறப்பு திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீா் வடிகால்வாய்கள், நடைபாதைகள், மற்றும் தெருவிளக்குகள் ஆகிய அடிப்படை வசதிகள் மேம்படுத்துவதற்காக அரசாணையின்படி அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சி மண்டலம் – 14 (பெருங்குடி)ல் 5 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனை தொடா்ந்து, இப்பணியினை சிப்பம்–1ல், மதிப்பீடு தொகை ரூ. 19,54,81,742.67/– ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளா். DSR SONS INDIA ENGINEERS PVT LTDஅவா்கள், கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (+) 14.45% கூடுதலாக கொடுத்துள்ளதை தொடா்ந்து மேற்படி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு செய்யப்பட்டு மதிப்பீட்டை விட கூடுதலாக (+) 8.60% ஒப்பத்தொகை ரூ. 21,22,93,172.54/–க்கு மன்ற தீர்மாணம் எண்.29/2014 ன்படி ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இத்தருணத்தில் சில சாலைகளில் சாலையின் இருபுறமும் ஒழுங்குப்படுத்துதல் ( Alignment) மற்றும் நேர் கோட்டில் சீர் அகலம் கொண்ட சாலை அமைக்கும் போது ஏற்பட்ட அளவு குறைவு, மற்றும் மழைநீா் வடிக்கால்வாய் அமைப்பதற்கு தேவையான சாலை அகலம் மற்றும் நிலமட்டம் இல்லாத காரணத்தினாலும், மழைநீா் வடிக்கால்வாய் அமைவதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு இல்லாததாலும், சேமிப்புத் தொகையான ரூ. 2,68,08,414/– ( ரூபாய் இரண்டு கோடியே அறுபத்தி எட்டு இலட்சத்து எட்டாயிரத்து நானூற்று பதினான்கு மட்டும்) உள்ளது.

இந்நிலையில் பொதுமக்கள், வேண்டுதலின்படி, அவசியம் அவசரம் கருதியும் போக்குவரத்தின் நலன் கருதியும் சென்னை பெருநகர வளா்ச்சித் திட்டம்–III சேமிப்பு தொகையிலிருந்து புதிதாக சாலைகள் அமைக்க எடுக்கப்பட்ட சாலைகள், ஏற்கனவே சிப்பம்–1ல் எடுக்கப்பட்ட சாலைகள் அருகாமையில் உள்ளது. அப்பணிக்கு அதே சி.பி.ஆர். (CBR) எண் உள்ளதால், முந்தைய வடிவமைப்பு இப்பணிகளுக்கும் பொருந்தும். மேலும் புதிதாக எடுக்கப்பட்டுள்ள சாலையின் பரப்பளவு ஒப்பீடு செய்யப்பட்டதில், அதன் பரப்பளவு 14240 ச.மீ ஆக உள்ளது. எனவே, அதே ஒப்பந்ததாரா் மூலம் இம்மாறுப்பாட்டினால் ஏற்பட்டுள்ள பணிகளை செய்யலாமென கருதப்படுகிறது. இந்நிலையில் ஒப்பந்ததாரா் திருவாளா். DSR SONS INDIA ENGINEERS PVT LTD அவா்களின் சிப்பம் –1ல் அளித்துள்ள ஒப்ப சதவீதத்தின் படி பணிகளை மேற்கொள்ள இசைவு கடிதம் அளித்துள்ளாா்.

மேற்படி ஒப்பங்கள் இப்பணி இனங்களின் மொத்த அளவுகளுக்காக தயாா் செய்யப்பட்டு ஒப்பம் கோரப்பட்டுள்ளதால் முழுமையாக இப்பணி மேற்கொண்டு முடிக்க வேண்டியது அவசியமாகிறது.

கீழ்கண்ட சாலைகளில் சேமிப்பு தொகையில் பணிகளை மேற்கொள்வதற்கு பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண். | கோட்ட எண் | புதியதாக மேற்கொள்ளப்படவிருக்கும் சாலைகளின் பெயர் | பரப்பளவு ச.மீ | தொகை லட்சத்தில் ரூபாய் |
|---|---|---|---|---|
| 1 | 183 | பே வாட்ச் சாலை | 2280.00 | 41.42 |
| 2 | 183 | சங்சம் காலனி விரிவு | 900.00 | 16.40 |
| 3 | 183 | சுப்ரமனியம் சாலை | 1320.00 | 24.03 |
| 4 | 183 | காவேரி நகர் 1வது தெரு | 480.00 | 8.79 |
| 5 | 183 | சீனிவாசா நகர் மெயின் ரோடு | 1800.00 | 32.69 |
| 6 | 183 | நஜ்மா அவென்யூ | 1080.00 | 19.65 |
| 7 | 185 | கோவிந்தன் நகர் 1வது மெயின் ரோடு | 1380.00 | 29.22 |
| 8 | 185 | வி.ஜி.பி 1வது மெயின் ரோடு | 2550.00 | 49.58 |
| 9 | 185 | வி.ஜி.பி 4வது மெயின் ரோடு | 2450.00 | 47.62 |
| | | மொத்தம் | 14240.00 | 269.39 |

மேற்கண்ட பணிகளை பொது மக்கள் நலன் கருதி பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால், ஏற்கனவே, சிப்பம் –1ன் பணியை செய்து வந்த ஒப்பந்ததாரரான திருவாளர். DSR SONS INDIA ENGINEERS PVT LTDஅவ அவர்களுக்கு சிப்பம் –1ல் செய்யப்பட்டுள்ள பணிகளில் சேமிப்பு தொகை உள்ளதால், அதே ஒப்பந்ததாரரான திருவாளர். DSR SONS INDIA ENGINEERS PVT LTD அவர்களை கொண்டு பணிகளை மேற்கொள்ளவும், அதே ஒப்பந்த சதவீதத்தின்படி 25 சதவீதத்திற்கு மிகாமலும், ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் ஒப்ப உடன்படிக்கையின்படி பணி மேற்கொள்ளவும், மேலும், இப்பணியினை Project Sanction Committee ஒப்புதலுடன் பணியினை செய்திடவும், ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண். 467/14 நாள் 19.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண். 483/14 நாள் 22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.14.ந.க.எண்.இ1/7549/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19–12–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.604/2014 **பொருள் எண்.14**

**சென்னை மாநகராட்சி – மண்டலம் – 14 (பெருங்குடி) – சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் (Chennai Megacity Development Mission) சென்னை மாநகர விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – (Grid III) சிப்பம் –5ல் ஒப்பந்ததாரர். திருவாளர்.எஸ்.டி.சி.இன்ஜினியரிங் பிராஜக்ட்ஸ் (பி) லிட் அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. பணி மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. சேமிப்பு தொகையில் மறுவகைப்பாடு ஒப்புதல் அதே ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்க அனுமதி**

சென்னை மாநகராட்சி மற்றும் விரிவாக்கப்பட்டப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான, சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ், முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதற்கிணங்க இச்சிறப்பு திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், நடைபாதைகள், மற்றும் தெருவிளக்குகள் ஆகிய அடிப்படை வசதிகள் மேம்படுத்துவதற்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சி மண்டலம் – 14 (பெருங்குடி)ல் 5 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனை தொடர்ந்து, இப்பணியினை சிப்பம் – 5ல், மதிப்பீடு தொகை ரூ. 20,15,78,799.16/– ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. எஸ்.டி.சி.இன்ஜினியரிங் பிராஜக்ட்ஸ் (பி) லிட் அவர்கள், கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (+) 21.07% கூடுதலாக கொடுத்துள்ளதை தொடர்ந்து மேற்படி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு செய்யப்பட்டு மதிப்பீட்டை விட கூடுதலாக (+) 5.90% ஒப்பத்தொகை ரூ. 21,34,72,635.64/–க்கு மன்ற தீர்மாணம் எண்.31/2014 ன்படி ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இத்தருணத்தில் சில சாலைகளில் சாலையின் இருபுறமும் ஒழுங்குப்படுத்துதல் ( Alignment) மற்றும் நேர் கோட்டில் சீர் அகலம் கொண்ட சாலை அமைக்கும் போது ஏற்பட்ட அளவு குறைவு, மற்றும் சாலையின் அகலம் மிகவும் குறைவாக உள்ளதால் Ducts அமைக்கும் பணியை மேற்கொள்ள இயலவில்லை. இதனால் சேமிப்பு தொகையாக ரூ. 8,45,68,271/– (ரூபாய் எட்டு கோடியே நாற்பத்தைந்து இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து இருநூற்று ஏழுபத்தி ஒன்று மட்டும்) உள்ளது.

இந்நிலையில் பொதுமக்கள், வேண்டுதலின்படி, அவசியம் அவசரம் கருதியும் போக்குவரத்தின் நலன் கருதியும் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்–III சேமிப்பு தொகையிலிருந்து புதிதாக சாலைகள் அமைக்க எடுக்கப்பட்ட சாலைகள், ஏற்கனவே சிப்பம்–5ல் எடுக்கப்பட்ட சாலைகள் அருகாமையில் உள்ளது. அப்பணிக்கு அதே சி.பி.ஆர். (CBR) எண் உள்ளதால், முந்தைய வடிவமைப்பு இப்பணிகளுக்கும் பொருந்தும். மேலும் புதிதாக எடுக்கப்பட்டுள்ள சாலையின் பரப்பளவு ஒப்பீடு செய்யப்பட்டதில், அதன் பரப்பளவு 40204 ச.மீ ஆக உள்ளது. எனவே, அதே ஒப்பந்ததாரர் மூலம் இம்மாறுப்பாட்டினால் ஏற்பட்டுள்ள பணிகளை செய்யலாமென கருதப்படுகிறது. இந்நிலையில் ஒப்பந்ததாரர் திருவாளர். எஸ்.டி.சி.இன்ஜினியரிங் பிராஜக்ட்ஸ் (பி) லிட் அவர்களின் சிப்பம் –5ல் அளித்துள்ள ஒப்ப சதவீதத்தின் படி பணிகளை மேற்கொள்ள இசைவு கடிதம் அளித்துள்ளார்.

மேற்படி ஒப்பங்கள் இப்பணி இனங்களின் மொத்த அளவுகளுக்காக தயார் செய்யப்பட்டு ஒப்பம் கோரப்பட்டுள்ளதால் முழுமையாக இப்பணி மேற்கொண்டு முடிக்க வேண்டியது அவசியமாகிறது.

கீழ்கண்ட சாலைகளில் சேமிப்பு தொகையில் பணிகளை மேற்கொள்வதற்கு பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண் | கோட்ட எண் | புதியதாக மேற்கொள்ளப்படவிருக்கும் சாலைகளின் பெயர் | பரப்பளவு ச.மீ | தொகை லட்சத்தில் ரூபாய் |
|---|---|---|---|---|
| 1 | 169 | ஏ.ஜீ.எஸ் காலனி 1வது தெரு | 605.00 | 12.07 |
| 2 | 169 | ஏ.ஜீ.எஸ் காலனி 2வது தெரு | 605.00 | 12.07 |
| 3 | 169 | ஏ.ஜீ.எஸ் காலனி 3வது தெரு | 687.5 | 13.72 |
| 4 | 169 | ஏ.ஜீ.எஸ் காலனி 1வது குறுக்கு தெரு | 165.00 | 3.30 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | 169 | ஏ.ஜீ.எஸ் காலனி 2வது குறுக்கு தெரு | 165.00 | 21.40 |
| 6 | 169 | ராமசாமி தெரு | 1072.5 | 31.82 |
| 7 | 169 | ராம் நகர் 4வது தெரு | 1595.00 | 31.82 |
| 8 | 169 | ராம் நகர் 5வது தெரு | 1595.00 | 31.82 |
| 9 | 169 | ராம் நகர் 6வது தெரு | 1595.00 | 31.82 |
| 10 | 169 | ராம் நகர் 7வது தெரு | 2062.50 | 41.15 |
| 11 | 169 | ராம் நகர் 8வது தெரு | 2062.50 | 41.15 |
| 12 | 169 | ராம் நகர் 9வது தெரு | 2189.00 | 43.67 |
| 13 | 169 | ராம் நகர் 10வது தெரு | 1980.00 | 39.50 |
| 14 | 169 | ராம் நகர் 11வது தெரு | 2024.00 | 40.38 |
| 15 | 169 | ராம் நகர் 12வது தெரு | 1182.5 | 23.59 |
| 16 | 169 | பாகிரதி நகர் வள்ளல் அதியமான் தெரு | 1815.00 | 36.21 |
| 17 | 169 | பாகிரதி நகர் வள்ளல் குமரன் தெரு | 1842.50 | 36.76 |
| 18 | 169 | பாகிரதி நகர் வள்ளல் பாரி தெரு | 1320.00 | 26.34 |
| 19 | 169 | பாகிரதி நகர் பத்மாவதி தெரு | 1402.5 | 27.98 |
| 20 | 169 | பாகிரதி நகர் பத்மாவதி நகர் நக்கிரன் தெரு | 1292.5 | 25.79 |
| 21 | 169 | பாகிரதி நகர் பத்மாவதி நகர் பாலாஜி தெரு | 1292.5 | 25.79 |
| 22 | 169 | பாகிரதி நகர் பத்மாவதி நகர் திருமுல்லை தெரு | 330.00 | 6.59 |
| 23 | 169 | சீனிவாச நகர் திருஞானசம்பந்தர் தெரு | 1017.5 | 20.30 |
| 24 | 169 | சீனிவாச நகர் கவிமனி தெரு | 1595.00 | 31.82 |
| 25 | 188 | பெரியார் நகர் மெயின் ரோடு | 1800.00 | 32.00 |
| 26 | 188 | பெரியார் நகர் 1வது தெரு | 720.00 | 12.80 |
| 27 | 188 | பெரியார் நகர் 2வது தெரு | 621.00 | 11.00 |
| 28 | 188 | நாராயணபுரம் ஏரிகரை சாலை | 4590.00 | 81.70 |
| 29 | 168 | பாலாஜி நகர் 1வது குறுக்கு தெரு | 980.00 | 17.40 |
| | | மொத்தம் | 40204.00 | 811.76 |

மேற்கண்ட பணிகளை பொது மக்கள் நலன் கருதி பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால், ஏற்கனவே, சிப்பம்–5ன் பணியை செய்து வந்த ஒப்பந்ததாரரான திருவாளர். எஸ்.டி.சி.இன்ஜினியரிங் பிராஜக்ட்ஸ் (பி) லிட் அவர்களுக்கு சிப்பம்– 5ல் செய்யப்பட்டுள்ள பணிகளில் சேமிப்பு தொகை உள்ளதால், அதே ஒப்பந்ததாரரான திருவாளர். எஸ்.டி.சி.இன்ஜினியரிங் பிராஜக்ட்ஸ் (பி) லிட் அவர்களை கொண்டு பணிகளை மேற்கொள்ளவும், அதே ஒப்பந்த சதவீதத்தின்படி 25 சதவீதத்திற்கு மிகாமலும், ஏற்கனவே உள்ள ஒப்பந்தாரரின் ஒப்ப உடன்படிக்கையின்படி பணி மேற்கொள்ளவும், மேலும், இப்பணியினை Project Sanction Committee ஒப்புதலுடன் பணியினை செய்திடவும், ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண். 466/14 நாள் 19.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண். 482/14 நாள் 22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**இ.டி.பி.சி.எண்.சி1/2866/2014**

**முதன்மைச் செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 15–12–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.605/2014 **பொருள் எண்.15**

**இ.டி.பி செல் – பதிவறையில் உள்ள முக்கிய கோப்புக்கள் மற்றும் பதிவேடுகள் ஸ்கேனிங் செய்ய மின்னணு ஒப்பங்கள் கோர அனுமதி**

சென்னை மாநகராட்சி பொதுத் துறை பதிவறையில் அனைத்து துறைச் சார்ந்த கோப்புகள் மற்றும் பதிவேடுகள் பாதுகாக்கப்பட்டு வருவதாவும், இவைகளை பாதுகாக்கும் வண்ணம் ஸ்கேனிங் செய்வதற்கு பதிவறையில் ஆய்வு மேற்கொண்டதில் தோரயமாக முக்கிய கோப்புகள் மற்றும் பிறப்பு/இறப்பு பதிவேடுகளின் பக்க எண்ணிக்கை மற்றும் அனைத்து ஒப்புகை பதிவேடு / மன்றத் தீர்மான புத்தகம் / அரசிதழ் ஆகியவற்றின் மொத்த பக்கங்களின் எண்ணிக்கை 1,02,26,442யாக உள்ளதென அறியப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டு அதற்கான பணியினை இடிபி செல் மூலம் மேற்கொள்ள துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) அவர்களின் ஆணை பெறப்பட்டது. பொதுத்துறையில் உள்ள அனைத்து ஆவணங்கள் ஸ்கேனிங் செய்வதற்காக சந்தைவிலை அடிப்படையில் தோராயமாக பணி மதிப்பீடு ரூ.1,04,00,000/– (ரூபாய் ஒரு கோடியே நான்கு லட்சம் மட்டும்) (வரிகள் உட்பட) செலவாகும் என கருதப்படுகிறது.

எனவே,

1. சென்னை மாநகராட்சி பொதுத்துறை பதிவறையில் உள்ள அனைத்து துறையைச் சார்ந்த கோப்புகள் மற்றும் பதிவேடுகள் பக்க எண்ணிக்கை 1,02,26442–ஐ ஸ்கேனிங் செய்யவும், அதற்கான தோராய மதிப்பீடு ரூ.1,04,00,000/– (ரூபாய் ஒரு கோடியே நான்கு லட்சம் மட்டும்) (வரிகள் உட்பட)க்கு நிர்வாக அனுமதியும்,
2. 1,02,26442 பக்கங்களை ஸ்கேனிங் செய்ய மற்றும் மின்னணு ஒப்பங்கள் கோரவும்,
3. இடிபி செல் 2014–2015 நிதி கணக்கில் செலவு செய்யவும், மற்றும் கூடுதல் நிதியினை நிதி மேலாண்மை குழுமம் ஒதுக்கீடு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“19.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.461/14, நாள்.19.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு(பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண்.473/14 நாள்.22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>வ.து.ந.க.எண்.ஜி1/6588/2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.11.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.606/2014 **பொருள் எண்.16**

**<u>வருவாய் துறை–சொத்து வரி விதிப்பு – பொது மக்கள் தாமாகவே சொத்துவரி மதிப்பு செய்வது சம்மந்தமாக – விவரங்களை பெறும் பொருட்டு BBMP – Bangalore செல்வதற்காக வருவாய் துறையைச் சார்ந்த அலுவலர்கள் அனுப்பப்பட்டதற்கு– மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.</u>**

05.08.2014 நாளிட்ட முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி சொத்துவரி சுய மதிப்பீடு (Property tax Self assessment for new Property) மறு மதிப்பீடு, GIS mapping, Payment gateway, தொழில் உரிமம் , தொழில் வரி, விளம்பர வரி ஆகியவைகளைக் குறித்த விவரங்களை தெரிந்து கொள்வதற்காக இரண்டு நாட்கள் (07.08.2014 மற்றும் 08.08.2014) வருவாய் துறையைச் சார்ந்த பின்வரும் அலுவலர்கள் முறையே,

1. திரு.எம்.கே. திவாகர், வருவாய் அலுவலர்
2. திரு.பி. துரைராஜ், உ.வ.அ.
3. திரு. பி. திருநாவுக்கரசு, உ.வ.அ.

BBMP – Bangalore செல்வதற்காக மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு அனுமதி வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மேற்கண்ட செயல்முறை ஆணையின்படி அனுமதிக்கப்பட்ட அலுவலர்கள் வகுப்பு 1–ஏ மற்றும் வகுப்பு–2யைச் சார்ந்த அலுவலர்கள் என்பதால், அவர்கள் பெங்களூரு செல்வதற்கு நிலைக்குழு வரிவிதிப்பு மற்றும் நிதி மூலமாக மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு செயல்முறை ஆணை வழங்கப்பட்டது.

எனவே, மேற்கண்ட அலுவலர்கள் வகுப்பு–1ஏ மற்றும் வகுப்பு–2யைச் சார்ந்த அலுவலர்கள் என்பதால் BBMP பெங்களூரு சென்று வர அனுமதிக்கப்பட்டமைக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண்.476/14 நாள்.22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்4/4067/2014.**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 12.12.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.607/2014 **பொருள் எண்.17**

**பணிதுறப்பு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறை, டாக்டர்.திருமதி.பிரம்ம வித்யா, மருத்துவ அலுவலர், **10.04.2013** முதல் முகப்பேர் (கிழக்கு) நலவாழ்வு மையம், அம்பத்தூர் மண்டலம்–7ல் பணிபுரிந்து வந்தார், தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் பணிவரண்முறைப் படுத்தப்படவில்லை. மேலும், தகுதிகாண் பருவம் முடித்தவராகவும் அறிவிக்கப்படவில்லை. தனியர் இந்திய ஆட்சி பணியாளர் தேர்வில், U.P.S.C – Civil Service examination கலந்து கொண்டு தேர்ச்சி பெற்றுள்ளார். நேர்முகத் தேர்வு (ம) தகுதி தேர்வில் கலந்து கொண்டு இந்திய ஆட்சி பணியாளராக பணிபுரிவதற்கு தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளார், வரிசை எண்.**498**, Roll No.520061 ஆகும். **01.11.2014** முதல் பணியில் சேர்வதற்கான ஆணை பெறப்பட்டதைத் தொடர்ந்து, தனியர் சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலராக பணிபுரிந்துவந்த மருத்துவ அலுவலர் பதவியினை, பணிதுறப்பு செய்வதாகவும் சென்னை மாநகராட்சி மருத்துவ அலுவலர் பணியிலிருந்து தன்னை விடுவித்து அனுப்பும்படி கோரியிருந்தார்.

தனியர் வகுப்பு–2ஐ சார்ந்த அலுவலர் என்பதால் இவரது பணிதுறப்பிற்கு மன்றத்தின் அனுமதி பெற வேண்டும். எனினும், அவசர அவசியம் கருதி இவரை **31.10.2014** அன்று பிற்பகல் முதல் பணியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்பதால் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்கு உட்பட்டு, தனியரது பணிதுறப்பை ஏற்று, **31.10.2014** நாளிட்ட செயல்முறை ஆணையின் மூலமாக பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

எனவே, டாக்டர்.திருமதி.பிரம்ம வித்யா, மருத்துவ அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை அவர்களின் பணிதுறப்பினை ஏற்று, மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு **31.10.2014** அன்று பிற்பகல் முதல் மருத்துவ அலுவலர் பணியிலிருந்து விடுவித்ததற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ3/48818/2014</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 08.12.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.608/2014 **பொருள் எண்.18**

**<u>பணியமைப்பு</u>**

அரசாணை (வாலாயம்) எண்.4194, பொது (சிறப்பு–அ) துறை, நாள்: 15.11.2014ன்படி, திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ், இ.ஆ.ப., சார்–ஆட்சியர், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம் அவர்கள், சென்னை மாநகராட்சியில், துணை ஆணையர் (கல்வி)ஆக அயற்பணியில் 24.11.2014 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
பதிவு மற்றும் தகவலுக்காக வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ3/47452/2014</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 08.12.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.609/2014 **பொருள் எண்.19**

**<u>பணியமைப்பு</u>**

அரசாணை (வாலாயம்) எண்.197, தமிழ் வளர்ச்சி (ம) செய்தி (நிர்வாகம்.1)த்துறை, நாள்:12.11.2014ன்படி, திரு.நி.சிவகுரு, மக்கள் தொடர்பு அலுவலர், வரவேற்பு பிரிவு, தலைமையிடம் அவர்கள், சென்னை மாநகராட்சியில், மக்கள் தொடர்பு அலுவலர் ஆக அயற்பணியில் 13.11.2014 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
பதிவு மற்றும் தகவலுக்காக வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”

*******

**<u>பொ.து.ந.க.எண். ஈ3 / 51055 / 2014</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.12.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.610/2014 **பொருள் எண்.20**

**<u>பணியமைப்பு</u>**

அரசாணை (வாலாயம்) எண்.4194, பொது (சிறப்பு–அ) துறை, நாள்: 15.11.2014ன்படி, திரு.க.சு.கந்தசாமி,இ.ஆ.ப., இணை ஆணையர், நில நிர்வாகம், சென்னை அவர்கள், சென்னை மாநகராட்சியில், துணை ஆணையர் (பணிகள்) ஆக அயற்பணியில் 08.12.2014 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்துமன்றத்தின்
பதிவு மற்றும் தகவலுக்காக வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"
*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/52779 /2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.12.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.611/2014 **பொருள் எண்.21**

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

திரு.எ.எஸ்.பிரேமகுமார், உதவி கோட்ட மின் பொறியாளர், மண்டலம்–12, அவர்கள் வயது முதிர்வு காரணமாக வருகின்ற 31.12.2014பிற்பகல் முதல் ஓய்வு பெறவுள்ளார்.

திரு.எ.எஸ்.பிரேமகுமார், அவர்கள் சென்னை மாநகராட்சியில் உதவி மேற்பார்வையாளராக 25.05.1985 அன்று பணியில் சேர்ந்துள்ளார். தற்போது உதவி கோட்ட மின் பொறியாளாராக 19.12.2011 முதல் மண்டலம்–12ல் பணிபுரிந்து வருகிறார்.

மேலும் தனியர் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த கீழ்க்குறிப்பிட்ட அனைத்து துறை/மண்டலங்களிலிருந்து தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை மற்றும் முன்பணங்கள்/அலுவலக முன்பணங்கள் நேர்செய்யப்படாத விவரங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | பதவி | மண்டலம்/ துறை | பணியாற்றிய காலம் | |
|---|---|---|---|---|
| | | | முதல் | வரை |
| 01 | உதவி மேற்பார்வையாளர் | மின்துறை | 25.05.1985 | 08.04.1987 |
| 02 | உதவி மேற்பார்வையாளர் | மின்துறை | 09.04.1987 | 09.05.1994 |
| 03 | உதவி மேற்பார்வையாளர் | மண்டலம்–09 | 10.05.1994 | 22.06.1995 |
| 04 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–09 | 23.06.1995 | 14.07.1999 |
| 05 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–05 | 15.07.1999 | 21.12.1999 |
| 06 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–04 | 22.12.1999 | 19.12.2011 |
| 07 | உதவி கோட்ட மின் பொறியாளர் | மண்டலம்–12 | 19.12.2011 | இந்நாள்வரை |

திரு.எ.எஸ்.பிரேமகுமார், உதவி கோட்ட மின் பொறியாளர் அவர்கள் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணைகன் ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது. தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளோ அல்லது விசாரணைகளோ நிலுவை ஏதும் இல்லை எனத் தெரிவித்து கொள்ளப்படுகிறது. தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகை ஏதும் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

தனியர் வகித்துவரும் உதவி கோட்ட மின் பொறியாளர் பதவி வகுப்பு–IIன் கீழ்வருவதால் இப்பதவியில் உள்ளவர்களை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் மன்றம் பெற்றுள்ளது.

எனவே, திரு.எ.எஸ்.பிரேமகுமார், உதவி கோட்ட மின் பொறியாளர், மண்டலம்–12, அவர்கள் மீது தணிக்கை தடைகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவற்றிற்கு தனியரை முழுபொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி 31.12.2014 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/21762/2013**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.12.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.612/2014 **பொருள் எண்.22**

**சென்னை மாநகராட்சியில்ஒருமுதுநிலை சட்ட அலுவலர் பதவியும், சுகாதார துறைக்கு ஒரு சுகாதார கல்வி அலுவலர் பதவியும் தோற்றுவிக்கவும் பணிவிதிகளை உருவாக்கவும், அரசாணை பெறுவதற்கும், இயந்திர பொறியியல் துறையில் 16 கம்போசிடர் பணியிடங்களையும், அரங்கத்துறையில் ஒரு பணியிடத்தை அரசுக்கு ஒப்பளிப்பு செய்யவும் அனுமதி**

சென்னை மாநகராட்சி சட்ட குழுமத்திற்கு ஒரு முதுநிலை சட்ட அலுவலர் பதவியும், சுகாதார துறைக்கு ஒரு சுகாதார கல்வி அலுவலர் பதவியும் தோற்றுவிக்க வேண்டிய அவசியம் கருதி இப்பணியிடங்களை தோற்றுவிக்கவும் மற்றும் பணிவிதிகளை உருவாக்கவும் அரசாணை பெறுவதற்கு மன்ற தீர்மானம் எண்.500/2013, நாள்:26.07.2013, 112/2014, நாள்:19.02.2014 மற்றும் 294/2013, நாள்:26.04.2013ல் அனுமதி பெறப்பட்டது.

இதன்தொடர்ச்சியாக சென்னை மாநகராட்சிக்கு தோற்றுவிக்கப்படவுள்ள ஒரு முதுநிலை சட்ட அலுவலர் பதவி மற்றும் ஒரு சுகாதார கல்வி அலுவலர் பதவி ஆகிய பணியிடங்களுக்கு பதிலாக சென்னை மாநகராட்சியில் இயந்திர பொறியியல் துறையில் Compositor என்ற பதவியில் ஒப்பளிக்கப்பட்ட 17 பணியிடங்களில், தற்போது காலியாக உள்ள 16 பணியிடங்கள் தேவையில்லாததால் , இதிலிருந்து 7 பணியிடங்களை அரசுக்கு ஒப்பளிப்பு செய்வதாக தெரிவித்து அரசுக்கு செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டது.

எனினும் 19.11.2014 நாளிட்ட அரசு கடிதத்தில் சென்னை மாநகராட்சியில் புதியதாக தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள ஒரு முதுநிலை சட்ட அலுவலர் மற்றும் ஒரு சுகாதார கல்வி அலுவலர் பணியிடங்களை பதவி உயர்வு மற்றும் அயற்பணி மூலம் மட்டுமே நிரப்ப வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு சென்னை மாநகராட்சி இயந்திர பொறியியல் துறையில் தற்பொழுது காலியாகவுள்ள 16 Compositor பணியிடங்களையும் ஒப்புவிப்பு (Surrender) செய்யும்பட்சத்தில் மேற்படி செயற்குறிப்பின் மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி 10 மண்டலங்களிலிருந்து 15 மண்டலங்களாகவும் 155 வார்டுகளிலிருந்து 200 வார்டுகளாகவும் எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதாலும், மேலும் சென்னை மாநகராட்சிக்கு 3 வட்டார அலுவலகங்கள் கூடுதலாக உருவாக்கப்பட்டுள்ளதாலும், நிர்வாக நலன் கருதி சென்னை மாநகராட்சியின் சில துறைகளுக்கு கீழ்கண்ட சில புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

| S.NO | Post Name | No of Posts Creation |
|---|---|---|
| 1 | Assistant Sports Officer (9300-34800+4500GP) | 3 |
| 2 | Director of Parks (15600-39100+6600GP) | 1 |
| 3 | Municipal Financial Officer (15600-39100+7600GP) | 1 |

மேற்படி புதியதாக தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள 3 பதவிகளுக்கான கடமைகள் மற்றும் பொறுப்புகள் விவரம் பின்வருமாறு:—

**1. Assistant Sports Officer:-**

a. வட்டார அலுவலகங்களில் 5 மண்டலங்களில் உள்ள விளையாட்டுத்திடல்கள் மற்றும் உடற்பயிற்சிக் கூடங்களுக்கு பொறுப்பாளர் ஆவார்.
b. 5 மண்டலங்களில் உள்ள விளையாட்டுத்திடல் மற்றும் விளையாட்டுத்துறையின் தினசரி பணியினை நிர்வகித்து, விளையாட்டுத்திடல் பயிற்சியாளர், விளையாட்டுத்திடல் உதவியாளர் மற்றும் அனைத்து பணியாளர், அலுவலர்களை வழிநடத்துதல்,
c. விளையாட்டுத்திடல் உருவாக்கவும் பராமரிக்கவும் விளையாட்டு பயிற்சி உபகரணம் பொருத்துவதற்கும் அனைத்து ஏற்பாடுகளும் செய்தல்,
d. பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், பயிற்சி முகாம்கள் நடத்துதல்,

e. பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப விளையாட்டுத்திடலை மேம்படுத்துதல் மற்றும் உபகரணங்கள் வழங்க ஏற்பாடு செய்தல்,
f. விளையாட்டுத்துறைக்குத் தேவையான திட்டங்களை உருவாக்கி பட்ஜெட் தயாரிக்க ஆலோசனை வழங்குதல்,
g. உள்விளையாட்டு அரங்கம், விளையாட்டுத்திடல்கள், நீச்சல் குளங்களை கண்காணித்து விளையாட்டுத்திடல் பயிற்சியாளர் மூலம் மற்ற பணியாளர்களை திறம்பட பணிகளை மேற்கொள்ளச்செய்தல்,
h. அரசு மற்றும் சென்னை மாநகராட்சி விளையாட்டுத்துறைக்கான கூட்டங்களில் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குதல்,
i. புதிய விளையாட்டுத்திடல், உள்விளையாட்டு அரங்கம் உருவாக்க மண்டல அலுவலர் மற்றும் பொறியாளர்களுக்கு ஆலோசனை வழங்குதல்,
j. வட்டார அலுவலகங்கள் மூலம் விளையாட்டுத்திடல், உடற்பயிற்சிக் கூடங்களை மேம்படுத்த மேற்கொள்ளப்படும் பணி விவரங்களை சேகரித்தல்,
k. ஆணையர், இணை/துணை ஆணையர் நடத்தும் கூட்டங்கள் மற்றும் மன்றக் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்,
l. பணியாளர் பணியமைப்பு சம்பந்தமாக அனைத்து பணிகளையும் மேற்கொள்ளுதல்.

**2. Director of Parks:-**

a. சென்னை மாநகராட்சியில் 15 மண்டலங்களில் உள்ள பூங்காக்கள் மற்றும் சாலையோர பூங்காக்களுக்கு பொறுப்பாளர் ஆவார்,
b. சென்னை மாநகராட்சியில் தற்போது உள்ள 260 பூங்காக்களின் பராமரிப்பு பணியினை மேற்பார்வையிடுதல்,
c. சென்னை மாநகராட்சிக்கு கட்டட உரிமையாளர்களால் ஒப்படைக்கப்படும் திறந்த வெளி நிலங்களில் அதிக அளவில் பூங்காக்களை உருவாக்குதல் மற்றும் வளர்ச்சி பணிகளை மேற்கொள்ளுதல்,
d. சென்னை மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்டுள்ள விரிவாக்க பகுதிகளில் 100க்கும் மேற்பட்ட பூங்காக்களை உருவாக்குதல் மற்றும் வளர்ச்சி பணிகளை மேற்கொள்ளுதல்,
e. சென்னை மாநகராட்சியில் உள்ள பூங்காக்களை நவீன முறையில் மேம்படுத்த அனைத்து ஏற்பாடுகளும் செய்தல்,
f. சென்னை மாநகராட்சியின் 3 வட்டார அலுவலகங்களில் உள்ள பூங்கா கண்காணிப்பாளர்கள் மேற்கொள்ளும் பணியினை ஒருங்கிணைத்து மேம்படுத்துதல்,
g. சென்னை மாநகராட்சி பூங்கா துறை அலுவலர்கள்/பணியாளர்களால் மேற்கொள்ளப்படும் பணிகளைமேற்பார்வையிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்,
h. பூங்காக்களை உருவாக்குவதற்கும், பராமரிப்பதற்கும் தேவைப்படும் அனைத்து ஏற்பாடுகளை செய்தல்,
i. பூங்கா துறைக்கு தேவையான திட்டங்களை உருவாக்கி பட்ஜெட் தயாரிக்க ஆலோசனை வழங்குதல்,
j. புதிய பூங்காக்கள் மற்றும் சாலையோர பூங்காக்கள் உருவாக்க மண்டல அலுவலர் மற்றும் பொறியாளர்களுக்கு ஆலோசனை வழங்குதல்,
k. சென்னை மாநகராட்சியின் 3 வட்டார அலுவலகங்களில் மூலம் பூங்காக்களை மேம்படுத்த மேற்கொள்ளப்படும் பணி விவரங்களை சேகரித்தல்,
l. ஆணையர், இணை/துணை ஆணையர் நடத்தும் கூட்டங்கள் மற்றும் மன்றக் கூட்டங்களில் கலந்துகொள்ளுதல்.

**3. Municipal Financial Officer:-**

a. பல்வேறு துறைகள் பயனடையும் வகையில் நிதி தொடர்பான திட்டங்களை உருவாக்கி, ஒருங்கிணைத்து செயல்படுத்துதல் மற்றும் ஆலோசனை வழங்குதல்,

b. சென்னை மாநகராட்சி, பகுதி கணக்கு குழுமங்களில் உள்ள பல்வேறு பட்டிகளை (Bills), முன்பாகவே தணிக்கை மேற்கொள்ளுதல் (Pre-audit), கணக்குகளின் தலைப்பு மற்றும் கணக்கு குறியீட்டு எண்களை பட்டியலிட்டு அட்டவணை தயாரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு வழிகாட்டுதல்,

c. சென்னை மாநகராட்சி அலுவலர்கள்/பணியாளர்களுக்கு (for accounts, staff/officer) 4வது நிதிக்குழு பரிந்துரையின்படி, அடிப்படை கணக்கிடுதல் முறைக்கு (Accrual Based Accounting System) நடைமுறை பயிற்சி நடத்துவதற்கான காரணிகளை தயாரித்தல்.

d. சென்னை மாநகராட்சியில் வரவு–செலவு திட்ட மதிப்பீட்டிற்கு தகுந்தாற்போல் நிதி நிலையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல்,

e. நடைமுறையில் உள்ள 4வது மாநில நிதிக்குழுவின் பணிகளை கவனித்தல்

f. ERP ன் மூலம் அமல்படுத்தப்பட்ட e-goverence முறை மற்றும் சென்னை மாநகராட்சியில் நிதி தொடர்பான கூடுதலாக உருவாக்கப்பட்ட பல்வேறு திட்டங்களை வளர்ச்சியடைய செய்வதற்கான வழிமுறைகளை மேற்கொண்டு சென்னை மாநகராட்சி நிதியினை கட்டுப்படுத்தி சிறப்பான முறையில் வரவு / செலவு திட்டங்களை தயாரித்தல்.

இவ்வாறு தோற்றுவிக்கப்பட வேண்டிய பதவிகளுக்கு பதிலாக சென்னை மாநகராட்சியில் இயந்திர பொறியியல் துறையில் Compositor என்ற பதவியில் ஒப்பளிக்கப்பட்ட 17 பணியிடங்களில் தற்போது காலியாக உள்ள 16 பணியிடங்களை அரசுக்கு ஒப்படைப்பதாக தெரிவித்து , ஏற்கனவே அரசுக்கு அனுப்பப்பட்ட முன்மொழிவில் குறிப்பிடப்பட்டுள்ள 7 பணியிடங்கள் போக மீதமுள்ள Compositor பதவியில் 9 காலிப்பணியிடங்களையும், அரங்க துறையில் அரங்க அலுவலர் (Stadium Officer) என்ற பதவியில் ஒப்பளிக்கப்பட்ட 2 பணியிடங்களில் 1 பணியிடத்தை தலைமையிடத்திற்கு தக்கவைத்துக்கொண்டு மற்றொரு பணியிடம் சென்னை மாநகராட்சிக்கு தேவையில்லாததால் அவ்வொரு பணியிடத்தையும், அரசுக்கு ஒப்புவிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அரசுக்கு ஒப்படைக்கப்படவுள்ள Compositor என்ற பதவியில் காலியாக உள்ள 16 பணியிடங்களுக்கும் மற்றும் அரங்க அலுவலர் பதவியில் 1 பணியிடத்திற்கும் 1 மாதத்திற்கு ஆகும் ஊதிய செலவினம் மற்றும் சென்னை மாநகராட்சிக்கு புதியதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய பதவிகளின் விவரம் மற்றும் அப்பதவிகளுக்கு 1 மாதத்திற்கு ஆகும் ஊதிய செலவினம் ஆகியவைகளின் விவரம் பின்வருமாறு:–

| S. NO | Name of the Post | No of Posts Creation | No of posts surrender | Total Salary for Creation of Post per month | Total salary for Surrender of Post per month |
|---|---|---|---|---|---|
| 1 | Compositor(16X15764) (5200-20200+2000GP) | 0 | 16 | | Rs.2,52,224 |
| 2 | Health Education Officer (15600-39100+5400GP) | 1 | 0 | Rs.46,670 | |
| 3 | Senior Law Officer (15600-39100+7600GP) | 1 | 0 | Rs.51624 | |
| 4 | Stadium Officer (15600-39100+5400GP) | 0 | 1 | | Rs.46670 |
| 5 | Assistant Sports Officer (9300-34800+4500GP) (3X30566) | 3 | 0 | Rs.91698 | |
| 6 | Director of Parks (15600-39100+6600GP) | 1 | 0 | Rs.49554 | |
| 7 | Municipal Financial Officer (15600-39100+7600GP) | 1 | 0 | Rs.51624 | |
| **Total** | | | | **Rs.291170** | **Rs.298894** |

மேலும் சென்னை மாநகராட்சியில் அரங்க துறையில் அரங்க அலுவலர் பதவியில் ஒப்பளிக்கப்பட்ட 2 பணியிடங்களில் 1 பணியிடத்தை அரசுக்கு ஒப்படைப்பு செய்வதன் மூலம் மீதமுள்ள 1 அரங்க அலுவலர் (Stadia Officer) என்ற இப்பதவியை, தற்போது சென்னை மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டு, சென்னை மாநகராட்சியில் விளையாட்டு சம்பந்தமான பணிகள் அதிக அளவில் நடைபெற்று வருவதால், இப்பணிகளை மேற்பார்வையிடுவதற்கு, நிர்வாக நலன் கருதி "விளையாட்டுகள் அலுவலர்" (Sports Officer) என்று பெயர் மாற்றம் செய்வது அவசியமாகிறது.

எனவே,

1. சென்னை மாநகராட்சியில் இயந்திர பொறியியல் துறையில் Compositor என்ற பதவியில் ஒப்பளிக்கப்பட்ட 17 பணியிடங்களில் தற்போது காலியாக உள்ள 16 பணியிடங்களையும் அரங்க துறையில் அரங்க அலுவலர் (Stadium Officer) என்ற பதவியில் ஒப்பளிக்கப்பட்ட 2 பணியிடங்களில் 1 பணியிடத்தையும் அரசுக்கு ஒப்புவிப்பு செய்வதற்கும்,

2. ஒப்படைப்பு செய்யப்படவுள்ள பதவிகளுக்கு பதிலாக சென்னை மாநகராட்சிக்கு தேவைப்படும் கீழ்கண்ட பதவிகளை புதியதாக தோற்றுவித்து அரசாணை வழங்கக் கோரி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்புவதற்கும்,

| S. NO | Name of the Post | Class of Service | Scale of Pay | No of Posts Creation |
|---|---|---|---|---|
| 1 | Health Education Officer | II | (15600-39100+5400GP) | 1 |
| 2 | Senior Law Officer | IB | (15600-39100+7600GP) | 1 |
| 3 | Assistant Sports Officer | II | (9300-34800+4500GP) | 3 |
| 4 | Director of Parks | 1B | (15600-39100+6600GP) | 1 |
| 5 | Municipal Financial Officer | IA | (15600-39100+7600GP) | 1 |

3. சென்னை மாநகராட்சியில் "அரங்க அலுவலர்" என்ற பதவியை "விளையாட்டுகள் அலுவலர்" (Sports Officer) என்று பெயர் மாற்றம் செய்வதற்கு அரசின் ஆணை பெறுவதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**நி.நி.பி.ந.க.எண். க(ம)மா–1/1644/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.12.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.613/2014 பொருள் எண்.23

**இந்தியன் வங்கி – நடப்பு கணக்கு – அதிகப் பற்று (Over Draft in Current Account) – ரூ.50.00 கோடி – ஒப்புதல் – மன்றத்தின் அனுமதி**

2014–15 நிதியாண்டில் சென்னை மாநகராட்சி அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் (15 மண்டலங்கள்) பல்வேறு வளர்ச்சிப் பணிகள் அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக TURIF, CMCDM (GRID WORK) இப்பணிகளுக்காக அரசிடமிருந்தும், நிதி நிறுவனங்களிடமிருந்தும் மான்யம் மற்றும் கடன்பெறுவதில் காலதாமதமும், 10000 Roads Scheme பணிகளுக்காக நிதி நிறுவனங்களிடமிருந்தும் கடன்பெறுவதில் காலதாமதமும் ஏற்பட்டு வருகிறது.

இந்நிலையில் பல்வேறு மூலதனப் பணிகளுக்கான பட்டிகள் தீர்வு செய்யப்பட வேண்டியுள்ளது. இதனை கருத்திற்கொண்டு, சென்னை மாநகராட்சியின் அன்றாடப் பணியில் தொடர்புடைய ஐந்து வங்கிகளில் (இந்தியன ஓவர்சீஸ் வங்கி, கனரா வங்கி, இந்தியன் வங்கி, பஞ்சாப் தேசிய வங்கி மற்றும் ஐசிஐசிஐ வங்கி) பராமரிக்கப்பட்டு வரும் நடப்புக் கணக்கில் அதிகப் பற்று (Over Draft) ரூ.50.00 கோடி முதல் ரூ.100.00 கோடி வரை பெறுவது என முடிவெடுக்கப்பட்டு, முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டது.

தற்பொழுது முதற்கட்டமாக ரூ.50.00 கோடி இந்தியன் வங்கி, ஜார்ஜ் டவுன் கிளையிலிருந்து 10.25 விழுக்காடு ஆண்டு வட்டியில் நடப்பு கணக்கில் அதிகப் பற்று (Over Draft) பெறுவதற்கான அனுமதி இந்தியன் வங்கியிலிருந்து பெறப்பட்டது. மேலும், இத்தொகையினை பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

எனவே,

அ) முதற்கட்டமாக இந்தியன் வங்கி, ஜார்ஜ் டவுன் கிளையில் ரூ.50.00 கோடி நடப்பு கணக்கில் அதிகப் பற்று (Over Draft) பெறுவதற்கு அனுமதியும்,

ஆ) இரண்டாவது கட்டமாக நிதி தேவைப்படும் பட்சத்தில், கனரா வங்கியில் ரூ.50.00 கோடி வரை, ஆக மொத்தம் ரூ.100.00 கோடி வரை நடப்பு கணக்கில் அதிகப் பற்று (Over Draft) 10.50 விழுக்காடு வட்டியில் பெறுவதற்கு அனுமதியும்,

மேற்கண்ட ‘‘அ’’ மற்றும் ‘‘ஆ’’ வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண்.490/14, நாள்.22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

<u>பா.து.ந.க.எண்.பி3/1820/2014</u>

<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18–12–2014 நாளிட்ட குறிப்பு</u>

தீர்மான எண்.614/2014 பொருள் எண்.24

<u>பாலங்கள் துறை – சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்க பாதசாரிகள் சுரங்கப்பாதை மற்றும் நடைமேம்பாலம் நீட்டிப்பு பணி – தமிழ்நாடு நகர்புர உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் (TNUIFSL) மூலம் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சி திட்ட (TNSUDP) மானிய நிதியுதவியின் கீழ் கலந்தறிதற்குரியவர் நியமித்து ஆய்வுகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க அனுமதி.</u>

சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக கீழ்க்கண்ட இடங்களில் பாதசாரிகள் சுரங்கப்பாதை மற்றும் நடைமேம்பாலத்தை நீட்டிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

1. தலைமை செயலகத்தின் எதிரே இராஜாஜி சாலையில் பாதசாரிகள் சுரங்கப்பாதை
2. எழும்பூர் இரயில் நிலையத்திலிருந்து தெற்கு பக்கமுள்ள காந்தி இர்வின் சாலை வரை ஏற்கனவே உள்ள நடைமேம்பாலத்தைநீட்டிப்பு.

மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளவும் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கவும் கலந்தறிதற்குரியவரை நியமிக்க தமிழ்நாடு நகர்புர உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவத்திற்கு (TNUIFSL) கண்டுள்ள கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

கலந்தறிதற்குரியவர் நியமனம் செய்வதற்குரிய விதிமுறைகளை தமிழ்நாடு நகர்புர உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் (TNUIFSL) கடிதத்தின் மூலம் அனுமதி கோரப்பட்டுள்ளது. விதிமுறைகளுக்கு (TOR) சென்னை மாநகராட்சியால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு நகர்புர உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் கடிதத்தில் மேற்கண்ட பணிகளை தமிழ்நாடு நகர்புர உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் (TNUIFSL) மூலம் மானிய நிதியின் கீழ் கலந்தறிதற்குரியவர் நியமித்து பணிகளை மேற்கொள்ள சென்னை மாநகராட்சியின் மன்றத்தின் ஒப்புதல் பெற்று அனுப்ப கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, கீழ்க்கண்ட இனங்களுக்கு,

1. தலைமை செயலகத்தின் எதிரே இராஜாஜி சாலையில் பாதசாரிகள் சுரங்கப்பாதை மற்றும்
2. எழும்பூர் இரயில் நிலையத்திலிருந்து தெற்கு பக்கமுள்ள காந்தி இர்வின் சாலை வரை ஏற்கனவே உள்ள நடைமேம்பாலத்தைநீட்டிப்பது

ஆகிய பணிகளுக்கு தமிழ்நாடு நகர்புர உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் (TNUIFSL) மூலம் மானிய நிதியின் கீழ் கலந்தறிதற்குரியவர் நியமித்து ஆய்வுகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மானஎண்.474/14,நாள்.19.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண். 492/14 நாள் 22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.க.கு.ந.க.எண்.அ8/2969/2014</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.12.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.615/2014 **பொருள் எண்.25**

**<u>பழைய ஊதிய விகிதத்தில் அகவிலைப்படி – 01.07.2014 முதற்கொண்டு உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதம் – ஆணைகள் – வெளியிடப்பட்டது – அரசாணையை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த மன்றத்தின் அனுமதி</u>**

அரசு ஆணை எண்.249, நிதித் (படிகள்) துறை, நாள் 14.10.2014ன்படி பழைய ஊதிய விகிதத்தில் அகவிலைப்படி 01.07.2014 முதற்கொண்டு உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதம் ஆணைகள் வழங்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது. அதன் விவரம் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

## நிதி (படிகள்)த் துறை
## அரசு ஆணை எண்.249, நாள் 14.10.2014.

*(ஜய, புரட்டாசி – 28, திருவள்ளுவர் ஆண்டு 2045)*

**படிகள்** – பழைய ஊதிய விகிதத்தில் அகவிலைப்படி – 01.07.2014 முதற்கொண்டு உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதம் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**பின்வருவனவற்றைப் படிக்கவும்:–**

1. அரசாணை நிலை எண்.105, நிதி (படிகள்) துறை, நாள். 28.04.2014.
2. மத்திய அரசு, புதுடில்லி, நிதியமைச்சகம், செலவுத் துறையின் 25.9.2014ஆம் நாளிட்ட 1–(3) / 2008–E.II (B) ஆம் எண்ணுள்ள அலுவலகக் குறிப்பு.

* * * * *

**<u>ஆணை:</u>**

அரசு ஆணையில் கீழே விவரித்துள்ளபடி, மாநில அரசு அலுவலர்களுக்கு பழைய ஊதிய விகிதத்தில் திருத்தப்பட்ட அகவிலைப்படி வீதத்தை அனுமதித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன:–

| எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது என்பது | பழைய ஊதிய விகிதத்தில் அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| **01.01.2014** | **அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலை ஊதியத்தில் 200 சதவீதம்** |

2. அரசு அலுவலக குறிப்பில், பழைய ஊதிய விகிதத்திலேயே தொடர்ந்து ஊதியம் பெறும் அலுவலர்களுக்கு 01.07.2014 முதல் அகவிலைப்படியை 200 சதவீதத்திலிருந்து 212 சதவீதமாக உயர்த்தி அனுமதித்துள்ளது.

3. மேலே படிக்கப்பட்டுள்ள மைய அரசின் ஆணையைப் பின்பற்றி, 01.01.2006 தேதிக்கு முன்னர் இருந்த பழைய ஊதிய விகிதத்திலேயே தொடர்ந்து ஊதியம் மற்றும் படிகள் பெற்று வரும் மாநில அரசு அலுவலர்களுக்கு தற்போது கீழே குறிப்பிட்டுள்ளபடி, திருத்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி அனுமதித்து அனுமதித்து ஆணை வெளியிடப்படுகிறது.

| எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது என்பது | பழைய ஊதிய விகிதத்தில் அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| **01.07.2014** | **அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலை ஊதியத்தில் 212 சதவீதம்** |

4. இவ்வாறு உயர்த்தப்பட்ட வீதத்திலான அகவிலைப்படியை 01.07.2014 முதற்கொண்டு ரொக்கமாக வழங்கப்படும்.

5. திருத்தப்பட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை, அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும்.

**6.** மேலே அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி தற்போது அகவிலைப்படி பெறும் முழு நேர அலுவலர்களுக்கும், சில்லரைச் செலவு நிதியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர ஊதியம் பெறும் முழு நேர அலுவலர்களுக்கும் அனுமதிக்கத்தக்கதாகும். இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, பகுதி நேர அலுவலர்களுக்கு அனுமதிக்கத்தக்கதல்ல.

**7.** இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பிற அலுவலர்களுக்கும், உள்ளாட்சி மன்றங்களின் அலுவலர்களுக்கும், பல்கலைக்கழக மானியக்குழு / அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக்குழு சம்பள வீதங்களின் கீழ்வரும் அலுவலர்களுக்கும், அரசு மற்றும் மானியம் பெறும் பல்தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளிகள், சிறப்பு பட்டயப் படிப்பு நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் / உடற்பயிற்சி இயக்குநர்கள் / நூலகர்கள் ஆகியோருக்கும், வருவாய்த் துறையிலுள்ள கிராம உதவியாளர்களுக்கும், சத்துணவு திட்ட அமைப்பாளர்கள், குழந்தைகள் நல அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பணிபுரியும் பஞ்சாயத்து உதவியாளர்கள் / எழுத்தர்கள் ஆகியோருக்கும் பொருந்தும்.

**8.** இச்செலவு, சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் பெருந்தலைப்பு, துணைப் பெருந்தலைப்பு, சிறு தலைப்பின் கீழ்வரும் ‘‘03. அகவிலைப்படி’’ என்ற நுணுக்கத் தலைப்பில் பற்று எழுதப்பட வேண்டும்.

**9.** இதற்கான பட்டிகள் அனுப்பப்படும் போது, முதன்மை மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18, அவர்களிடமிருந்து அனுமதிக்காகக் காத்திராமல், திருத்தப்பட்ட அகவிலைப்படியை வழங்குமாறு கருவூல அலுவலர்கள் / சம்பளக் கணக்குகள் அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. சண்முகம்**
அரசு முதன்மைச் செயலாளர்

எனவே, அரசாணை எண்.249, நிதித் (படிகள்) துறை, நாள் 14.10.2014ஐ சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண்.486/14, நாள்.22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.க.கு.ந.க.எண்.அ8/2972/2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.12.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.616/2014 **பொருள் எண்.26**

**<u>திருத்தப்பட்ட தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் பெறும் பணியாளர்கள் – தனி உயர்வு –01.07.2014 முதற் கொண்டு தனி உயர்வு – ஆணைகள் வெளியிடப்பட்டது – அரசாணையை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த மன்றத்தின் அனுமதி</u>**

அரசு ஆணை எண்.248, நிதித் (படிகள்) துறை, நாள் 14.10.2014ன்படி திருத்தப்பட்ட தொகுப்பூதியம் மற்றும் நிலையான ஊதியம் மதிப்பூதியம் பெறும் பணியாளர்கள் தனி உயர்வு 01.07.2014 முதற் கொண்டு தனி உயர்வு ஆணைகள் வெளியிடப்பட்டது. அதன் விவரம் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

**நிதித் (படிகள்) துறை**

**அரசு ஆணை எண்.248, நாள் 14.10.2014.**

*(ஜய, புரட்டாசி – 28, திருவள்ளுவர் ஆண்டு 2045)*

திருத்தப்பட்ட தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் பெறும் பணியாளர்கள் – தனி உயர்வு –01.07.2014 முதற் கொண்டு தனி உயர்வு – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**பின்வருவனவற்றைப் படிக்கவும்:–**

1. அரசாணை நிலை எண்.97, நிதி (படிகள்)த் துறை, நாள். 03.04.2014.
2. அரசாணை (நிலை) எண்.245, நிதி (படிகள்)த் துறை, நாள்: 10.10.2014.

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் திங்களொன்றுக்கு ரூ.600/– வரை தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் பெறும் பணியாளர்கள் தனிப்பட்ட தொகையாக மாதம் ரூ.20/–ம், ரூ.600/–க்கு மேலாக தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் பெறும் பணியாளர்கள் தனிப்பட்ட தொகையாக ரூ.40/–ம் 01.01.2014 முதல் பெற ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**2.** மேலே இரண்டாவதாக படிக்கப்பட்டுள்ள அரசாணையில் முறையான மற்றும் சிறப்பு காலமுறை ஊதிய விகிதம் பெறும் அரசு அலுவலர்களுக்கு அகவிலைப்படியை 01.07.2014லிருந்து உயர்த்தி அரசு ஆணைகள் பிறப்பித்தது. எனவே, திருத்தப்பட்ட தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் பெறுபவர்களுக்கு 01.07.2014–லிருந்து இத்தனிப்பட்ட தொகையை உயர்த்தி வழங்குவதென அரசு தீர்மானித்தது. இதன்படி, தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் பெறும் பணியாளர்களுக்கு 01.07.2014ஆம் நாளிலிருந்து மேலும் ஒரு தனிப்பட்ட தொகையை உயர்த்தி வழங்கி கீழ்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

| | |
|---|---|
| 1.1.2006ஆம் நாளிலிருந்து திங்களொன்றுக்கு ரூபாய் 600 வரை திருத்தப்பட்ட தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் பெறுபவர்களுக்கு | திங்களொன்றுக்கு ரூ.20/– |
| 1.1.2006ஆம் நாளிலிருந்து திங்களொன்றுக்கு ரூபாய் 600/–க்கு மேலாக திருத்தப்பட்ட தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் பெறுபவர்களுக்கு | திங்களொன்றுக்கு ரூ.40/– |

**3.** ஜூலை, ஆகஸ்டு மற்றும் செப்டம்பர் 2014ஆம் மாதங்களுக்கான தனிப்பட்ட நிலுவைத் தொகை உடனடியாக ரொக்கமாக வழங்கப்பட வேண்டும்.

**4.** உள்ளாட்சி மன்றங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் பணியாற்றும் மேல் நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் ஆகியோர்களுக்கும் இந்த ஆணை பொருந்தும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. சண்முகம்**

அரசு முதன்மைச் செயலாளர்

எனவே, அரசாணை எண்.248, நிதித் (படிகள்) துறை, நாள் 14.10.2014ஐ சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண்.487/14, நாள்.22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**க.து.ந.க.எண்.பி4/ பி7/0547/1994**

**முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களின் 15.12.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.617/2014 **பொருள் எண்.27**

**பழைய மண்டலம் –7, வார்டு–105 மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் செயற்கை விளையாட்டு தளம் அமைக்கும் பணிக்கு வழங்கப்பட்ட தொகைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி**

கட்டடத்துறை, பழைய மண்டலம்–7, வார்டு–105 மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் செயற்கை விளையாட்டு தளம் அமைக்கும் பணிக்கு திருவாளர்கள்.ராமதாஸ் அன்டு கோ அவர்களுக்கு 01.06.1994 அன்று பணி ஆணை வழங்கபட்டு பணி முடிக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.ராமதாஸ் அன்டு கோ அவர்கள் அளித்த இறுதி பட்டித்தொகைக்கு ஏற்பளிப்பு செய்யாத காரணத்தால் ஒப்பந்ததாரர் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கின் மீது இறுதி தீர்ப்பாக நடுவர் மன்றம் (Arbitration) 12.06.2002 அன்று ரூ.46,77,731/–ஐ திருவாளர்கள்.ராமதாஸ் அன்டு கோ அவர்களுக்கு வழங்குமாறு ஆணையிடப்பட்டது.

நடுவர் மன்றத்தின் தீர்ப்பினை எதிர்த்து சென்னை மாநகராட்சி சார்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் 2002ல் வழக்கு தொடரப்பட்டது. 25.02.2004 ஆம் ஆண்டு இவ்வழக்கை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து தீர்பபளித்தது. இத்தீர்ப்பினை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் 2004 ஆம் ஆண்டு மேல் முறையீடு செய்யப்பட்டது. இந்த மேல்முறையீட்டு மனுவையும் சென்னை உயர்நீதி மன்றம் 21.11.2007 அன்று தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்பட்டது. மீண்டும் இத்தீர்ப்பை எதிர்த்து சென்னை மாநகராட்சி சார்பாக 09.06.2008 ல் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மேல் முறையீட்டு மனுவையும் வழக்கு விசாரணைக்குப்பின் 25.02.2014 அன்று சென்னை சென்னை உயர்நீதி மன்றம் நடுவர் மன்றத்தின் தீர்ப்பு (Arbitration) இறுதியானது என கூறி தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டது.

இதனிடையே மனுதாரர் திருவாளர்கள்.ராமதாஸ் அன்டு கோஅவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் 2012 ல் (E.P.Petition E.P.NO.166 of 2012) நீதிமன்ற தீர்ப்பினை நிறைவேற்றக்கோரி மனு செய்ததன் அடிப்படையில் இவ்வழக்கினை விசாரித்த சென்னை உயர்நீதி மன்றம் மனுதாரர் திருவாளர்கள்.ராமதாஸ் அன்டு கோஅவர்களுக்கு ரூ.1,30,97,646.80 சென்னை மாநகராட்சி வழங்க வேண்டும் என 05.03.2014 ல் தீர்ப்பளித்தது.

இந்நிலையில் கூடுதல் மாநில அரசு தலைமை வழக்குரைஞர் அவர்களிடம் இத்தீர்ப்பிற்கான ஆலோசனை வழங்க கேட்கப்பட்டது. அவர்கள் தன்னுடைய 17.03.2014 நாளிட்ட கருத்துருவில் நடுவர் நீதிமன்ற தீர்ப்பின்படி மனுதாரார் திருவாளர்கள்.ராமதாஸ் அன்டு கோ அவர்களுக்கு ரூ.1,30,97,646.80 வழங்குமாறும் மற்றும் சென்னை மாநகராட்சி இவ்வழக்கினை உச்ச நீதி மன்றத்தில் தொடருமாறும் கருத்துரு வழங்கினார். ஆணையர் அவர்களிடம் 09.04.2014 அன்று ஆணை பெற்று நடுவர் மன்ற தீர்ப்பின்படி மனுதாரார் திருவாளர்கள்.ராமதாஸ் அன்டு கோ அவர்களுக்கு ரூ.46,77,731/– மட்டும் முதல் கட்டமாக வழங்கப்பட்டது.

கூடுதல் மாநில அரசு தலைமை வழக்குரைஞர் அவர்களின் கருத்துருவின்படி இந்த தீர்ப்பினை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கினை உச்சநீதி மன்றம் 24.11.2014 விசாரணை செய்து தள்ளுபடி செய்த காரணத்தால் மனுதாரர் திருவாளர்கள்.ராமதாஸ் அன்டு கோ அவர்களுக்கு தீர்ப்பின்படி இறுதித்தொகையான ரூ.84,19,915/– உடனடியாக வழங்க வேண்டிய நிர்பந்தத்தால் மனுதாரர் திருவாளர்கள்.ராமதாஸ் அன்டு கோ அவர்களுக்கு 04.12.2014 அன்று ரூ.84,19,915/– காசோலையாக வழங்கப்பட்டது.

மனுதாரர் திருவாளர்கள்.ராமதாஸ் அன்டு கோ அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட தொகை ரூ.46,77,731/– மற்றும் இரண்டாம் தவணையாக வழங்கப்பட்ட தொகை ரூ.84,19,915/– மொத்த தொகை ரூ.1,30,97,646/– வழங்கியமைக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “19.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண். 472/14 நாள் 19.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

> “22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண். 491/14 நாள்.22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ4.ந.க.எண்.பி3/7798/சிப்பம்–5/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18–12–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.618/2014 பொருள் எண்.28

**ஒப்பம் – 2013–2014 – மண்டலம்–4, பகுதி–9, வார்டு–37 – ஐந்து சாலைகளுக்கு பேவர் இயந்திரம் மூலம் தார் சாலை அமைக்கும் பணி (சிப்பம்–5) மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டது – ஒப்பம் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திருமதி.எம்.மேனகா அவர்களுக்கு பணிகள் வழங்க அனுமதி**

மண்டலம்–4ல் பகுதி–9, வார்டு–37, 2013–2014 ஆண்டில் பேவர் இயந்திரம் மூலம் தார் சாலை அமைக்கும் பணிக்காக்கான மதிப்பீடுகளில், 1995.மீ. நீளமுள்ள 5 (ஐந்து) சாலைகளுக்கு ரூ.1,29,56,000/– இலட்சத்தில் சாலை அமைக்க மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் பெறப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு.

பணியின் விவரம்:–

| வ. எ ண் | வார் டு எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விவரம் | நீளம் (மீ) | பரப்பளவு ச.மீ | கோரப்பட்ட ஒப்பந்தப் புள்ளியின் படி பணியின் மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 37 | எம்.கே.பி.நகர் 1வது பிரதான சாலை | சாலை களுக்கு பேவர் இயந்திரம் மூலம் தார் சாலை அமைக்கும் பணி | 440 | 3080 | 21,14,000 00 |
| 2 | 37 | எம்.கே.பி.நகர் 3வது பிரதான சாலை | | 680 | 6120 | 42,60,000 00 |
| 3 | 37 | எம்.கே.பி.நகர் 2வது பிரதான சாலை | | 360 | 2520 | 17,30,000 00 |
| 4 | 37 | எம்.கே.பி.நகர் 5வது பிரதான சாலை | | 260 | 1820 | 12,52,000 00 |
| 5 | 37 | எம்.கே.பி.நகர் 4வது பிரதான சாலை | | 255 | 1785 | 35,60,000 00 |
| | | | | 1995 | 15325 | 1,29,56,000 00 |

| | | |
|---|---|---|
| 1 | மதிப்பீட்டு எண். | : 1) ND/2013-2014/13602<br>: 2) ND/2013-2014/15126<br>: 3) ND/2013-2014/15093<br>: 4) ND/2013-2014/14144<br>: 5) ND/2013-2014/13599 |
| 2 | குழுவின்/வார்டுகுழு தீர்மான எண். நாள் | : 131/2013 நாள்:13.08.2013 |
| 3 | திட்ட குறியீட்டு எண். | : 1) 447/14.08.2013, 2) 448/14.08.2013 |
| 4 | ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை அலுவலக விலை விவரப்பட்டியல் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆண்டு | 2013 – 2014 |
| | அ).பணியின் செலவீனம் | : ரூ. 1,11,41,121.40 |
| | ஆ).மேற்பார்வை செலவு | : ரூ. 11,14,121.14 |
| | இ).சில்லரை மேற்பார்வை செலவு | : ரூ. 2,78,528.05 |
| | ஈ).முற்ற எதிர்பாரா செலவு | : ரூ. 1,11,411.22 |
| | உ).பணி தர செலவு | : ரூ. 3,10,827.19 |
| | மொத்தம் | : ரூ. 1,29,56,000.00 |
| 5 | எந்தெந்த பத்திரிக்கைகளில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டன | : ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் இதழ், நாள்:24.02.2014,<br>மக்கள் குரல் நாளிதழ் நாள்:24.02.2014 |

| | | |
|---|---|---|
| 6 | ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் | : 25.02.2014 |
| 7 | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | : 25.02.2014 |
| 8 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப் பட்டுள்ளதா ? இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும். | : இல்லை. குறுகிய கால ஒப்பம் என்பதால் இவ்வொப்பத்திற்கு தலைமை பொறியாளர் அவர்களிடம் அனுமதி பெற்று பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. |
| 9 | ஒப்பந்தப்புள்ளி செல்லதக்க காலம் | : 90நாட்கள் |

மேற்கண்ட பணிக்காக இரண்டு உறை முறையில் ஒப்பம் கோரப்பட்டு ஒப்ப நாளான 25.02.2014 அன்று ஒரு ஒப்பம் மட்டும் பெறப்பட்டது. தொழில் நுட்ப ஆவணங்கள் (Technical Bid) 25.02.2014 அன்று திறக்கப்பட்டது. திறக்கப்பட்ட ஒப்பத்தில் ஒப்பந்ததாரர் திருமதி.எம்.மேனகா அவர்களின் ஒப்பத்தில் தேவையான அளவு Bid Capacity மற்றும் முன்தகுதி நிபந்தனைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமையால், திருமதி.எம்.மேனகா அவர்களின் விலைப்புள்ளி (Price Bid) 25.02.2014 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அவற்றின் விவரம்:—

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் | பரிந்துரைக்கப்பட்டுள்ள பணியின் மதிப்பு ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் அளித்துள்ள விழுக்காடு அதிகம்/குறைவு ரூ. |
|---|---|---|---|---|
| 01 | திருமதி.எம்.மேனகா | 1,11,41,121.40 | 1,28,12,289.61 | (+) 15.00% அதிகம் |

| | |
|---|---|
| 12. குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்தை தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் | : 04.03.2014 அன்று மேலும் விலைகுறைப்பு செய்துள்ளார். |
| 13. பேச்சுவார்தைக்குப்பின் ஒப்பத் தொகை ஒப்ப சதவீதம் | : (+)9.00%அதிகம் ரூ.1,21,43,822.33 2013—14 ஆம் ஆண்டின் விலை விவரப்படி |
| 14. குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதிவின் நிலை, பதிவு நாள். | : பேருந்து சாலைத்துறை முதல் வகுப்பு பதிவு எண்.15/2009—2010 நாள்.06.08.2009 |
| 15. கூடுதல் பிணை வைப்புத் தொகை செலுத்தப்பட்ட விவரம் அ) கேட்பு காசோலை எண். நாள். | : இல்லை |
| 16. பணிக்கான நிதி ஆதராம் உள்ளதா ? | : ஆம் |
| அ) வரவு செலவுத் திட்ட தலைப்பு | : மூலதன நிதி பணி |
| 17) ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் | : 90 நாட்கள் |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு, ஒப்ப இறுதி நாளான 25.02.2014 அன்று ஒரு ஒப்பம் மட்டும் பெறப்பட்டது. இதில் குறைந்த விலைப்புள்ளி கோரிய திருமதி.எம்.மேனகா அவர்களின் ஒப்பத் தொகை ரூ.1,21,43,822.33/— ஆகும் இது 2013—14 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (+)9.00% அதிகம் ஆகும். அதே சமயம் ஒப்பந்ததாரரின் ஒப்பம் ஒப்ப முன் தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையாலும், அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டும் திருமதி.எம்.மேனகா அவர்களின் ஒப்பத்தை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அவரது ஒப்பத்தொகை 2013—14 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (+)9.00% அதிகம் ஆகும். மேலும், 12.02.2014 அன்று வெளியான வெளி சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் இவரது ஒப்ப விழுக்காடு (—)0.34% குறைவு ஆகும்.

மன்றத் தீர்மான எண்: 512/2007 நாள்:25.09.2007ன்படி

1. அடிப்படை இனங்கங்கள் தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் பொருட்களின் சந்தை கொண்டு, சந்தை விலைவிவரப்பட்டியல் தயாரிப்பதற்கு ( Sourc-Builders Association of India-Southern Centre) இந்து நாளிதழில் வெளியிடப்பட்டது.
2. அவ்வாறு தயாரிக்கப்பட்ட சந்தை விவரப்பட்டியல் கொண்டு ஒப்பந்தங்கள் பெறப்படும் பொழுது ஒப்பீடு (Comparison) செய்து ஒப்பந்தங்களைக்கையாளவும் அனுமதி அளித்துள்ளது.
3. மேலும், சந்தை விலைகளில் மாற்றங்கள் நிகழும் பொழுது, அதற்கேற்றவாறு சந்தை விலை விவரப்பட்டியல் மாற்றியமைத்து ஒப்பீடு (Comparison) செய்து ஒப்பந்தங்களைக் கையாளவும், மன்றம் அனுமதி அளித்துள்ளது.

எனவே, இப்பணிகளின் தன்மையை (Nature of Work) கருத்தில் கொண்டு சந்தை விலைவிவரப்படி கணக்கீட்டு ஒப்பிட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பந்தத்தை திருமதி.எம்.மேனகா அவர்களுக்கு **2013–2014** ஆம் ஆண்டின் அலுவலக விலையை விட (+)**9.00%** அதிகம் ரூ.**1,21,43,822.33/–** மதிப்பிற்கு பணிகள் வழங்க ஒப்ப ஆய்வுக்குழுமத்தின் பரிந்துரை வேண்டி மண்டல அலுவலர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

ஒப்ப கூர்ந்தாய்வு குழுமத்தில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டு இப்பணிக்கான ஒப்பத்தை திருமதி.எம்.மேனகா அவர்களுக்கு **2013–14** ஆம் ஆண்டின் அலுவலக விலையைவிட (+)**9.00%** அதிகம் அலுவலக விலையையுடன் ஒப்பிடுகையில் **(–)0.34%** குறைவு ரூ.**1,21,43,822.33/–** மதிப்பிற்கு பணிகள் வழங்க ஒப்ப கூர்ந்தாய்வு குழுமம் இப்பணியினை மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தொகை ரூ.**1,21,43,822.33/– 2013–14** ஆம் ஆண்டு அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் (+)**9.00%** அதிகமாக உள்ளதால் ஒப்பந்ததாரர் திருமதி.எம்.மேனகா அவர்களுக்கு ஒப்ப பணியாணை வழங்கிட ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் **1998** பிரிவு **7(1)** மற்றும் **7(2)**ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“**19.12.2014** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மா எண். **478/14**, நாள்.**19.12.2014**–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“**22.12.2014** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மானஎண்.**494/14** நாள்.**22.12.2014**–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ4.ந.க.எண்.பி3/7799/சிப்பம்–6/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18–12–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.619/2014 **பொருள் எண்.29**

**ஒப்பம் 2013–2014 – மண்டலம்–4, பகுதி–9, வார்டு–37 – ஆறு சாலைகளுக்கு பேவர் இயந்திரம் மூலம் தார் சாலை அமைக்கும் பணி (சிப்பம்–6) மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டது – ஒப்பம் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திருமதி.எம்.மேனகா அவர்களுக்கு பணிகள் வழங்க அனுமதி**

மண்டலம்–4ல் பகுதி–9, வார்டு–37, 2013–2014 ஆண்டில் பேவர் இயந்திரம் மூலம் தார் சாலை அமைக்கும் பணிக்காக்கான மதிப்பீடுகளில், 2262.மீ. நீளமுள்ள 6 (ஆறு) சாலைகளுக்கு ரூ.1,49,56,000/– இலட்சத்தில் சாலை அமைக்க மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் பெறப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு.

பணியின் விவரம்:–

| வ. எண் | வார்டு எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விவரம் | நீளம் (ம) | பரப்பளவு ச.மீ | கோரப்பட்ட ஒப்பந்தப் புள்ளியின் படி பணியின் மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 37 | திருவள்ளுவர் நகர் 3வது பிரதான சாலை | சாலைகளுக்கு பேவர் இயந்திரம் மூலம் தார் சாலை அமைக்கும் பணி | 600 | 3300 | 42,24,000 00 |
| 2 | 37 | எம்.கே.பி.நகர் வடக்கு நிழற்சாலையில் 4வது பிரதான சாலை முதல் கிழக்கு நிழற்சாலை வரை | | 350 | 4550 | 30,36,000 00 |
| 3 | 37 | எம்.கே.பி.நகர் 8வது பிரதான சாலை | | 382 | 2695 | 18,54,000 00 |
| 4 | 37 | எம்.கே.பி.நகர் வடக்கு நிழற்சாலையில் சர்வீஸ் சாலை முதல் 4வது பிரதான சாலை வரை | | 350 | 4550 | 30,36,000 00 |
| 5 | 37 | எம்.கே.பி.நகர் 6வது பிரதான சாலை | | 255 | 1785 | 12,29,000 00 |
| 6 | 37 | எம்.கே.பி.நகர் 7வது பிரதான சாலை | | 325 | 2275 | 15,77,000.00 |
| | | | | 2262 | 19155 | 1,49,56,000 00 |

| | | |
|---|---|---|
| 1 | மதிப்பீட்டு எண். | : 1) ND/2013-2014/14128<br>: 2) ND/2013-2014/13606<br>: 3) ND/2013-2014/13598<br>: 4) ND/2013-2014/15390<br>: 5) ND/2013-2014/15132<br>:6) ND/2013-2014/15128 |
| 2 | குழுவின்/வார்டுகுழு தீர்மான எண். நாள் | : 163/2013 நாள்:10.10.2013 |
| 3 | திட்ட குறியீட்டு எண். | : 1) 449/14.08.2013, 2) 453/16.08.2013<br>:3) 452/16.08.2013, |

| | | |
|---|---|---|
| 4 | ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை அலுவலக விலை விவரப்பட்டியல் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆண்டு | 2013 – 2014 |
| | அ).பணியின் செலவீனம் | |
| | ஆ).மேற்பார்வை செலவு | : ரூ. 1,28,59,869.30 |
| | இ).சில்லரை மேற்பார்வை செலவு | : ரூ. 12,85,986.93 |
| | ஈ).முற்ற எதிர்பாரா செலவு | : ரூ. 3,21,496.73 |
| | உ).பணி தர செலவு | : ரூ. 1,28,598.69 |
| | மொத்தம் | : ரூ. 3,60,066.35 |
| | | : ரூ. 1,49,56,000.00 |
| 5 | எந்தெந்த பத்திரிக்கைகளில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டன | : ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் இதழ், நாள்:24.02.2014, மக்கள் குரல் நாளிதழ் நாள்:24.02.2014 |
| 6 | ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் | : 25.02.2014 |
| 7 | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | : 25.02.2014 |
| 8 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப் பட்டுள்ளதா ? இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும். | : இல்லை. குறுகிய கால ஒப்பம் என்பதால் இவ்வொப்பத்திற்கு தலைமை பொறியாளர் அவர்களிடம் அனுமதி பெற்று பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. |
| 9 | ஒப்பந்தப்புள்ளி செல்லதக்க காலம் | : 90நாட்கள் |

மேற்கண்ட பணிக்காக இரண்டு உறை முறையில் ஒப்பம் கோரப்பட்டு ஒப்ப நாளான 25.02.2014 அன்று ஒரு ஒப்பம் மட்டும் பெறப்பட்டது. தொழில் நுட்ப ஆவணங்கள் (Technical Bid)25.02.2014 அன்று திறக்கப்பட்டது. திறக்கப்பட்ட ஒப்பத்தில் ஒப்பந்ததாரர் திருமதி.எம்.மேனகா அவர்களின் ஒப்பத்தில் தேவையான அளவு Bid Capacity மற்றும் முன்தகுதி நிபந்தனைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமையால், திருமதி.எம்.மேனகா அவர்களின் விலைப்புள்ளி (Price Bid) 25.02.2014 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அவற்றின் விவரம்:–

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் | பரிந்துரைக்கப் பட்டுள்ள பணியின் மதிப்பு ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் அளித்துள்ள விழுக்காடு அதிகம்/குறைவு ரூ. |
|---|---|---|---|---|
| 01 | திருமதி.எம்.மேனகா | 1,28,59,869.30 | 1,47,88,849.70 | (+) 15.00% அதிகம் |

| | | |
|---|---|---|
| 12 | குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்தை தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் | : 04.03.2014 அன்று மேலும் விலைகுறைப்பு செய்துள்ளார். |
| 13 | பேச்சுவார்தைக்குப்பின் ஒப்பத் தொகை ஒப்ப சதவீதம் | : (+)8.50%அதிகம் ரூ.1,39,52,958.19 2013–14 ஆம் ஆண்டின் விலை விவரப்படி |
| 14 | குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதிவின் நிலை, பதிவு நாள். | : பேருந்து சாலைத்துறை முதல் வகுப்பு பதிவு எண்.15/2009–2010 நாள்.06.08.2009 |
| 15 | கூடுதல் பிணை வைப்புத் தொகை செலுத்தப்பட்ட விவரம் அ) கேட்பு காசோலை எண். நாள். | : இல்லை |
| 16 | பணிக்கான நிதி ஆதராம் உள்ளதா ? | : ஆம் |

அ) வரவு செலவுத் திட்ட தலைப்பு : மூலதன நிதி பணி

17 ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் : 90நாட்கள்

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு, ஒப்ப இறுதி நாளான 25.02.2014 அன்று ஒரு ஒப்பம் மட்டும் பெறப்பட்டது. இதில் குறைந்த விலைப்புள்ளி கோரிய திருமதி.எம்.மேனகா அவர்களின் ஒப்பத் தொகை ரூ.1,39,52,958.19/– ஆகும் இது 2013–14 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (+)8.50% அதிகம் ஆகும். அதே சமயம் ஒப்பந்ததாரரின் ஒப்பம் ஒப்ப முன் தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையாலும், அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டும் திருமதி.எம்.மேனகா அவர்களின் ஒப்பத்தை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அவரது ஒப்பத்தொகை 2013–14 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (+)8.50% அதிகம் ஆகும். மேலும், 12.02.2014 அன்று வெளியான வெளி சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் இவரது ஒப்ப விழுக்காடு (–)0.50% குறைவு ஆகும்.

மன்றத் தீர்மான எண்: 512/2007 நாள்:25.09.2007ன்படி

1. அடிப்படை இனங்கங்கள் தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் பொருட்களின் சந்தை கொண்டு, சந்தை விலைவிவரப்பட்டியல் தயாரிப்பதற்கு ( Sourc-Builders Association of India-Southern Centre) இந்து நாளிதழில் வெளியிடப்பட்டது.
2. அவ்வாறு தயாரிக்கப்பட்ட சந்தை விவரப்பட்டியல் கொண்டு ஒப்பந்தங்கள் பெறப்படும்பொழுது ஒப்பீடு (Comparison) செய்து ஒப்பந்தங்களைக்கையாளவும் அனுமதி அளித்துள்ளது.
3. மேலும், சந்தை விலைகளில் மாற்றங்கள் நிகழும் பொழுது, அதற்கேற்றவாறு சந்தை விலை விவரப்பட்டியல் மாற்றியமைத்து ஒப்பீடு (Comparison) செய்து ஒப்பந்தங்களைக் கையாளவும், மன்றம் அனுமதி அளித்துள்ளது.

எனவே, இப்பணிகளின் தன்மையை (Nature of Work) கருத்தில் கொண்டு சந்தை விலைவிவரப்படி கணக்கீட்டு ஒப்பிட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பந்தத்தை திருமதி.எம்.மேனகா அவர்களுக்கு 2013–2014 ஆம் ஆண்டின் அலுவலக விலையை விட (+)8.50% அதிகம் ரூ.1,39,52,958.19/– மதிப்பிற்கு பணிகள் வழங்க ஒப்ப ஆய்வுக்குழுமத்தின் பரிந்துரை வேண்டி மண்டல அலுவலர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

ஒப்ப கூர்ந்தாய்வு குழுமத்தில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டு இப்பணிக்கான ஒப்பத்தை திருமதி.எம்.மேனகா அவர்களுக்கு 2013–14ஆம் ஆண்டின் அலுவலக விலையைவிட (+)8.50% அதிகம் அலுவலக விலையையுடன் ஒப்பிடுகையில் (–)0.50% குறைவு ரூ.1,39,52,958.19/– மதிப்பிற்கு பணிகள் வழங்க ஒப்ப கூர்ந்தாய்வு குழுமம் இப்பணியினை மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தொகை ரூ.1,39,52,958.19/– 2013–14 ஆம் ஆண்டு அலுவலக விலையுடன்ஒப்பிடுகையில் (+)8.50% அதிகமாக உள்ளதால் ஒப்பந்ததாரர் திருமதி. எம்.மேனகா அவர்களுக்கு ஒப்ப பணியாணை வழங்கிட ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மானம் எண்.477/14 நாள்.19.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண்.493/14, நாள்.22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.7.ந.க.எண்.இ1/21052/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.12.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.620/2014 பொருள் எண்.30

**சென்னை மாநகராட்சி – மண்டலம் – 7 (அம்பத்தூர்) – சென்னை பெருநகர வளர்ச்சித்திட்டம் (Chennai Megacity Development Mission) சென்னை மாநகர விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – (Grid III) சிப்பம் –1ல் ஒப்பந்ததாரர். திருவாளர்கள். ஸ்ரீ வெங்கடேஷ்வரா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. பணி மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. சேமிப்பு தொகையில் மறுவகைப்பாடு ஒப்புதல் அதே ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்க அனுமதி**

சென்னை மாநகராட்சி மற்றும் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான, சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதற்கிணங்க இச்சிறப்பு திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், நடைபாதைகள், மற்றும் தெருவிளக்குகள் ஆகிய அடிப்படை வசதிகள் மேம்படுத்துவதற்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன் அடிப்பயையில் சென்னை மாநகராட்சி மண்டலம் – 7 (அம்பத்தூர்) ல் 8 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை கோரப்பட்டது. இதனை தொடர்ந்துஇப்பணியினை சிப்பம்–1ஐ, பணித்தொகை ரூ. 20,16,99,378.60/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இப்பணிக்கு இரு ஒப்பங்கள் பெறப்பட்டது. இதில், குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள் ஸ்ரீ வெங்கடேஷ்வரா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி ஆனது மதிப்பீட்டை விட (+) 16.44% கூடுதலாக கொடுத்துள்ளதை தொடர்ந்து மேற்படி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு செய்யப்பட்டு மதிப்பீட்டை விட கூடுதலாக (+) 7.88 % ஒப்பத்தொகை ரூ.21,75,91,509.80/– க்கு மன்ற தீர்மானம் எண்.21/2014 ன்படி ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்ததாரர் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இத்தருணத்தில் சில சாலைகளில் சாலையின் இருபுறமும் ஒழுங்குப்படுத்துதல் (Alignment) மற்றும் நேர் கோட்டில் சீர் அகலம் கொண்ட சாலை அமைக்கும் போது ஏற்பட்ட அளவு குறைவினால், சேமிப்பு தொகையாக ரூ. 2,99,00,000.00 ரூபாய் இரண்டு கோடியே தொன்னூற்று ஒன்பது இலட்சம் மட்டும்) உள்ளது.

இந்நிலையில் பொதுமக்கள், வேண்டுதலின்படி, அவசியம் அவசரம் கருதியும் போக்குவரத்தின் நலன் கருதியும் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்–III சேமிப்பு தொகையிலிருந்து புதிதாக சாலைகள் அமைக்க எடுக்கப்பட்ட சாலைகள், ஏற்கனவே சிப்பம்–1ல் எடுக்கப்பட்ட சாலைகள் அருகாமையில் உள்ளது.

அப்பணிக்கு அதே சி.பி.ஆர். (CBR) எண் உள்ளதால், முந்தைய வடிவமைப்பு இப்பணிகளுக்கும் பொருந்தும். மேலும் புதிதாக எடுக்கப்பட்டுள்ள சாலையின் பரப்பளவு ஒப்பீடு செய்யப்பட்டதில், அதன் பரப்பளவு 16157,00 ச.மீ ஆக உள்ளது. எனவே, அதே ஒப்பந்ததாரர் மூலம் இம்மாறுப்பாட்டினால் ஏற்பட்டுள்ள பணிகளை செய்யலாமென கருதப்படுகிறது. இந்நிலையில் ஒப்பந்ததாரர் திரு.வெங்கடேஸ்வரா கன்ன்ஸடட்ரக்சன்ஸ் அவர்களின் சிப்பம் 1ல் அளித்துள்ள ஒப்ப சதவீதத்தின் படி பணிகளை மேற்கொள்ள இசைவு கடிதம் அளித்துள்ளார்.

மேற்படி ஒப்பங்கள் இப்பணி இனங்களின் மொத்த அளவுகளுக்காக தயார் செய்யப்பட்டு ஒப்பம் கோரப்பட்டுள்ளதால் முழுமையாக இப்பணியினை மேற்கொண்டு முடிக்க வேண்டியது அவசியமாகிறது.

கீழ்கண்ட சாலைகளில் சேமிப்பு தொகையில் பணிகளை மேற்கொள்வதற்கு பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண் | கோட்ட எண் | புதியதாக மேற்கொள்ளப்படவிருக்கும் சாலைகளின் பெயர் | பரப்பளவு ச.மீ | தொகை ரூபாய் (லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 80 | பிரகாசம் காரு தெரு | 1800 | 25.00 |
| 2 | 80 | நெடுஞ்செழியன் தெரு | 1350 | 25.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 80 | முனுசாமி பிள்ளை தெரு | **1100** | **23.00** |
| 4 | 80 | பானு நகர் 30வது அவென்யூ(குறுக்கு) | **600** | **7.00.** |
| 5 | 80 | பாரத ரத்னா ராஜீவ் காந்தி நகர் முதல் தெரு | **3360** | **49.00** |
| 6 | 80 | வாகஸ்வரி அம்மன் தெரு | **2310** | **35.00** |
| 7 | 80 | அண்ணா தெரு | **1260** | **25.00** |
| 8 | 80 | சுபாஷ் சுந்தர போஸ் தெரு | **900** | **18.00** |
| 9 | 80 | ராஜீவ் காந்தி தெரு | **630** | **15.00** |
| 10 | 80 | இந்திரா காந்தி தெரு | **390** | **10.00** |
| 11 | 80 | ராஜகோபால் தெரு | 300 | 6.00 |
| 12 | 80 | ஈ.வி.ஆர்.தெரு | 950 | 20.00 |
| 13 | 80 | கோவிந்தன் தெரு | 595 | 7.00 |
| 14 | 80 | விவேகானந்தர் தெரு | 612 | 9.00 |
| | | | | **மொத்தம் ரூ. 299 லட்சம்** |

மேற்கண்ட பணிகளை பொது மக்கள் நலன் கருதி பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால், ஏற்கனவே, சிப்பம்–1ன் பணியை செய்து வந்த ஒப்பந்ததாரரான திரு. ஸ்ரீ வெங்கடேஷ்வரா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு சிப்பம்–1ல் செய்யப்பட்டுள்ள பணிகளில் சேமிப்பு தொகை உள்ளதால், அதே ஒப்பந்ததாரரான திரு. ஸ்ரீ வெங்கடேஷ்வரா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களை கொண்டு பணிகளை மேற்கொள்ளவும், அதே ஒப்பந்த சதவீதத்தின்படி 25 சதவீதத்திற்கு மிகாமலும், ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் ஒப்ப உடன்படிக்கையின்படி பணி மேற்கொள்ளவும், மேலும், இப்பணியினை Project Sanction Committee ஒப்புதலுடன் பணியினை செய்திடவும், நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது .

“19.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.470/14 நாள்.19.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண்.488/14, நாள்.22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.7.ந.க.எண்.இ1/21056/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19–12–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.621/2014 **பொருள் எண்.31**

**சென்னை மாநகராட்சி – மண்டலம் – 7 (அம்பத்துார்) – சென்னை பெருநகர வளர்ச்சித்திட்டம் (Chennai Megacity Development Mission) சென்னை மாநகர விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – (Grid III) சிப்பம் –5ல் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். குருமூர்த்தி இன்ஜினியரிங் என்டர்பிரைசஸ் அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. பணி மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. சேமிப்பு தொகையில் மறுவகைப்பாடு ஒப்புதல் அதே ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்க அனுமதி**

சென்னை மாநகராட்சி மற்றும் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான, சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதற்கிணங்க இச்சிறப்பு திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், நடைபாதைகள், மற்றும் தெருவிளக்குகள் ஆகிய அடிப்படை வசதிகள் மேம்படுத்துவதற்காக கண்டுள்ள அரசாணையின் படி அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன் அடிப்பயைால் சென்னை மாநகராட்சி மண்டலம்–7 (அம்பத்துார்)ல் 8 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை கோரப்பட்டது. இதனை தொடர்ந்து, இப்பணியினை சிப்பம்–5ல் கண்டுள்ளபடி பணித்தொகை ரூ.20,00,99,883.34/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இப்பணிக்கு இரு ஒப்பங்கள் பெறப்பட்டது. இதில், குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள். குருமூர்த்தி இன்ஜினியரிங் என்டர்பிரைசஸ் நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி ஆனது மதிப்பீட்டை விட (+)14.45% கூடுதலாக கொடுத்துள்ளதை தொடர்ந்து மேற்படி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு செய்யப்பட்டு மதிப்பீட்டை விட கூடுதலாக (+) 8.97% ஒப்பத்தொகை ரூ.22,90,20,071.00/–க்கு மன்ற தீர்மானம் எண்.24/2014 ன்படி ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்ததாரர் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இத்தருணத்தில் சில சாலைகளில் சாலையின் இருபுறமும் ஒழுங்குப்படுத்துதல் ( Alignment) மற்றும் நேர் கோட்டில் சீர் அகலம் கொண்ட சாலை அமைக்கும் போது ஏற்பட்ட அளவு குறைவினால், சேமிப்பு தொகையாக ரூ. 2,55,88,571.48 (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்தைந்து லட்சத்து என்பத்தெட்டாயிரத்து ஐநூாற்று எழுபத்தி ஒன்று பைசா நாற்பத்தெட்டு மட்டும்) உள்ளது.

இந்நிலையில் பொதுமக்கள், வேண்டுதலின்படி, அவசியம் அவசரம் கருதியும் போக்குவரத்தின் நலன் கருதியும் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்–III சேமிப்பு தொகையிலிருந்து புதிதாக சாலைகள் அமைக்க எடுக்கப்பட்ட சாலைகள், ஏற்கனவே சிப்பம்–5ல் எடுக்கப்பட்ட சாலைகள் அருகாமையில் உள்ளது. அப்பணிக்கு அதே சி.பி.ஆர். (CBR) எண் உள்ளதால், முந்தைய வடிவமைப்பு இப்பணிகளுக்கும்
பொருந்தும். மேலும் புதிதாக எடுக்கப்பட்டுள்ள சாலையின் பரப்பளவு ஒப்பீடு செய்யப்பட்டதில், அதன் பரப்பளவு 9872.00ச.மீ ஆக உள்ளது. எனவே, அதே ஒப்பந்ததாரர் மூலம் இம்மாறுப்பாட்டினால் ஏற்பட்டுள்ள பணிகளை செய்யலாமென கருதப்படுகிறது. இந்நிலையில் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். குருமூர்த்தி இன்ஜினியரிங் என்டர்பிரைசஸ் அவர்களின் சிப்பம் 5ல் அளித்துள்ள ஒப்ப சதவீதத்தின் படி பணிகளை மேற்கொள்ள இசைவு கடிதம் அளித்துள்ளார்.

மேற்படி ஒப்பங்கள் இப்பணி இனங்களின் மொத்த அளவுகளுக்காக தயார் செய்யப்பட்டு ஒப்பம் கோரப்பட்டுள்ளதால் முழுமையாக இப்பணியினை மேற்கொண்டு முடிக்க வேண்டியது அவசியமாகிறது.

கீழ்கண்ட சாலைகளில் சேமிப்பு தொகையில் பணிகளை மேற்கொள்வதற்கு பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண் | கோட்ட எண் | புதியதாக மேற்கொள்ளப்படவிருக்கும் சாலைகளின் பெயர் | பரப்பளவு ச.மீ | தொகை ரூபாய் (லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 92 | கெங்கு நகர் பிரதான சாலை | 672 | 80.00 |
| 2 | 79 | பெருமாள்கோயில் தெரு | 450 | 8.60. |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 79 | மாசிலாமணி தெரு | 700 | 13.38 |
| 4 | 79 | சக்திவிநாயகர் கோயில் தெரு | 1000 | 19.12 |
| 5 | 79 | லெனின் நகர் 10வது மெயின் ரோடு | 1100 | 21.03 |
| 6 | 79 | லஷ்மி அம்மன் நகர் கம்பர் மற்றும் கக்கன்ஜி தெரு | 1800 | 34.41 |
| 7 | 79 | கலைஞர் கருணாநிதி தெரு | 1250 | 23.90 |
| 8 | 79 | ஜீவானந்தம் தெரு | 1500 | 28.68 |
| 9 | 79 | அண்ணா தெரு | 1400 | 26.76 |
| மொத்தம் ரூ.255.88லட்சம் | | | | |

மேற்கண்ட பணிகளை பொது மக்கள் நலன் கருதி பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால், ஏற்கனவே, சிப்பம்–5ன் பணியை செய்து வந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். குருமூர்த்தி இன்ஜினியரிங் என்டர்பிரைசஸ் அவர்களுக்கு சிப்பம்–5ல் செய்யப்பட்டுள்ள பணிகளில் சேமிப்பு தொகை உள்ளதால், அதே ஒப்பந்ததாரரான திருவாளர்கள். குருமூர்த்தி இன்ஜினியரிங் என்டர்பிரைசஸ் அவர்களை கொண்டு பணிகளை மேற்கொள்ளவும், அதே ஒப்பந்த சதவீதத்தின்படி 25 சதவீதத்திற்கு மிகாமலும், ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் ஒப்ப உடன்படிக்கையின்படி பணி மேற்கொள்ளவும், மேலும், இப்பணியினை Project Sanction Committee ஒப்புதலுடன் பணியினை செய்திடவும் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது .

“19.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின்தீர்மான எண்.471/14 நாள்.19.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண்.489/14, நாள்.22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.அ.7.ந.க.எண்.இ1/21052/1/2013</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19–12–2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.622/2014 **பொருள் எண்.32**

**<u>மண்டலம் – 7 (அம்பத்தூர்) – சென்னை பெருநகர வளர்ச்சித்திட்டம் ( Chennai Megacity Development Mission) சென்னை மாநகர விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – (Grid III) சிப்பம் –2ல் ஒப்பந்ததாரர். திருவாளர்கள். ஆர்.கே. & சன்ஸ் அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. பணி மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. சேமிப்பு தொகையில் மறுவகைப்பாடு ஒப்புதல் அதே ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்க அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி மற்றும் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான, சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதற்கிணங்க இச்சிறப்பு திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், நடைபாதைகள், மற்றும் தெருவிளக்குகள் ஆகிய அடிப்படை வசதிகள் மேம்படுத்துவதற்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சி மண்டலம்–7 (அம்பத்தூர்) ல் 8 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை கோரப்பட்டது. இதனை தொடர்ந்து, இப்பணியினை சிப்பம்–2ஐ, மதிப்பீடு தொகை ரூ. 19,98,99,988.48 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இப்பணிக்கு இரு ஒப்பங்கள் பெறப்பட்டது. இதில், குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள் ஆர்.கே.&சன்ஸ் நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி ஆனது மதிப்பீட்டை விட (+) 16.44% கூடுதலாக கொடுத்துள்ளதை தொடர்ந்து மேற்படி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு செய்யப்பட்டு மதிப்பீட்டை விட கூடுதலாக (+) 7.08 % ஒப்பத்தொகை ரூ. 21,60,37,167.35/– க்கு மன்ற தீர்மானம் எண்.22/2014 ன்படி ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்ததாரர் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இத்தருணத்தில் சில சாலைகளில் சாலையின் இருபுறமும் ஒழுங்குப்படுத்துதல் (Alignment) மற்றும் நேர் கோட்டில் சீர் அகலம் கொண்ட சாலை அமைக்கும்போது ஏற்பட்ட அளவு குறைவினால், சேமிப்பு தொகையாக ரூ.2.65,89,963.37 (ரூபாய் இரண்டு கோடியே அறுபத்தைந்து லட்சத்து என்பத்தி ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தி மூன்று மற்றும் முப்பத்து ஏழு பைசா மட்டும்) உள்ளது.

இந்நிலையில் பொதுமக்கள், வேண்டுதலின்படி, அவசியம் அவசரம் கருதியும் போக்குவரத்தின் நலன் கருதியும் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்–III சேமிப்பு தொகையிலிருந்து புதிதாக சாலைகள் அமைக்க எடுக்கப்பட்ட சாலைகள், ஏற்கனவே சிப்பம்–2ல் எடுக்கப்பட்ட சாலைகள் அருகாமையில் உள்ளது. அப்பணிக்கு அதே சி.பி.ஆர். (CBR) எண் உள்ளதால், முந்தைய வடிவமைப்பு இப்பணிகளுக்கும் பொருந்தும். மேலும் புதிதாக எடுக்கப்பட்டுள்ள சாலையின் பரப்பளவு ஒப்பீடு செய்யப்பட்டதில், அதன் பரப்பளவு 14110.00 ச.மீ ஆக உள்ளது. எனவே, அதே ஒப்பந்ததாரர் மூலம் இம்மாறுப்பாட்டினால் ஏற்பட்டுள்ள பணிகளை செய்யலாமென கருதப்படுகிறது. இந்நிலையில் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ஆர்.கே.& சன்ஸ் அவர்களின் சிப்பம் 2ல் அளித்துள்ள ஒப்ப சதவீதத்தின் படி பணிகளை மேற்கொள்ள இசைவு கடிதம் அளித்துள்ளார்.

மேற்படி ஒப்பங்கள் இப்பணி இனங்களின் மொத்த அளவுகளுக்காக தயார் செய்யப்பட்டு ஒப்பம் கோரப்பட்டுள்ளதால் முழுமையாக இப்பணியினை மேற்கொண்டு முடிக்க வேண்டியது அவசியமாகிறது.

கீழ்கண்ட சாலைகளில் சேமிப்பு தொகையில் பணிகளை மேற்கொள்வதற்கு பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண். | கோட்ட எண் | புதியதாக மேற்கொள்ளப்படவிருக்கும் சாலைகளின் பெயர் | பரப்பளவு ச.மீ | தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1 | 82 | சுந்தரமூர்த்தி தெரு | 860 | 16.21 |
| 2 | 82 | காந்தி 1வது, 2வது,குறுக்கு தெரு | 1300 | 24.50 |
| 3 | 82 | காந்தி தெரு | 1450 | 27.33 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | 82 | காந்தி 3வது, திருவள்ளுவர் தெரு | 900 | 16.96 |
| 5 | 82 | பாரத் நகர் 2வது தெரு | 1000 | 18.85 |
| 6 | 82 | ஐயப்பன் தெரு | 950 | 17.90 |
| 7 | 82 | N S K தெரு, அந்தோணியர் தெரு, காவேரி தெரு | 2900 | 54.66 |
| 8 | 82 | சரோஜினி தெரு, யமுனா தெரு | 1250 | 23.56 |
| 9 | 82 | ஜகதீஸ்வரர் தெரு | 1800 | 33.93 |
| 10 | 82 | கக்கன்ஜி தெரு | 800 | 15.08 |
| 11 | 82 | S.S.நகர் | 900 | 16.96 |
| மொத்தம் ரூ.2,65,89,963.37 | | | | |

மேற்கண்ட பணிகளை பொது மக்கள் நலன் கருதி பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால், ஏற்கனவே, சிப்பம் 2ன் பணியை செய்து வந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். ஆர்.கே.& சன்ஸ் அவர்களுக்கு சிப்பம் 2ல் செய்யப்பட்டுள்ள பணிகளில் சேமிப்பு தொகை உள்ளதால், அதே ஒப்பந்ததாரரான திருவாளர்கள். ஆர்.கே.&சன்ஸ் அவர்களை கொண்டு பணிகளை மேற்கொள்ளவும், அதே ஒப்பந்த சதவீதத்தின்படி 25 சதவீதத்திற்கு மிகாமலும், ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் ஒப்ப உடன்படிக்கையின்படி பணி மேற்கொள்ளவும், மேலும், இப்பணியினை Project Sanction Committee ஒப்புதலுடன் பணியினை செய்திடவும், நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மானம் எண்.479/14, நாள்.19.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண்.497/14 நாள்.22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.7.ந.க.எண்.இ1/21058/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19–12–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.623/2014 **பொருள் எண்.33**

**சென்னை மாநகராட்சி – மண்டலம் – 7 (அம்பத்தூர்) – சென்னை பெருநகர வளர்ச்சித்திட்டம் (Chennai Megacity Development Mission) சென்னை மாநகர விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – (Grid III) சிப்பம் –7ல் ஒப்பந்ததாரர். திருவாளர்கள். G. நாகேஷ்வரன் அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. பணி மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. சேமிப்பு தொகையில் மறுவகைப்பாடு ஒப்புதல் அதே ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்க அனுமதி**

சென்னை மாநகராட்சி மற்றும் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான, சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதற்கிணங்க இச்சிறப்பு திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், நடைபாதைகள், மற்றும் தெருவிளக்குகள் ஆகிய அடிப்படை வசதிகள் மேம்படுத்துவதற்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சி மண்டலம்–7 (அம்பத்தூர்) ல் 8 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை கோரப்பட்டது.இதனை தொடர்ந்து, இப்பணியினை சிப்பம் – 7ஐ, பணித்தொகை ரூ. 205955551/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இப்பணிக்கு இரு ஒப்பங்கள் பெறப்பட்டது. இதில், குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள். **G. நாகேஷ்வரன்** நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி ஆனது மதிப்பீட்டை விட (+) 21.97% கூடுதலாக கொடுத்துள்ளதை தொடர்ந்து மேற்படி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு செய்யப்பட்டு மதிப்பீட்டை விட கூடுதலாக (+) 9.25% ஒப்பத்தொகை ரூ. 225007100.12/– க்கு மன்ற தீர்மானம் எண்.25/2014 ன்படி ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்ததாரர் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இத்தருணத்தில் சில சாலைகளில் சாலையின் இருபுறமும் ஒழுங்குப்படுத்துதல் ( Alignment) மற்றும் நேர் கோட்டில் சீர் அகலம் கொண்ட சாலை அமைக்கும் போது ஏற்பட்ட அளவு குறைவினால், சேமிப்பு தொகையாக ரூ. 36347485/–(ரூபாய் மூன்று கோடியே அறுபத்தி மூன்று லட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து நாநூற்று எண்பத்தைந்து மட்டும்)

இந்நிலையில் பொதுமக்கள், வேண்டுதலின்படி, அவசியம் அவசரம் கருதியும் போக்குவரத்தின் நலன் கருதியும் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்–III சேமிப்பு தொகையிலிருந்து புதிதாக சாலைகள் அமைக்க எடுக்கப்பட்ட சாலைகள், ஏற்கனவே சிப்ப**ம்–7ல்** எடுக்கப்பட்ட சாலைகள் அருகாமையில் உள்ளது. அப்பணிக்கு அதே சி.பி.ஆர். (CBR) எண் உள்ளதால், முந்தைய வடிவமைப்பு இப்பணிகளுக்கும் பொருந்தும். மேலும் புதிதாக எடுக்கப்பட்டுள்ள சாலையின் பரப்பளவு ஒப்பீடு செய்யப்பட்டதில், அதன் பரப்பளவு 7425 ச.மீ ஆக உள்ளது. எனவே, அதே ஒப்பந்ததாரர் மூலம் இம்மாறுப்பாட்டினால் ஏற்பட்டுள்ள பணிகளை செய்யலாமென கருதப்படுகிறது. இந்நிலையில் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். **G. நாகேஷ்வரன்** அவர்களின் சிப்பம் 7ல் அளித்துள்ள ஒப்ப சதவீதத்தின் படி பணிகளை மேற்கொள்ள இசைவு கடிதம் அளித்துள்ளார்.

மேற்படி ஒப்பங்கள் இப்பணி இனங்களின் மொத்த அளவுகளுக்காக தயார் செய்யப்பட்டு ஒப்பம் கோரப்பட்டுள்ளதால் முழுமையாக இப்பணியினை மேற்கொண்டு முடிக்க வேண்டியது அவசியமாகிறது.

கீழ்கண்ட சாலைகளில் சேமிப்பு தொகையில் பணிகளை மேற்கொள்வதற்கு பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண். | கோட்ட எண் | புதியதாக மேற்கொள்ளப்படவிருக்கும் சாலைகளின் பெயர் | பரப்பளவு ச.மீ | தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1 | 89 | அக்ஷயா காலனி 1வது தெரு | 990 | 18.50 |
| 2 | 89 | அக்ஷயா காலனி 3வது தெரு | 907.5 | 17.02 |
| 3 | 89 | ஒலிம்பிக் காலனி மெயின் ரோடு | 621.5 | 11.66 |
| 4 | 89 | மதுரைவீரன் தெரு | 385 | 7.3 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | 93 | 5வது பிளாக் பர்னர் சாலை 1வது தெரு | 120 | 4.38 |
| 6 | 93 | 5வது பிளாக் பர்னர் சாலை 2வது தெரு | 120 | 4.38 |
| 7 | 93 | 5வது பிளாக் பர்னர் சாலை 3வது தெரு | 120 | 4.38 |
| 8 | 93 | 5வது பிளாக் பர்னர் சாலை 4வது தெரு | 120 | 4.38 |
| 9 | 93 | 5வது பிளாக் பர்னர் சாலை 5வது தெரு | 120 | 4.38 |
| 10 | 93 | 5வது பிளாக் பர்னர் சாலை 6வது தெரு | 164 | 6.00 |
| 11 | 93 | 5வது பிளாக் பர்னர் சாலை 18வது தெரு | 290 | 10.52 |
| 12 | 93 | 5வது பிளாக் பர்னர் சாலை 19வது தெரு | 164 | 6 |
| 13 | 93 | 5வது பிளாக் பர்னர் சாலை 20வது தெரு | 164 | 6 |
| 14 | 93 | 5வது பிளாக் பர்னர் சாலை 21வது தெரு | 164 | 6 |
| 15 | 93 | 5வது பிளாக் பர்னர் சாலை 22வது தெரு | 101 | 3.71 |
| 16 | 93 | 5வது பிளாக் பர்னர் சாலை 23வது தெரு | 164 | 6 |
| 17 | 93 | பிள்ளையார் கோயில் தெரு | 2400 | 83.41 |
| 18 | 93 | பாரி சாலை 1வது குறுக்கு தெரு | 310 | 11.17 |
| 19 | 93 | வண்டியம்மன் கோயில் தெரு, மழைநீர் கால்வாய் | 520 | 79.44 |
| 20 | 93 | பாடி குப்பம் பிள்ளையார் கோயில் தெரு மற்றும் நேரு தெரு | 500 | 76.13 |
| | | | | மொத்தம் ரூ.370.74 |

மேற்கண்ட பணிகளை பொது மக்கள் நலன் கருதி பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால், ஏற்கனவே, சிப்பம் 7ன் பணியை செய்து வந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். **G. நாகேஷ்வரன்** அவர்களுக்கு சிப்பம் 7ல் செய்யப்பட்டுள்ள பணிகளில் சேமிப்பு தொகை உள்ளதால், அதே ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.**G. நாகேஷ்வரன்** அவர்களை கொண்டு பணிகளை மேற்கொள்ளவும், அதே ஒப்பந்த சதவீதத்தின்படி 25 சதவீதத்திற்கு மிகாமலும், ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் ஒப்ப உடன்படிக்கையின்படி பணி மேற்கொள்ளவும், மேலும், இப்பணியினை Project Sanction Committee ஒப்புதலுடன் பணியினை செய்திடவும், நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மானம் எண்.480/14, நாள்.19.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண்.498/14 நாள்.22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.5.ந.க.எண்.இ2/12012/ 1 to5 /2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19–12–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.624/2014 பொருள் எண்.34

**மண்டலம்–5, பகுதி–12 முதல் 14 வரை வார்டு–50, 51, 53, 54, 57, 58, 59, 60, 61, 62 மற்றும் 63ல் தயார் நிலைக் கலவைக் கொண்டு சிமென்ட் கான்கீரிட் சாலை அமைக்கும் பணிக்கு குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர் ஆர். கிருஷ்ணமூர்த்தி அண்ட்கோ அவர்களுக்கு பணியாணை வழங்கப்பட்டது – உரிய பணிக்காலத்திற்குள் பணிகள் முடிக்கப்படவில்லை – பணியை மீண்டும் தொடங்கி முடிக்க – அனுமதி**

மண்டலம்–5, பகுதி–12 முதல் 14 வரை வார்டு–50, 51, 53, 54, 57, 58, 59, 60, 61, 62 மற்றும் 63 ஆகிய வார்டுகள் உள்ள 132 சாலைகளை தயார் நிலைக் கலவையை கொண்டு சிமென்ட் கான்கீரிட் சாலை அமைக்கும் பணிக்கு முறையே ஐந்து கோப்புகளுக்கு ஒப்ப விதி எண் 53–1ன் படி ஆறு மாதங்களில் முடிக்கப்பட வேண்டும் என்று நிபந்தனையின் அடிப்படையில் ஐந்து கோப்புகளுக்கும் தனித்தனியாக 28.02.2014 அன்று பணியாணை ஒப்பங்கள் ஏற்பு கடிதம் வழங்கப்பட்டது.

ஒப்ப உடன்படிக்கையில் ஒப்பந்ததாரர் மேற்கண்ட பணிகளுக்கான ஐந்து கோப்புகளுக்கும் காப்புறுதி தொகையை வங்கி இருப்பு தொகையாக (Bank Guarantee)யாக வழங்கி அதன் வங்கி உண்மை சான்றிதழ் பெறப்பட்டு 28.08.2014ல் ஒப்ப உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.

14.10.2014 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட பணிக்கு பணியாணை ஒப்பந்ததாரர் ஏற்பு கடிதம் வழங்கப்பட்டு 28.02.2014லிருந்து இப்பணியை ஆறு மாதங்களுக்குள் முழுமையாக முடிக்கப்பட வேண்டும். ஆனால் ஒப்பந்ததாரர் 27.08.2014 அன்று வரை மொத்தம் உள்ள 132 சாலைகளில் 35 சாலைகள் மட்டும் M40 கான்கீரிட் சாலை அமைக்கப்பட்டிருந்தது. இவற்றில் பேவர் பிளாக்குகள் போட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மீதியுள்ள 97 சாலைகள் இதுவரை தொடங்கப்படாத காரணத்தால் ஒப்பந்ததாரக்கு வழங்கப்பட்ட ஒப்பத்தை ரத்து செய்து காப்புறுதி தொகையை பறிமுதல் செய்து கறுப்பு பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

ஒப்பந்ததாராக திருவாளர்.ஆர். கிருஷ்ணமூர்த்தி அண்ட் கோ அவர்கள் மேற்கண்ட பணிக்கு பணியாணை ஒப்பங்கள் ஏற்பு கடிதம் கிடைக்கப்பெற்றவுடன் மேற்கண்ட சாலை பணிகளுக்காக ஆய்வுகள் மேற்கொண்ட தொடங்கப்படவிருந்த நிலையில் பாராளுமன்ற பொது தேர்தல் அறிவிக்கப்பட்டு தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்தபடியால் பணிகள் உடனடியாக துவங்க இயலவில்லை என்றும் மேலும் தேர்தல் நடத்தை விதிகள் மே மாதம் இறுதியில் முடிவுற்ற நிலையில் சுமார் மூன்று மாதங்கள் சென்றபின் பணிகள் தொடங்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஒப்பந்ததாரர் தனது கடிதத்தில் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்ற நிலையில் சேவைதுறைகளின் பணிகள் சில இடையூராக இருந்தது எனவும் மற்றும் மழையின் காரணமாக பணியில் காலதாமதம் ஏற்பட்டது எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் லாரிகள் வேலை நிறுத்தத்தின் காரணமாக கட்டுமான பொருட்கள் சரிவார கிடைக்கவில்லை என்றும் பணி மேற்கொண்ட சாலைகள் குறுகலான, நெரிசலான சாலைகளாக இருந்தபடியாகவும், ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடி நாள் முழுவதும் பணி மேற்கொள்ள இயலாமல் இரவு நேரத்தில் சுமார் 6 மணி நேர அளவில் மட்டுமே பணி செய்ய முடிந்தது என்றும் இவ்வாறு பல தடைகளிடையிலும் பணிகள் மேற்கொண்டு வருவதாகவும் விடுபட்ட சாலை பணிகளை மேற்கொள்ள 28.02.2015 வரை ஒப்ப கால நீடிப்பு கோருவதாகவும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் ஒப்பந்ததாரர் திருவாளர்.ஆர். கிருஷ்ணமூர்த்தி அண்ட் கோ அவர்கள் இதுவரை ஒப்படைக்கப்பட்ட 132 சாலைகளில் தற்போது 40 சாலைகளில் M40 கான்கீரிட் போடப்பட்டு முடிக்கப்பட்டுள்ள நிலையில் 20 சாலைகளில் பேவர் பிளாக் போட்டு முடிக்கப்பட்டுள்ளது. மீதிமுள்ள 92 சாலைகளை 28.02.2015க்குள் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணியை முடிக்க ஆணை வழங்கலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. ஒப்பந்ததாரர் வழங்கிய அட்டவணையின் படி பணியை முடிக்கப்பட வேண்டும்.
2. மேற்கண்ட பணிக்கு 28.02.2015க்கு பின்னர் எக்காரணத்தை கொண்டும் ஒப்ப நீடிப்பு வழங்கப்படமாட்டாது.
3. மேற்கண்ட பணியை 28.02.2015க்கு பின்னரும் பணி முடிக்காமல் இருந்ததால் வழங்கப்பட்ட ஒப்பத்தை ரத்து செய்யவும் காப்புறுதி தொகை பறிமுதல் செய்யவும், ஒப்பந்ததாரயை மூன்று ஆண்டு கருப்பு பட்டியல் சேர்க்க ஒப்ப விதிகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**எனவே,**

1. மண்டலம்–5, பகுதி–12,13 மற்றும் 14 வார்டு–50,51,53,54,57,58,59,60,61,62 மற்றும் 63ல் இதுவரை தொடங்கப்படாதவுள்ள 97 சாலைகளை ஒப்பந்ததாரர் வழங்கிய சாலை அமைக்கும் அட்டவணை ஏற்று மேற்கொண்டு முடிக்கவும்.
2. மேற்கண்ட பணிக்கு ஒப்ப நீடிப்பை மேற்கண்ட நிபந்தனையின் அடிப்படையில் வழங்கவும்,
3. மேற்கண்ட பணிக்கு வழங்கப்பட்ட ஒப்ப பணிக்காலம் ஒப்ப ஏற்பு கடிதத்தின் அடிப்படையில் 28.02.2014 முதல் ஆறு மாதம் என்பது 27.08.2014 முடிவடையாததால் மேலும் பணியை தொடர்ந்து 28.02.2015குள் முடிக்க அனுமதி வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள நிபந்தனை மற்றும் இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''19.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மானம் எண்.482/14, நாள்.19.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண்.500/14 நாள்.22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**நி.நி.பி.ந.க.எண்.க&மா–1/1834/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.12.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.625/2014 **பொருள் எண்.35**

**கடன் மற்றும் மான்யம் – 10000 சாலைகள் திட்டம் – திட்ட மதிப்பீடு ரூ.865.56 கோடி – டுபிட்கோ – திருத்திய திட்ட மதிப்பீடு ரூ.297.23 கோடி – டுபிட்கோ MIDF – ரூ.148.50 கோடி – கடன் வழங்க அனுமதி பெறப்பட்டது – டுபிட்கோ சொந்த நிதி – ஹட்கோ நிதி – ரூ.148.50 கோடி கடன் பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி**

சென்னை மாநகராட்சி 10000 சாலைகள் திட்டத்தின் கீழ் 2014–15 நிதியாண்டில் ரூ.865.56 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னை மாநகராட்சி நிதி நிலையினை கருத்திற்கொண்டு, முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஆணைப்படி, டுபிட்கோ நிதி நிறுவனத்திடமிருந்து மேற்கண்ட பணிக்காக ரூ.865.56 கோடி கடன் பெறுவதற்கு அந்நிறுவனத்தினை அணுகியதில், டுபிட்கோ நிதி நிறுவனத்தின் கடிதத்தில், இப்பணிக்காக திட்ட மதிப்பீட்டில் ரூ.432.78 கோடி மட்டும் டுபிட்கோ எம்.ஐ.டி.எப். நிதியின் கீழ் 4 விழுக்காடு வட்டியில் 15 ஆண்டு காலத்தில் திருப்பி செலுத்தும் வகையில் கடன் வழங்க முன் வந்ததால், மன்ற தீர்மாமத்தில் இக்கடனை பெறுவதற்கு அனுமதி பெறப்பட்டது. மேலும், எஞ்சிய 50 விழுக்காடு தொகை ரூ.432.78 கோடியினை தோராயமாக 11 விழுக்காடு ஆண்டு வட்டியில் டுபிட்கோ சொந்த நிதியிலிருந்து கடன் வழங்க கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக இப்பணிக்கான திட்ட மதிப்பீட்டில் எஞ்சிய 50 விழுக்காடு தொகை ரூ.432.78 கோடியினை தோராயமாக 9 விழுக்காடு ஆண்டு வட்டியில் டி.என்.யு.டி.எப். நிதி நிறுவனத்திடமிருந்து கடன் பெறுவதற்காக 12.09.2014 நாளிட்ட முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஆணைப்படி, அந்நிறுவனத்தினை அணுகியதில், அந்நிறுவனம் 07.11.2014 நாளிட்ட கடிதத்தில் இப்பணிக்கான கடன் வழங்க இயலாது என தெரிவித்துள்ளது.

டுபிட்கோ நிதி நிறுவனத்தின் கடிதத்தில், 10000 சாலைப் பணிக்காக திட்ட மதிப்பீடு ரூ.865.56 கோடியில், 50 விழுக்காடு ரூ.432.78 கோடி 4 விழுக்காடு ஆண்டு வட்டியில் 15 ஆண்டு காலத்தில் திருப்பி செலுத்தும் வகையில் கடன் வழங்க அனுமதி அளித்துள்ளது. இதற்கு மன்ற தீர்மானம் எண்.560/2014, நாள்25.10.2014 வாயிலாக மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில், டுபிட்கோ நிதி நிறுவனத்தின் தொழில் நுட்ப குழுவின் பரிந்துரைப்படி, மேற்கண்ட திட்ட மதிப்பீடு ரூ.865.56 கோடியிலிருந்து, ரூ.297.23 கோடி (1996 சாலைகள்) மட்டும் ஒப்புதல் அளித்து, இதில் 50 விழுக்காடு ரூ.148.615 கோடி மட்டும் 4 விழுக்காடு வட்டியில் 15 ஆண்டு காலம் திருப்பி செலுத்தும் வகையில் கடன் வழங்க அனுமதி அளித்துள்ளதனை தொடர்ந்து, முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் ஆணைப்படி, இக்கடனுக்கான கடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

டுபிட்கோ நிதி நிறுவனம் அனுமதி அளித்துள்ள ரூ.297.23 கோடி திட்ட மதிப்பீட்டில், டுபிட்கோ சொந்த நிதியிலிருந்து 11 விழுக்காடு ஆண்டு வட்டியில் ரூ.148.615 கோடி கடன் பெற்றும், அவ்வாறு கிடைக்கப்பெறாத பட்சத்தில் ஹட்கோ நிதி நிறுவனத்திடமிருந்து, அரசு பிணையுடன் கூடிய 11 விழுக்காடு ஆண்டு வட்டியில் (ஹட்கோ 10.75 + அரசு பிணை– 0.25) கடன் பெற்றும் இப்பணிகளுக்கான செலவினத்தினை மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

அ) 10000 சாலைப் பணிகளுக்காக, டுபிட்கோ நிதி நிறுவனத்திடமிருந்து ரூ.148.615 கோடி டுபிட்கோ சொந்த நிதியிலிருந்து 11 விழுக்காடு ஆண்டு வட்டியில் 15 ஆண்டு காலம் திருப்பி செலுத்தும் வகையில் கடன் பெறுவதற்கும்,

ஆ) இப்பணிக்காக டுபிட்கோ நிதி நிறுவனத்திடமிருந்து கடன் கிடைக்கப் பெறாத பட்சத்தில், ஹட்கோ நிதி நிறுவனத்திடமிருந்து ரூ.148.615 கோடி அரசு பிணையுடன் கூடிய 11 விழுக்காடு ஆண்டு வட்டியில் (ஹட்கோ 10.75 +அரசு பிணை– 0.25) கடன் பெறுவதற்கும்,

மேற்கண்ட ‘‘அ’’ மற்றும் ‘‘ஆ’’ இனங்களுக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் ஒப்புதலுடன் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 22.12.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.12.2014 அன்று தீர்மான எண்.504/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**நி.நி.பி.ந.க.எண்.க&மா–1/0182/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.12.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.626/2014 **பொருள் எண்.36**

**கடன் மற்றும் மான்யம் – சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (CMCDM-III) – 2013–14 – திட்ட மதிப்பீடு ரூ.400.31 கோடி – ரூ.300.23 கோடி அரசு மான்யம் அனுமதி பெறப்பட்டது – சென்னை மாநகராட்சியின் பங்கு ரூ.100.08 கோடி – நிதி நிறுவனங்களிடமிருந்து – கடன் பெறுவதற்கு – அனுமதி**

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (CMCDM-III) – 2013–14 திட்டத்தின் கீழ் ரூ.400.31 கோடி மதிப்பில் சென்னை மாநகராட்சி சாலைகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.105, ந.நி.கு.வ.(மாந1) துறை, நாள்: 11.07.2013ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது.

திட்ட மதிப்பீடு ரூ.400.31 கோடியில், ரூ.300.23 கோடி அரசு மான்யம் வழங்குவதற்கும், எஞ்சிய ரூ.100.08 கோடி சென்னை மாநகராட்சி சொந்த நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் அல்லது நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்று மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி நிதி நிலைமையை கருத்திற்கொண்டு, முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஆணையின்படி, இவ்வலுவலகக் கடிதம் வாயிலாக டுபிட்கோ நிதி நிறுவனத்திடம் ரூ.100.08 கோடி டுபிட்கோ எம்.ஐ.டி.எப். நிதியின் கீழ் கடன் வழங்க கேட்டுக் கொள்ளப்பட்டது.

இருப்பினும், டுபிட்கோ நிதி நிறுவனத்திடமிருந்து, இப்பணிக்கான கடன் வழங்குவதற்கான அனுமதி கிடைக்கப் பெறவில்லை. ஏனெனில் இப்பணிகளில் பல பணிகள் முடிற்ற நிலையில் இருப்பதாலும், சில பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதனால் இந் நிறுவனத்திடமிருந்து அனுமதி கிடைத்தாலும், குறைந்த அளவு தொகை மட்டுமே கடனாக கிடைக்கும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதற்கிடையில், இப்பணிக்காக சென்னை மாநகராட்சி பங்கு தொகையான ரூ.100.08 கோடி ஹட்கோ நிதி நிறுவனத்திடமிருந்து அரசு பிணையுடன் கூடிய 11 விழுக்காடு ஆண்டு வட்டியில் (ஹட்கோ 10.75 + அரசு பிணை– 0.25) கடன் பெறுவதற்கு 18.12.2014 நாளிட்ட முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஆணைப்படி, 24.12.2014 நாளிட்ட இவ்வலுவலகக் கடிதம் வாயிலாக ஹட்கோ நிதி நிறுவனத்தினை கேட்டுக் கொள்ளப்பட்டது.

இவ்விரு நிதி நிறுவனங்களிடமிருந்து, கொள்கை அடிப்படையிலான அனுமதி பெறப்பட்ட பிறகு கடன் பெறுவதற்கு மேல் நடடிக்கை எடுக்கலாம் எனவும், டுபிட்கோ மற்றும் ஹட்கோ நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி பெறலாம் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

அ) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (CMCDM-III) – 2013–14 திட்ட பணிகளுக்கு அரசாணையின்படி, சென்னை மாநகராட்சி பங்கு ரூ.100.08 கோடி டுபிட்கோ நிதி நிறுவனத்திடமிருந்து கடன் பெறுவதற்கு அனுமதியும்,

ஆ) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (CMCDM-III) – 2013–14 திட்ட பணிகளுக்கு அரசாணையின்படி, சென்னை மாநகராட்சி பங்கு ரூ.100.08 கோடி **ஹட்கோ** நிதி நிறுவனத்திடமிருந்து கடன் பெறுவதற்கு அனுமதியும்,

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (CMCDM-III) – 2013–14 திட்ட பணிகளுக்கு டுபிட்கோ மற்றும் ஹட்கோ நிதி நிறுவனத்திடமிருந்து ஏதேனும் ஒரு நிதி நிறுவனத்திடமிருந்து ரூ.100.08 கோடி கடன் பெறுவதற்கு மேற்கண்ட 'அ' மற்றும் 'ஆ' வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் ஒப்புதலுடன் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 22.12.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.12.2014 அன்று தீர்மான எண்.505/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.13.ந.க.எண்.சி1/9799/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26–12–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.627/2014 **பொருள் எண்.37**

**மண்டலம் –13 – பகுதி –39, வார்டு –180ல் தரமணி சாலையில் அமைந்துள்ள I.I.T நிறுவனத்தில் அமைக்கப்பட்டு வரும் பல்நோக்கு வாகன நிறுத்த வளாகத்திற்கு அதன் எதிரில் அமைந்துள்ள I.I.T வளாகத்திலிருந்து வாகனங்கள் குறுக்கே செல்வதற்கு ஏதுவாக ஓர் உயர்மட்ட சிறு பாலம் கட்டும் பணிக்கு அனுமதி**

மண்டலம்–13, பகுதி–39, வார்டு–180ல் தரமணி சாலையில் அமைந்துள்ள I.I.T நிறுவனத்தில் அமைக்கப்பட்டு வரும் பல்நோக்கு வாகன நிறுத்த வளாகத்திற்கு அதன் எதிரில் அமைந்துள்ள I.I.T வளாகத்திலிருந்து வாகனங்கள் குறுக்கே செல்வதற்கு ஏதுவாக ஓர் உயர்மட்ட சிறு பாலம் கட்டும் பணிக்கு நிலைக்குழுக்கள் மூலம் மன்றத்தின அனுமதி பெற வேண்டியுள்ளது.

இந்த உயர்மட்ட சிறு பாலம் இதன் உயரம் சுமார் 8.00 மீட்டர் ஆகும். இந்த உயர்மட்ட சிறு பாலம் அமைக்க பாலங்கள் துறையின் தொழில் நுட்ப தேவைக்கேற்ப உடையதாகவும் பாலங்கள் துறையின் அனுமதியும் பெற்ற பின்னர், மண்டலம் – 13ன் நிர்வாகத்தின் மூலம் இக்கருத்துருவிற்கு 13வது வார்டு குழுவின் தீர்மான எண். 334, நாள் 19.11.14ல் பரிந்துரை செய்துள்ளது.

மேற்குறிப்பிட்ட விவரப்படி, வார்டு – 180ல் தரமணி சாலையில் அமைந்துள்ள I.I.T நிறுவனத்தில் அமைக்கப்பட்டு வரும் பல்நோக்கு வாகன நிறுத்த வளாகத்திற்கு அதன் எதிரில் அமைந்துள்ள I.I.T வளாகத்திலிருந்து வாகனங்கள் குறுக்கே செல்வதற்கு ஏதுவாக ஓர் உயர்மட்ட சிறு பாலம் (8 மீட்டர் உயரம்) வார்டு குழு தீர்மான நிபந்தனையின்படி அமைக்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) ஒப்புதலுடன் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 19.12.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.12.2014 அன்று தீர்மான எண். 489/2014ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 22.12.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.12.2014 அன்று தீர்மான எண். 509/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**தி.க.மே.து.ந.க.எண்.எ7/4172/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19–12–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.628/2014 **பொருள் எண்.38**

**சென்னை மாநகராட்சி–திடக்கழிவு மேலாண்மை துறை–100 மாநகரங்கள் மீண்டு எழல் அமைப்பு– சென்னை மாநகராட்சி அதில் ஒரு உறுப்பினராக சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது– அந்த அமைப்புடன் உடன்படிக்கையில் கையெழுத்திட அரசின் அனுமதி கோரி முன்மொழிவுகள் அனுப்புவதற்கு அனுமதி**

சென்னை மாநகராட்சி 08.09.2014 காலக்கட்டத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள ராக்பெல்லர் பவுண்டேஷன் என்ற லாபநோக்கமற்ற அமைப்பினால் நடத்தப்பட்டு வரும் 100 மாநகரங்கள் மீண்டு எழல் என்ற அமைப்பில் உறுப்பினராக விண்ணப்பம் செய்தது. இந்த அமைப்பின் நோக்கம் மாநகரங்கள் சந்திக்கும் எந்த ஒரு துன்பத்திலிருந்தும் மற்றும் சவாலிலிருந்து மீண்டு எழுவதற்கு உதவி செய்வதாகும்.

மின்அஞ்சல் தகவலில் அதன் தலைவர், சென்னை மாநகரம் இந்த 100 மாநகரங்கள் மீண்டு எழல் அமைப்பில் உறுப்பினராக அனுமதிக்கப்பட்டுள்ளது என்ற தகவலை தெரிவித்துள்ளார். அந்த தகவலில் இந்த ஆண்டு 50 நாடுகளிலிருந்து 331 மாநகரங்கள் உறுப்பினராக சேர விண்ணப்பித்திருந்ததாகவும், அதில் சென்னை மாநகரம் கூறியுள்ள அணுகுமுறைகள் சிறப்பானதாக இருப்பதாகவும், அதன் காரணமாக சென்னை மாநகரம் இந்த 100 மாநகரங்கள் மீண்டு எழல் அமைப்பில் உறுப்பினராவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். பிரச்சனைகளிலிருந்து மீண்டு எழ பிற நாடுகள் மேற்கொள்ளும் முயற்சிகளில் சென்னை மாநகரை இணைத்துக்கொள்ள கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த மின்அஞ்சலுடன் நாம் புதிய முயற்சிகளை நேரடியாக இப்போதே செயலாக்கத் துவங்க ஏதுவாக, அவர்கள் உறுப்பினர்களுக்கான கையேடு ஒன்றினையும் இணைத்து அனுப்பியுள்ளனர். ஊடகங்களுக்கு நாம் அளிக்க வேண்டிய தகவல்கள் பற்றியும் விரைவில் அளிப்பார்கள்.

2050ஆம் ஆண்டில் மக்கள்தொகையின் அளவு 50 முதல் 70 சதவிகிதம் அதிகரிக்கும். ஆனால், இயற்கை பேரிடர்களினால் அல்லது மனிதனால் ஏற்படும் அபாயங்கள் அடிக்கடியும் மற்றும் தீவிரமாகவும் உள்ளன. அதன் காரணமாகவே 100 மாநகரங்கள் மீண்டு எழுல் அமைப்பு, மாநகரங்கள் இணைந்து செயல்பட உருவாக்கப்பட்டது. இந்த திட்டம் உருவான 12 மாதங்களிலேயே இதன் 32 ஆரம்ப உறுப்பினர் மாநகரங்கள் தங்களது மீண்டு எழல் செயல்பாடுகளின் வெற்றியை பரிமாறிக்கொள்ளலாயினர். உறுப்பினர் மாநகரங்கள் ஒரு தலைமை மாநகர மீண்டு எழல் அதிகாரி ஒருவரை நியமனம் செய்ய வேண்டும். பின்னர் இந்த உறுப்பினர் மாநகரங்கள் சவால்களை சந்திக்க முன்னுரிமை அடிப்படையில் திட்டங்களை உருவாக்குவார்கள்.

டிசம்பர், 14, 2014க்குள் மாநகரத்தின் தலைமை செயல் அலுவலர், அல்லது முக்கிய பொறுப்பு வகிப்பவர் ஒரு உடன்படிக்கையில் இந்த 100 மாநகரங்கள் மீண்டு எழல் அமைப்புடன் கையெழுத்திட வேண்டும். இந்த உடன்படிக்கையின் நிபந்தனை வகையங்கள் மாநகரத்தினாலும், மற்றும் மீண்டு எழல் அமைப்பினாலும் இறுதியாக்கம் செய்யப்படும். இந்த 100 மாநகரங்கள் மீண்டு எழல் அமைப்பின் உறுப்பினர்கள் அளிக்க வேண்டிய உறுதிகளில் முக்கியமானவைகள் கீழ்வருமாறு :

மாநகரங்கள் கீழ்வருவனவற்றை இந்த 100 மாநகரங்கள் மீண்டு எழல் அமைப்பிலிருந்து பெறுவதற்கு உரிமையுள்ளவர்களாக இருக்கும்.

1. ஒரு தலைமை மீண்டு எழல் அதிகாரியை நியமித்துக்கொள்ள மாநகரத்திற்கு இரண்டு ஆண்டுகளுக்கு குறையாமல் நிதியுதவி
2. சம்பந்தப்பட்ட பல்வேறு நபர்கள், சமூக அமைப்புகள் மற்றும் நகராட்சி அலுவலர்கள் ஆகியவர்களின் ஆதரவுடன் தொழில் நுட்ப சேவைகள், திறன் வளர்த்தல் சேவைகள் மற்றும் மீண்டு எழல் செயல்பாட்டுமுறைகளை வடிவமைத்தல் மற்றும் செயலாக்குதல் ஆகியவைகளை மாநகரங்களுக்கு வழங்குதல்.

3. 100 மாநகரங்கள் மீண்டு எழல் அமைப்பு ஒவ்வொரு மாநகரத்திற்கும் தனியே ஒரு தொடர்பு அலுவலரை நியமிப்பார்கள். அவர் மீண்டு எழல் திட்ட செயல்பாடுகளில், இலக்குகளை நிர்ணயித்தல் குறித்த காலங்களில் பணியினை முடிப்பதில் உதவிசெய்தல் மற்றும் தடைக்கற்களை குறைப்பதில், தலைமை மீண்டு எழல் அதிகாரியுடனும் மற்றும் மாநகரத்தினால் நியமிக்கப்பட்ட பிற அலுவலர்களுடனும், ஒருங்கிணைந்து செயல்படுவார்.
4. மாநகரங்களுக்குள் அறிவார்ந்த பொருட்பாடுகளை பரிமாறிக்கொள்ளவும் கற்றுக்கொள்வதற்காகவும், மற்றும் ஒருவரின் தொழில்திறனை வளர்த்தல், அனுபவங்களையும் வெற்றியைத் தந்த செயல்பாட்டுமுறைகளையும் பரிமாறிக்கொள்ளுதல், மற்றும் மாநகரங்களுக்கிடையே மேற்கொள்ளப்பட்ட புதுமையான மீண்டு எழல் செயல்பாட்டு முறைகளை தலைமை மீண்டு எழல் அதிகாரி மற்றும் பிற மாநகர அலுவலர்கள் ஆகியவர்களிடையே பரிமாறிக்கொள்ளுதல் ஆகியவைகளுக்காக ஒரு வலையத்தை உறுப்பினர் மாநகரங்களுக்கிடையே உருவாக்குதல்.
5. மீண்டு எழல் திட்ட செயலாக்க வடிவமைப்புகளிலும் மற்றும் செயலாக்க தேவையான வளங்களிலும், நிதி, தொழில்நுட்பம், உள்கட்டமைப்பு மற்றும் நிலப்பயன்பாடு கட்டடங்கள் மற்றும் வடிவமைப்பு மற்றும் தகவல் பரிமாற்றம் மற்றும் சமுதாயம் மற்றும் சமூக கருவிகள் ஆகிவைகளை பெறுதல்.

மாநகரம்

1. பல்வேறு நபர்கள் பங்கேற்று தகவல்கள் சேகரிக்கும் கூட்டங்கள் உட்பட இந்த 100 மாநகரங்கள் மீண்டு எழல் அமைப்பின் அனைத்து கூட்டங்களிலும் முழுமையாக பங்கேற்க வேண்டும்.
2. இந்த மீண்டு எழல் திட்ட செயல்பாடுகளில் இலக்குகளை அடைய மேயர் அல்லது நகராட்சி நிர்வாகம் மற்றும் முக்கிய அலுவலர்களின் ஈடுபாடு உறுதி செய்யப்பட வேண்டும்.
3. தலைமை மீண்டு எழல் அதிகாரி ஒருவரை நியமனம் செய்து கொள்ள உறுதி அளிக்க வேண்டும்.
4. மீண்டு எழல் திட்டங்களை செயலாக்குவதில் உள்ள தொழில் வல்லுநர்கள், கற்றறிந்தவைகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செயல்கள், ஆகியவைகளை பரிமாறிக் கொள்வதற்காக உருவாக்கப்பட்ட வலையத்திற்கு தேவையான விவரங்களை அளிக்க வேண்டும். அந்தந்த வட்டாரத்தில் மீண்டு எழல் திட்டத்தை வடிவமைப்பது எவ்வாறு என்று கற்றுக்கொள்வதில் ஆர்வம் உள்ள மாநகரங்களுக்கு ஒரு ஆலோசகராகவும், ஒரு தொடர்பாளராகவும் எங்கெல்லாம் இயலுமோ அங்கெல்லாம் செயல்பட வேண்டும்.
5. உரிய கருவிகள், சேவைகள் ஆகியவைகள் 100 மாநகரங்கள் மீண்டு எழல் அமைப்பின் பிற மாநகரங்களுக்கு, நாம் நமக்காக வடிவமைத்தவைகளை, அளிக்க வேண்டும்.
6. விரிவான மீண்டு எழல் திட்டங்களை வடிவமைக்க நகராட்சியின் பணிகள் மற்றும் அலுவலர்களிடையே ஒரு ஒற்றுமையை ஊக்கப்படுத்துதல் வேண்டும்.
7. உரியகாலத்தில் அறிக்கைகள், மதிப்பீடுகள் மற்றும் 100 மாநகரங்கள் மீண்டு எழல் அமைப்பின் மானியங்களை கண்காணித்தல் வேண்டும்.
8. புனிதமான 100 மாநகர மீண்டு எழல் பணிகளை வடிவமைக்கும் கொள்கைகள் உள்ளூரில் ஏற்படும் நிலமைகளுக்கு ஏற்றவாறு வடிமைக்கப்பட இந்த மீண்டு எழல் அமைப்புடன் ஒளிவுமறைவற்று இணைந்து செயலாற்ற வேண்டும்.

இந்த 100 மாநகரங்கள் மீண்டு எழல் அமைப்பு அதன் உறுப்பினர்களுக்கு கருவிகள், நிதி ஆதாரங்கள், திறன்வாய்ந்த தொழில்நுட்பம் மற்றும் 21ஆம் நூற்றாண்டின் சவால்களை சந்திக்க தேவையானவைகளை மீண்டு எழல் திட்டத்திற்காக வழங்கும்.

இது குறித்து இங்கு சமர்ப்பிக்கப்படுவதாவது, இந்த 100 மாநகரங்கள் மீண்டு எழல் அமைப்பின் முக்கிய நோக்கமே, கற்றறிந்தவைகளையும் அறிவுசார் பொருட்பாடுகளையும் உறுப்பினர் நாடுகளிடையே பகிர்ந்து கொள்வதற்கே தவிர, பொதுவாக இந்த பொருட்பாடு, திடக்கழிவு மேலாண்மை இனம் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல. எனவே, இந்த பொருட்பாட்டினை சென்னை மாநகராட்சியின் சிறப்பு திட்டங்கள் துறை கையாளுவது அவசியமாகிறது. இங்கு மேலும் சமர்ப்பிக்கப்படுவதாவது, உலக அளவில் உள்ள ஒரு அமைப்பில் உறுப்பினராவதற்கும் மற்றும் அந்த அமைப்புடன் உடன்படிக்கைகள் கையெழுத்திடுவதற்கும் மாமன்றம் மற்றும் அரசின் ஒப்புதல் தேவையாகும். எனவே, 100 மாநகரங்கள் மீண்டு எழல் அமைப்புடன் உடன்படிக்கை கையெழுத்திட அரசின் அனுமதி வேண்டி முன்மொழிவு சமர்ப்பிக்க மன்றத்தின் ஒப்புதல் பெறுவதற்கு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மன்றத்தின் ஒப்புதல் பெற்ற பிறகு இந்த கோப்பு சென்னை மாநகராட்சியின் சிறப்பு திட்டங்கள் துறைக்கு, உரிய தொடர் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்படும்.

மேற்கூறிய சூழ்நிலையில், 100 மாநகரங்கள் மீண்டு எழல் அமைப்புடன் உறுப்பினராவதற்கு அவர்களுடன் உடன்படிக்கை கையெழுத்திட சென்னை மாநகராட்சிக்கு அனுமதி வழங்க அரசிற்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்க வேண்டி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 19.12.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.12.2014 அன்று தீர்மான எண். 487/2014ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 22.12.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.12.2014 அன்று தீர்மான எண். 507/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.6.ந.க.எண்.இ3/8992/1 /2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18–12–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.629/2014 **பொருள் எண்.39**

**ஒப்பம் – 2013–14ஆம் ஆண்டிற்கான பணி – மண்டலம்–6, பகுதி–15, வார்டு–64 – சிப்பம்–1 – தார்சாலை அமைக்கும் பணி கீழ்கண்ட பணிகளுக்கு 2013–14ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் 8000 சாலைகள் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட ஒப்பத்திற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி**

மண்டலம்–6, பகுதி–15, வார்டு–64, சிப்பம்–1 8000 சாலைகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் பேவர் மூலம் தார்சாலை அமைக்கும் பணிக்காக 14.02.2014 அன்று ஒப்பம் திறக்கப்பட்டு சிப்பங்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது.

| வ. எண் | வார்டு | கோப்பு எண். | பணி/சாலையின் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்ப தொகை | ஒப்ப சதவீதம் 2013–14ஆம் ஆண்டு அலுவலக விலையோடு ஒப்பிடுகையில் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 64 | E3/ 8992/ 1/13 | சிப்பம்–1, மண்டலம்–6, பகுதி–15, வார்டு–64ல் உள்ள 8 சாலைகள் / தெருக்களுக்கு தார்சாலை அமைக்கும் பணி | 82,79,066.05 | 84,44,647.00 | (+) 2.00 % அதிகம் |
| 2 | 64 | E3/ 8992/ 2/13 | சிப்பம்–1, மண்டலம்–6, பகுதி–15, வார்டு–64ல் உள்ள 12 சாலைகள் / தெருக்களுக்கு தார்சாலை அமைக்கும் பணி | 78,65,610.70 | 75,90,314.00 | (–) 3.50 % குறைவு |
| 3 | 64 | E3/ 8992/ 3/13 | சிப்பம்–1, மண்டலம்–6, பகுதி–15, வார்டு–64ல் உள்ள 6 சாலைகள் / தெருக்களுக்கு தார்சாலை அமைக்கும் பணி | 75,91,983.95 | 73,18,673.00 | (–) 3.60 % குறைவு |
| 4 | 64 | E3/ 8992/ 4/13 | சிப்பம்–1, மண்டலம்–6, பகுதி–15, வார்டு–64ல் உள்ள 9 சாலைகள் / தெருக்களுக்கு தார்சாலை அமைக்கும் பணி | 75,15,036.22 | 72,38,482.88 | (–) 3.68 % குறைவு |

மேற்குறிப்பிட்டுள்ள 4 ஒப்பங்களுக்கு பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மா எண். 483/14 நாள் 19.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண். 501/14 நாள் 22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.6.ந.க.எண்.இ2/ 10894 /2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 17–12–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.630/2014 **பொருள் எண்.40**

**மதிப்பீடு – 2013–14ஆம் ஆண்டிற்கான பணி – மண்டலம்–6 கீழ்கண்ட பணிகளுக்கு 2013–14ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் 10000 சாலைகள் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–6ல் 10000 சாலைகள் திட்டத்தின்கீழ் சாலைகள் அமைக்கும் பணிகளுக்கான கீழ்கண்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தொகுப்பு ஒப்பங்களாக கோரப்பட்டது.

| வ. எண். | வார்டு | சிப்பம் எண் | மதிப்பீடு எண் | பணி/சாலையின் பெயர் | நீளம் (மீ) | பரப்பளவு (ச.மீ) | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 75 | 9 | NF/2013-14 /31872 | மண்டலம்–6, பகுதி–17, வார்டு–75ல் உள்ள வெங்கடாத்திரி தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி | 535 | 3480 | 7555000 |
| 2 | 77 | 14 | NF/2013-14 /30774 | மண்டலம்–6, பகுதி–17, வார்டு–77ல் உள்ள சிவராஜபுரம் 1 முதல் 6 தெரு வரை சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி | 823 | 3704 | 7685000 |

மேற்கண்ட பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, நிர்வாக அனுமதி பெற கோப்பு நடைமுறையில் இருந்த நிலையில் பணியின் அவசர அவசியம் கருதி, பாராளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் தொடங்குவதற்கு முன்னர், 18.02.2014 அன்று ஒப்பம் திறக்கப்பட்டு, 25.02.2014 அன்று நடைபெற்ற மாமன்றத்தின் கூட்டத்தில் அனுமதி பெறப்பட்டது. இதனை தொடர்ந்து, தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களுக்கு 26.02.2014 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது. மேலும் தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்த நிலையில், மதிப்பீட்டு கோப்புகளில் நிர்வாக அனுமதி பெற இயலவில்லை.

மேற்குறிப்பிட்டுள்ள 2 பணிகளுக்கு 2013–14ஆம் ஆண்டு அலுவலக விலைப்படி தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீடுகளுக்கு தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008 நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி – 78ன்படி நிலைக்குழு (பணிகள்) மூலமாக நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி) வின் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மா எண். 484/14 நாள் 19.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண். 502/14 நாள் 22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.6.ந.க.எண்.இ2 / 10895 /2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 17–12–2014 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.631/2014** **பொருள் எண்.41**

**மதிப்பீடு – 2013–14ஆம் ஆண்டிற்கான பணி – மண்டலம்–6 கீழ்கண்ட பணிகளுக்கு 2013–14ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் 10000 சாலைகள் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–6ல் 10000 சாலைகள் திட்டத்தின்கீழ் சாலைகள் அமைக்கும் பணிகளுக்கான கீழ்கண்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தொகுப்பு ஒப்பங்களாக கோரப்பட்டது.

| வ. எண். | வார்டு | சிப்பம் எண் | மதிப்பீடு எண் | பணி/சாலையின் பெயர் | நீளம் (மீ) | பரப்பளவு (ச.மீ) | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 65 | 24 | NF/2013-14/33274 | மண்டலம்–6, பகுதி–15, வார்டு–65ல் உள்ள ஜி.கே.எம்.காலனி 2வது பிரதான சாலையில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி | 750 | 5250 | 11500000 |
| 2 | 66 | 21 | NF/2013-14/23526 | மண்டலம்–6, பகுதி–16, வார்டு–66ல் உள்ள வெங்கடேசன் சாலையில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி | 852 | 11600 | 22800000 |
| 3 | 77 | 17 | NF/2013-14/24344 | மண்டலம்–6, பகுதி–17, வார்டு–77ல் உள்ள புளியந்தோப்பு 1வது, 2வது, 3வது, 5வது மற்றும் 1 முதல் 5 குறுக்கு தெருக்களுக்கு சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி | 1152 | 4608 | 10166000 |

மேற்கண்ட பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, நிர்வாக அனுமதி பெற கோப்பு நடைமுறையில் இருந்த நிலையில் பணியின் அவசர அவசியம் கருதி, பாராளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் தொடங்குவதற்கு முன்னர், 18.02.2014 அன்று ஒப்பம் திறக்கப்பட்டு, 25.02.2014 அன்று நடைபெற்ற மாமன்றத்தின் கூட்டத்தில் அனுமதி பெறப்பட்டது. இதனை தொடர்ந்து, தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களுக்கு 26.02.2014 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது. மேலும் தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்த நிலையில், மதிப்பீட்டு கோப்புகளில் நிர்வாக அனுமதி பெற இயலவில்லை.

மேற்குறிப்பிட்டுள்ள 3 பணிகளுக்கு 2013–14ஆம் ஆண்டு அலுவலக விலைப்படி தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீடுகளுக்கு தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008 நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி – 78ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “19.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மா எண். 485/14 நாள் 19.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

> “22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண். 503/14 நாள் 22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.9.ந.க.எண்.இ1/10270/1/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19–12–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.632/2014 பொருள் எண்.42

**மண்டலம் – 9–மெரினா கடற்கரை – பராமரிப்பு பணி – நிர்வாக நலன் கருதி தற்போது பணிபுரியும் திருவாளர்.ராம்கி நிறுவனத்திடமிருந்து பிரித்து புதிய ஒப்பந்ததாரரை பணியில் ஈடுபடுத்தி பணி மேற்கொள்ளவும் அனுமதி**

மெரினா கடற்கரை உலகின் மிக நீளமான கடற்கரைகளில் ஒன்றாகும். இது உலகின் இரண்டாவது மிக நீளமான கடற்கரை ஆகும். இதன் நீளம் 13 கி.மீ ஆகும். இது புனித ஜார்ஜ் கோட்டையிலிருந்து பெசன்ட் நகர் வரை நீண்டுள்ளது. இதன் அகலம் 300 மீட்டர் முதல் 437 மீட்டர் வரை பரந்து விரிந்துள்ளது. மெரினா கடற்கரை நேப்பியர் பாலம் முதல் பட்டினப்பாக்கம் வரை 25.19 சதுர கி.மீ. பரப்பளவு பரந்து விரிந்துள்ளது. இக்கடற்கரையில் அண்ணா நினைவகம், எம்.ஜி.ஆர். நினைவகம், கலங்கரை விளக்கம், நேப்பியர் பாலம் மற்றும் முக்கிய தலைவர்களின் சிலைகள் வரிசையாக அமைந்துள்ளது. இக்கடற்கரை இந்திய சுற்றுலாத்தலங்களின் சிறப்புவாய்ந்த ஒன்றாகும். இக்கடற்கரைக்கு தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கின்ற மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதி ஆகும். மெரினா கடற்கரையின் எழிலை கண்டுகளிக்க சாதாரன நாட்களில் சுமார் 50,000 பொது மக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளும், வார விடுமுறை நாட்களில் சுமார் 70,000 முதல் 90,000 பொது மக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளும் இக்கடற்கரையின் அழகினை கண்டு களிக்கின்றனர். இக்கடற்கரையின் நிர்வாக அதிகாரம் சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் படி, மெரினா கடற்கரையில் கட்டிடக் கழிவுகள், குப்பை, கண்ணாடி போன்றவற்றை அப்புறப்படுத்தி சிறப்பாக பராமரித்து சுற்றுச்சூழலை பாதுகாத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு குந்தகம் இல்லாமல் செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்சமயம் ராம்கி நிறுவனத்தினர் மெரினா துப்புரவு பணியினை செய்து வருகிறார்கள். திருவாளர் ராம்கி நிறுவனத்தினர் மெரினா கடற்கரை தூய்மைப் பணியினை முறையாக மேற்கொள்ளாததால் பசுமை தீர்ப்பாய வழக்கும், தினசரி நாளேடுகளில் புகாரும் வந்தவண்ணம் உள்ளது. இது தொடர்பாக ராம்கி நிறுவனத்திற்கு 14.09.2014 அன்று இவ்வலுவலகம் மூலம் குறிப்பாணை வழங்கப்பட்டது. திருவாளர்கள் ராம்கி நிறுவனம் 1.10.2014 நாளிட்ட கடிதம் மூலம் தங்கள் கருத்தினை தெரிவித்துள்ளார்கள். அக்கடிதத்தில் மெரினா கடற்கரை பரப்பில் ஒப்பந்தப்படி பயன்படுத்தப்படும் 40 ஊழியர்களை விலக்கிக் கொள்ளவும் மேலும் அவர்களுக்குரிய மாதாந்திர ஊதியமாக ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு ரூ.5550/– வீதம் 40 பணியாளர்களுக்கும் பிடித்தம் செய்திடலாம் எனவும் சம்மதம் தெரிவித்துள்ளனர். ஆகவே, ராம்கி நிறுவன பதிலின்படி இந்நிறுவனத்தின் துப்புரவு பணியாளர்கள் 40 பேரை மெரினாவில் மேற்கொள்ளும் துப்புரவுப் பணியிலிருந்து விலக்கிக் கொள்ளலாம் என பரிந்துரைக்கப்படுகிறது.

மேலும், இம்மண்டலமானது சென்னை மாநகராட்சியின் மையப்பகுதியில் அமைந்துள்ளதாலும், முக்கிய பிரமுகர்கள் செல்லும் காமராஜர் சாலை, டாக்டர்.இராதாகிருஷ்ணன் சாலை, டி.டி.கே. சாலை உள்ளிட்ட முக்கிய சாலைகளை உள்ளடக்கியுள்ளதால் இம்மண்டலத்தில் தற்போதுள்ள மெரினா கடற்கரையில் பணி புரியும் 40 பணியாளர்களை விட கூடுதல் அலுவலர்களை பணியமர்த்தி பணி மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது.

சென்னை மாநகராட்சி, மண்டலம்–9 கடற்கரை மணற்பரப்பு, கரையோரப் பகுதி, சேவை சாலை, மற்றும் நடைபாதை பகுதியில் தனியார் மூலம் துப்புரவு பணி மேற்கொள்ள வரைபடத்தில் கண்டுள்ளபடி நேப்பியர் பாலம் முதல் கலங்கரை விளக்கம் வரை உள்ள மணற்பரப்பினை 8 பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மணற்பகுதிக்கும் துப்புரவு பணி மேற்கொள்ள தேவைப்படும் துப்புரவு பணியாளர்களின் விவரம்.

**I – மணற்பரப்பு, அலையோரம் மற்றும் முகத்துவாரங்களில் குப்பைகளை அகற்றிட தேவைப்படும் ஒப்பந்த பணியாளர்கள்.**

| வ. எண் | பகுதி எண் | மணற்பரப்பு மற்றும் முகதுவாரம் துப்புரவு பணிபுரியும் இடம் | நீளம் X அகலம் (mts) | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | I | நேப்பியர் பாலம் முதல் உழைப்பாளர் சிலை வரை | 370X285 | 7 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | II | உழைப்பாளர் சிலை முதல் சென்னை மாநகராட்சி நீச்சல் குளம் வரை | 400X350 | 10 |
| 3 | III | நீச்சல் குளம் முதல் கண்ணகி சிலை வரை | 310X350 | 9 |
| 4 | IV | கண்ணகி சிலை முதல் திருவள்ளுவர் சிலை வரை | 390X285 | 9 |
| 5 | V | திருவள்ளுவர் சிலை முதல் விவேகானந்தர் இல்லம் வரை | 495X310 | 12 |
| 6 | VI | விவேகானந்தர் இல்லம் முதல் அவ்வையார் சிலை வரை | 395X230 | 11 |
| 7 | VII | அவ்வையார் சிலை முதல் காந்தி சிலை வரை | 327X220 | 9 |
| 8 | VIII | காந்தி சிலை முதல் கலங்கரை விளக்கம் வரை | 463X200 | 11 |
| **மொத்தம்** | | | **8,45,440** | **78** |

மேற்காணும் பட்டியலில் உள்ள 78 துப்புரவு பணியாளர்கள் மணற்பரப்பு, அலையோரப் பகுதி மற்றும் முகதுவாரம் பகுதிகளில் தேவைப்படுகின்றனர்.

மெரினா கடற்கரை சேவை சாலையில் துப்புரவு பணி புரிந்திட 6 பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மணற்பகுதிக்கும் துப்புரவு பணி மேற்கொள்ள கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு துப்புரவு பணியாளர்களின் விவரம்.

**II – சேவை சாலையில் துப்புரவுப்பணி மேற்கொள்ள**

| வ. எண் | பகுதி எண் | சேவை சாலையில் துப்புரவு பணிபுரியும் இடம் | நீளம் X அகலம் (mts) | துப்புரவு பணியாளர் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | I | உழைப்பாளர் சிலை முதல் மாநகராட்சி நீச்சல் குளம் வரை | 450X20 | 4 |
| 2 | II | நீச்சல் குளம் முதல் கண்ணகி சிலை வரை | 310X20 | 3 |
| 3 | III | கண்ணகி சிலை முதல் விவேகானந்தர் இல்லம் வரை | 880X20 | 7 |
| 4 | IV | விவேகானந்தர் இல்லம் முதல் அவ்வையார் சிலை வரை | 395X20 | 3 |
| 5 | V | அவ்வையார் சிலை முதல் காந்தி சிலை வரை | 327X20 | 3 |
| 6 | VI | காந்தி சிலை முதல் கலங்கரை விளக்கம் வரை | 463X20 | 4 |
| **மொத்தம்** | | | **56,500** | **24** |

மேற்காணும் பட்டியலில் உள்ள 24 துப்புரவு பணியாளர்கள் சேவை சாலையின் இருபுறங்களிலும் துப்புரவு பணி புரிந்திட தேவைப்படுகின்றனர்.

மெரினா கடற்கரை கிராணைடு நடைபாதையில் (புல்வெளியை ஒட்டி) துப்புரவு பணி புரிந்திட 6 பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதிக்கும் துப்புரவு பணி மேற்கொள்ள கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு துப்புரவு பணியாளர்களின் தேவை விவரம் சமர்ப்பிக்கப்படுகிறது.

**III – நடைபாதையில் துப்புரவு பணி மேற்கொள்ள**

| வ. எண் | பகுதி எண் | நடைபாதையில் துப்புரவு பணிபுரியும் இடம் | பரப்பளவு ச.மீ ல் | துப்புரவு பணியாளர் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | I | உழைப்பாளர் சிலை முதல் மாநகராட்சி நீச்சல் குளம் வரை | 450X6 | 3 |
| 2 | II | நீச்சல் குளம் முதல் கண்ணகி சிலை வரை | 310X6 | 2 |
| 3 | III | கண்ணகி சிலை முதல் விவேகானந்தர் இல்லம் வரை | 880X6 | 6 |
| 4 | IV | விவேகானந்தர் இல்லம் முதல் அவ்வையார் சிலை வரை | 395X6 | 2 |
| 5 | V | அவ்வையார் சிலை முதல் காந்தி சிலை வரை | 327X6 | 2 |
| 6 | VI | காந்தி சிலை முதல் கலங்கரை விளக்கம் வரை | 463X6 | 3 |
| **மொத்தம்** | | | **16,950** | **18** |

மேற்காணும் பட்டியலில் உள்ள 18 துப்புரவு பணியாளர்கள் கிராணைடு நடைபாதை பகுதிகளில் துப்புரவு பணி புரிந்திட தேவைப்படுகின்றனர்.

எனவே,

(அ) மெரினா கடற்கரை பகுதி மற்றும் அதனை சார்ந்துள்ள மணற்பரப்பு, சேவை சாலைகள், கிராணைடு மற்றும் நடைபாதை துப்புரவுபணி மேற்கொள்ள மொத்தம் 120 துப்புரவு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். **(ரூ. 295 X 365 நாட்கள் X 120 பணியாளர்கள் = ரூ.1,29,21,000/-** ரூபாய் ஒரு கோடியே இருபத்தொன்பது லட்சத்து இருபத்தொன்ராயிரம் மட்டும்) மேலே கூறியவாறு 120 ஒப்பந்த பணியாளர்களை பணியில் ஈடுபடுத்திக் கொள்ளவும் மற்றும் **ரூ.1,29,21,000/-** செலவினம் மேற்கொள்ளவும்,

(ஆ) மெரினா கடற்கரைப் பகுதியை திருவாளர்கள். ராம்கி நிறுவனம், 40 பணியாளர்கள் மற்றும் 1 மணற்பரப்பை தூய்மைப்படுத்தும் இயந்திரத்தைக் கொண்டு பணி மேற்கொண்டு வருகிறார்கள். இவர்கள் இப்பணியை சிறப்பாக செய்யாத காரணத்தினால் மெரினா கடற்கரை மணற்பரப்பு மற்றும் சேவை சாலையில் மேற்கொள்ளப்படும் துப்புரவு பணியில் இருந்து விலக்களிக்கவும், அதனால் ஏற்படும் செலவுத் தொகையினை திருவாளர்கள். ராம்கி நிறுவனம் தெரிவித்துள்ளபடி, ஒரு துப்புரவு பணியாளருக்கு ரூ.5,550/– வீதம் 40 துப்புரவு பணியாளருக்கு 1 மாதத்திற்கு ரூ.2,22,000/– என 12 மாதங்களுக்கு ஆகும் செலவுத் தொகை ரூ.26,64,000/–ஐ அந்நிறுவனத்திற்கு மாதந்தோறும் வழங்கப்படும் பட்டித் தொகையில் பிடித்தம் செய்யவும், மேற்படி பிடித்தத்திற்கு துணை ஒப்பந்தம் (Supplementry Agreement) / திருத்தம் (Amendment) மேற்கொள்ளவும்,

(இ) மெரினா சாலையில் சேகரமாகும் குப்பைகளை சேகரிக்க தேவையான 18 காம்பாக்டர் பின்களை வெளிச்சந்தையில் கொள்முதல் செய்யவும், இயந்திர பொறியியல் துறையில் இருந்து மண்டலம்–9க்கென ஒரு இலகுரக வாகனம் ஒதுக்கீடு செய்திடவும், இலகுரக வாகனம் மூலம் அகற்றப்படும் குப்பைகளை அருகில் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான (மண்டலம்–8) குப்பை மாற்றும் வளாகத்தில் சேர்க்கவும்,

மேற்காணும் **அ**' முதல் '**இ**' வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 19.12.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 26.12.2014 அன்று தீர்மான எண்.488/2014, நாள். 26.12.2014–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 22.12.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.12.2014 அன்று தீர்மான எண். 508/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/20622/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.12.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.633/2014 பொருள் எண்.43

**2014–2015 ம் ஆண்டிற்கான கண்காணிப்பு பொறியாளர் தெரிவுபட்டியலில் திரு.இளஞ்செழியன், செயற்பொறியாளர் அவர்களின் பெயரை சேர்த்து கருத்தியலான பதவி உயர்வு வழங்கவும், திருத்திய தெரிவு பட்டியலுக்கு அனுமதியும் மற்றும் அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பியதற்கு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி மண்டலம்–14, பகுதி–42, கோட்டம்–188ல் உள்ள ராம் நகர், 7வது பிரதான சாலை மற்றும் ராம் நகர் 6வது குறுக்குத் தெருவில், விதிமுறைக்கு புறம்பாக கட்டப்பட்டு வரும் கட்டிடத்திற்கு தாக்கீது வழங்க சென்னை மாநகராட்சி முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்கள் ஆணையிட்டிருந்தும், மண்டலம்–14ல் செயற்பொறியாளர் மற்றும் மண்டல அலுவலர்(பொ) ஆக பணிபுரிந்த திரு.எஸ்.இளஞ்செழியன் அவர்கள் விதிமுறைக்கு புறம்பாக கட்டப்பட்ட கட்டிடத்திற்கு தாக்கீது வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள தவறியதால், தனியர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970, துணை விதி 10(a)ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் இறுதியாணையாக தனியரது ஊதிய உயர்வினை மூன்று மாதங்களுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து 04.11.2013 நாளிட்ட வட்டார இணை ஆணையர்(தெற்கு) அவர்களின் செயல்முறை ஆணையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

2014–2015ஆம் ஆண்டிற்கான கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கு தெரிவுபட்டியல் தயாரிக்கும் தறுவாயில் திரு எஸ்.இளஞ்செழியன், செயற்பொறியாளர் அவர்கள் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970, துணை விதி 10(a)ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு தனியருக்கு இறுதியாணையாக 3 மாத திரண்ட பயனின்றி ஊதிய நிறுத்தம் செய்து வழங்கப்பட்ட தண்டனை நிலுவையிலிருந்ததால், 2014–2015ஆம் ஆண்டிற்கான கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்காக தயாரிக்கப்பட்ட தெரிவுப்பட்டியலில் தனியரின் பெயரை சேர்க்காமல் ஒத்திவைத்து மன்றத் தீர்மானம் எண்.287/14 மற்றும் 401/2014, நாள்:30.05.2014, 31.07.2014ல் நிறைவேற்றப்பட்டது.

தனியர் தனக்கு வழங்கப்பட்ட தண்டனையை ஆட்சேபித்து 27.12.2013 நாளிட்ட மேல்முறையீட்டு மனுவை அரசிடம் சமர்ப்பித்திருந்ததின்பேரில். தனியர் அளித்துள்ள மேல்முறையீடு மனுவை கூர்ந்து ஆய்வு செய்து தனியருக்கு அளிக்கப்பட்ட தண்டனையை உறுதி செய்து தனியரின் மேல்முறையீட்டு மனுவினை நிராகரித்து அரசாணை(ப) எண்.359, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந.3) துறை, நாள்:23.09.2014ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து, திரு.எஸ்.இளஞ்செழியன், செயற்பொறியாளர் அவர்கள், வட்டார இணை ஆணையர்(தெற்கு) சென்னை மாநகராட்சி அவர்களால் வழங்கப்பட்ட தண்டனையை மீண்டும் மறு ஆய்வு செய்து, தனக்கு வழங்கப்பட்ட தண்டனையை ரத்து செய்யுமாறு அரசிடம் 25.11.2014 நாளிட்ட சீராய்வு மனுவை அளித்துள்ளார்.

திரு.எஸ்.இளஞ்செழியன் அவர்களின் இச்சீராய்வு மனுவினை ''அரசு சாதாரண மனுவாக பாவித்து உரிய ஆவணங்களுடன் பரிசீலனை செய்து, தனியர் எடுத்துரைத்த விளக்கத்தின்படி, இவ்வொழுங்கு நடவடிக்கையில் அடிப்படை பொறுப்பு, உதவி பொறியாளர்/உதவி செயற்பொறியாளர் மற்றும் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் ஆகியோருடையது என தெரிய வருவதால், திரு.எஸ்.இளஞ்செழியன், செயற்பொறியாளர் அவர்களுக்கு வட்டார இணை ஆணையர்(தெற்கு), சென்னை மாநகராட்சி அவர்களால் வழங்கப்பட்ட ''திரண்ட பயனின்றி 3 மாதம் ஊதிய உயர்வு நிறுத்தம்'' என்ற தண்டனையை ரத்து செய்து, தனியரை எச்சரித்துவிடலாம்'' என அரசாணை(ப) எண்.552, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந.3) துறை, நாள்:22.12.2014ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

30.05.2014 நாளிட்ட மன்ற தீர்மான எண்.287 மற்றும் 31.07.2014 நாளிட்ட மன்ற தீர்மான எண்.401லும் ஒப்புதல் அளிக்கப்பட்ட 2014–2015ஆம் ஆண்டிற்கான கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில், திரு. எஸ்.இளஞ்செழியன், செயற்பொறியாளர் அவர்களின் உடனடி இளையவரான (Immediate Juniors) திரு.ஆர்.வரதராஜன், அவர்கள் கண்காணிப்பு பொறியாளராக பதவி உயர்வு பெற்று பணி ஏற்ற நாள் முதல் முன்தேதியிட்டு (with retrospective

effect from the date on which his juniors were promoted) அரசாணை எண்.368 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள் 18.10.93 மற்றும் அரசாணை (ப) எண். 22, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (S) துறை நாள் 24.02.2014ல் பொதுப்பணி விதி 4(a)க்கு வெளியிடப்பட்ட திருத்தங்கள் அடங்கிய ஆணையில், பகுதி–Aல் பிரிவு II(3)ல் ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டு, இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 15 தினங்களுக்குள் கருத்தியலான பதவி உயர்வு வழங்கப்படவேண்டும் என பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணையின்படி, திரு.எஸ்.இளஞ்செழியன், செயற் பொறியாளர், அவர்களுக்கு கண்காணிப்பு பொறியாளராக கருத்தியலான (Notional Promotion) பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும்.

கண்காணிப்பு பொறியாளர் பதவியின் தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளித்து பதவி உயர்வு வழங்கும் அதிகாரம் அரசின் வசம் உள்ளது.

எனவே, 2014–2015ஆம் ஆண்டிற்கான கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில், திரு. எஸ்.இளஞ்செழியன். செயற்பொறியாளர் அவர்களின் உடனடி இளையவரான (Immediate Juniors) தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.1ல் இடம்பெற்றுள்ள திரு.ஆர்.வரதராஜன், அவர்கள் கண்காணிப்பு பொறியாளராக பதவி உயர்வு பெற்று பணி ஏற்ற நாள் முதல் முன்தேதியிட்டு (with retrospective effect from the date on which his juniors were promoted) மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு ரூ.37400–67000+8700 தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் கண்காணிப்பு பொறியாளராக கருத்தியலான (Notional Promotion) பதவி உயர்வு வழங்க ஆணை வேண்டி அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பப்படவேண்டும்.

திரு. எஸ்.இளஞ்செழியன், செயற் பொறியாளர் அவர்களுக்கு கண்காணிப்பு பொறியாளராக கருத்தியலான பதவி உயர்வு (Notional Promotion) வழங்கும் நிகழ்வில், கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில், அவரது மூப்புநிலை நிர்ணயம் செய்யும்பட்சத்தில் தெரிவுப்பட்டியல் பின்வருமாறு அமையும்,

| வ.எண் | திருத்தியமைக்கப்படும் மூப்புநிலை | கண்காணிப்பு பொறியாளர்களின் பெயர்கள் |
|---|---|---|
| **01** | **1** | **திரு.எஸ்.இளஞ்செழியன்** |
| 02. | 1A | திரு.ஆர்.வரதராஜன் |
| 03. | 2 | பிரிஸ்சில்லா திலகராணி |
| 04. | 3 | எல்.கண்ணன் |
| 05. | 4 | ஆர்.சீனிவாசன் |
| 06. | 5 | எஸ்.ராஜேந்திரன் |

எனவே, திரு.எஸ். இளஞ்செழியன், செயற் பொறியாளர் அவர்களின் பெயரை 2014-2015 ஆம் ஆண்டின் கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் சேர்த்து திருத்திய தெரிவு பட்டியல் வெளியிடுவதற்கும் மற்றும் மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு கருத்தியலான (Notional Promotion) பதவி உயர்வு வழங்கிட வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டதற்கும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**பே.சா.து.ந.க.எண்.பி1/3517/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.12.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.634/2014 **பொருள் எண்.44**

**பேருந்து தட சாலைகளை வலுப்படுத்தி புதுப்பிக்கும் பணி – மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதியும் மற்றும் சிப்பங்களாக ஒப்பங்கள் கோருவதற்கு அனுமதி**

சென்னை மாநகரில் இயற்கை சீற்றத்தினாலும், சேவைத் துறையினரின் புதுப்பிக்கும் பணிகளாலும், பேருந்து தட சாலைகள் பழுதடைந்துள்ளன. பொது மக்களின் நலன் மற்றும் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு தார் சாலைகளை உடனடியாக சீர் செய்ய வேண்டிய கட்டாயமாகிறது.

எனவே, இப்பணிகளை 2014–15ம் ஆண்டின் விலை விவரப்பட்டியல்களின் அடிப்படையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு நிர்வாக ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும், கேம்பர் கரக்ஷன் (Camber Correction), சேவைத்துறையினரின் உபயோகத்திற்கென சாலைகளின் குறுக்கே குழாய்கள் பதித்தல், இரவு நேரத்தில் சாலைகளில் பிரதிபலிக்கும் மிளிர்வான்கள் (Road Studs), வெள்ளை வர்ணத்தில் சாலைகளை பிரிக்கும் கோடுகள் அமைத்தல் (Hot applied thermoplastic Compound), நீரோடும் பாதைகள், போக்குவரத்து அபிவிருத்தி பணிகள் மற்றும் தாருடன் பிளாஸ்டிக் கழிவுகளை உபயோகித்து வலுப்படுத்தி புதுப்பிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பணிகளின் விவரங்கள்.

| வ. எண் | மண்டலம் | வார்டு எண் | சாலையின் பெயர் | நீளம் (மீட்டரில்) | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | 7 | கார்கில் நகர் பிரதான சாலை | 1120 | 187.08 |
| 2 | 5 | 50 | மேற்கு மாதா கோயில் தெரு | 855 | 227.98 |
| 3 | 5 | 59 | என்.எஸ்.சி.போஸ் சாலை | 710 | 449.62 |
| 4 | 5 | 53 | பெத்து (நாயக்கன்) தெரு | 210 | 45.96 |
| 5 | 4 | 45&46 | மூர்த்திங்கர் தெரு | 570 | 164.95 |
| 6 | 5 | 49 | ராஜாமுத்தைய்யா சாலை | 1100 | 392.41 |
| 7 | 5 | 50 | ஈ.வி.கே.சம்பத் சாலை | 970 | 277.75 |
| 8 | 5 | 61 | கிழக்கு இராமநாதன் சாலை | 335 | 84.95 |
| 9 | 5 | 60 | வாலாஜா ரோடு | 500 | 308.32 |
| 10 | 5 | 59 | பல்லவன் சாலை | 500 | 191.09 |
| 11 | 5 | 61 | காசா மேஜர் ரோடு | 600 | 148.92 |
| 12 | 5 | 61 & 63 | ஆதித்தனார் சாலை | 965 | 286.15 |
| 13 | 4 | 35 & 37 | தண்டையார்பேட் நெடுஞ்சாலை (கொடுங்கையூர் குப்பை வளாகம் முதல் எம்.ஆர்.நகர் மார்க்கேட்) | 2800 | **712.05** |
| 14 | 5 | 58 | புரசைவாக்கம் நெடுஞ்சாலை | 900 | 367.51 |
| 15 | 5 | 58 | ஜெர்மைய்யா ரோடு | 500 | 134.97 |
| 16 | 5 | 63 | திரு.வி.க சாலை (ஜி.பி.ரோடு) | 610 | 188.68 |
| 17 | 4 | 35 | முத்தமிழ் நகர் (வடக்கு நிழற்சாலை) | 900 | 193.99 |
| 18 | 4 | 36 | எத்திராஜ்சாமி சாலை | 410 | 119.34 |
| 19 | 4 | 36 | எம்.கே.பி.நகர் மேற்கு நிழற்சாலை சாலை முதல் மேம்பால மேல்பகுதி வரை | 810 | 199.19 |
| 20 | 4 | 37 | மீனாம்பாள் சாலை | 1050 | 278.60 |
| 21 | 4 | 37 | டி.வி.கே.லிங்க் ரோடு (கிழக்கு) | 700 | 201.06 |
| 22 | 4 | 45 | பி.பி.ரோடு | 604 | 162.74 |
| 23 | 4 | 43 | கும்மளம்மன் கோயில் தெரு | 660 | 143.77 |
| 24 | 4 | 39,43 | சூர்ய நாராயண (செட்டி) தெரு | 2500 | 759.81 |
| 25 | 4 | 46 | முத்து முதலி தெரு | 250 | 56.77 |
| 26 | 4 | 39,40,42 & 48 | திருவொற்றியூர் நெடுஞ்சாலை | 1650 | 537.50 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 27 | 4 | 38 | வைத்தியநாதன் மேம்பாலம் | 650 | 252.78 |
| 28 | 4 | 47 | கத்திவாக்கம் நெடுஞ்சாலை | 550 | 176.56 |
| 29 | 5 | 49 | மேற்கு கல்மண்டபம் ரோடு | 380 | 82.50 |
| 30 | 5 | 50 | சூர்ய நாராயண (செட்டி) தெரு | 750 | 230.06 |
| 31 | 5 | 63 | டாம்ஸ் ரோடு | 220 | 73.12 |
| 32 | 5 | 50 | கிழக்கு கல்மண்டபம் ரோடு | 550 | 147.03 |
| 33 | 5 | 50 & 52 | மன்னார் சாமி கோயில் தெரு | 1295 | 392.98 |
| 34 | 5 | 53 | பார்த்தசாரதி மேம்பால சாலை | 560 | 223.77 |
| 35 | 5 | 57 | யானை கவுணி மேம்பால சாலை | 275 | 86.19 |
| 36 | 5 | 58 | திரு நாரயண குரு சாலை | 800 | 278.53 |
| 37 | 5 | 61 | பொன்னியம்மன் கோயில் தெரு | 130 | 35.29 |
| 38 | 5 | 59 | சுவாமி சிவாணந்தா சாலை | 696 | 356.02 |
| 39 | 5 | 61 | ஹால்ஸ் ரோடு | 670 | 138.69 |
| 40 | 5 | 58 | வேப்பேரி நெடுஞ்சாலை | 830 | 236.46 |
| 41 | 5 | 61 | காந்தி இர்வின் ரோடு | 860 | 325.2 |
| 42 | 5 | 59 & 60 | என்.எஸ்.சி.போஸ் சாலை (பிரகாசம் சாலை முதல் ராஜாஜி சாலை) | 540 | 343.54 |
| 43 | 5 | 62 | துணை மேயர் கபால மூர்த்தி சாலை | 270 | 97.01 |
| 44 | 5 | 60 | இப்ராஹிம்ஜி சாலை (கிளைவ் பேட்டரி முதல் தம்பு செட்டி தெரு வரை) | 500 | 162.14 |
| 45 | 5 | 60 | ராஜாஜி சாலை | **2100** | **923.12** |
| 46 | 5 | 61 | காவல் துறை ஆணையர் அலுவலக சாலை | 400 | 121.06 |
| 47 | 5 | 61 | பாந்தியன் ரோடு | 920 | 394.17 |
| 48 | 5 | 61 | எத்திராஜ் சாலை | 800 | 221.64 |
| 49 | 5 | 61 | எழும்பூர் நெடுஞ்சாலை | 450 | 154.04 |
| 50 | 5 | 61 | ருக்மணி லஷ்மிபதி சாலை | 1030 | 263.42 |
| 51 | 5 | 61 | காந்தி இர்வின் மேம்பால சாலை | 450 | 167.87 |
| 52 | 5 | 61 & 63 | லாங்ஸ் தோட்ட ரோடு | 970 | 258.14 |
| 53 | 6 | 70,71 | பெரம்பூர் நெடுஞ்சாலை (தெற்கு) | 1120 | 331.42 |
| 54 | 6 | 65,66,69 | பேப்பர் மில்ஸ் ரோடு | 2500 | 488.44 |
| 55 | 6 | 64 | செந்தில் நகர் 1வது பிரதான சாலை | 710 | 139.92 |
| 56 | 6 | 70,71 | பெரம்பூர் நெடுஞ்சாலை (வடக்கு) | 1120 | 242.34 |
| 57 | 6 | 77 | யானை கவுணி மேம்பால சாலை | 450 | 111.39 |
| 58 | 6 | 77 | புளியந்தோப்பு நெடுஞ்சாலை | 980 | 193.54 |
| 59 | 6 | 64 | இடுகாடு ரோடு | 400 | 64.43 |
| 60 | 6 | 64 | பாலாஜி நகர் 1வது பிரதான சாலை | 340 | 55.69 |
| 61 | 6 | 64 | ஜவகர் நகர் 1வது பிரதான சாலை | 500 | 107.93 |
| 62 | 6 | 64,65 | செம்பியம் செங்குன்றம் சாலை | 1000 | 175.54 |
| 63 | 6 | 65 | தில்லை நகர் 1வது பிரதான சாலை | 200 | 36.39 |
| 64 | 7 | 90 | பாடி குப்பம் பிரதான சாலை | 2170 | 898.42 |
| 65 | 8 | 105 | தண்ணீர் தொட்டி சாலை | 100 | 22.41 |
| 66 | 6 | 66 | கந்தசாமி சாலை | 250 | 46.09 |
| 67 | 8 | 102 | புல்லா நிழற்சாலை | 1500 | 465.51 |
| 68 | 6 | 64 | பூம்புகார் நகர் 1வது பிரதான சாலை | 920 | 199.22 |
| 69 | 7 | 93 | சர்ச் ரோடு | 400 | 160.99 |
| 70 | 6 | 65 | ஸ்ரீநிவாசா நகர் 1வது பிரதான சாலை | 150 | 44.19 |
| 71 | 7 | 91 | கம்பர் சாலை (பகுதி) | 600 | 203.19 |
| 72 | 7 | 82 | கருக்கு பிரதான சாலை | 1000 | 257.31 |
| 73 | 7 | 81 | சோழபுரம் பிரதான சாலை | 1000 | 272.61 |
| 74 | 7 | 91 | முகப்பேர் மேற்கு 3வது பிரதான சாலை | 780 | 246.28 |
| 75 | 7 | 86 | திருப்பதிகுடை ரோடு | 1500 | 770.17 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 76 | 8 | 107 | மெக்நிக்கல்ஸ் ரோடு (டாக்டர் குருசாமி மேம்பால சாலை) | 1105 | 215.55 |
| 77 | 7 | 92 | வெள்ளாளர் தெரு | 850 | 255.17 |
| 78 | 7 | 86 | ஐ.சி.எப் காலனி பிரதான சாலை | 1100 | 573.39 |
| 79 | 8 | 94 | வில்லிவாக்கம் நெடுஞ்சாலை | 650 | 114.77 |
| 80 | 8 | 102 | நியூ ஆவடி சாலை | 1860 | 613.49 |
| 81 | 8 | 107 | மேயர் இராமநாதன் சாலை | 1150 | 350.15 |
| 82 | 8 | 100 | அண்ணா நகர் 5வது நிழற்சாலை | 400 | 178.21 |
| 83 | 8 | 94 | சிட்கோ நகர் 4வது பிரதான சாலை | 520 | 140.20 |
| 84 | 8 | 104 | டாக்டர் அழகப்பா ரோடு | 630 | 132.23 |
| 85 | 8 | 104 | ராஜா அண்ணாமலை ரோடு | 300 | 150.03 |
| 86 | 8 | 101 | அண்ணா நகர் 2வது நிழற்சாலை | 900 | 375.95 |
| 87 | 7 | 86 | கலைவாணர் நகர் பிரதான ரோடு | 350 | 218.04 |
| 88 | 8 | 94 & 95 | எம்.டி.எச் ரோடு | 1850 | 549.98 |
| 89 | 8 | 103 | பிளவர்ஸ் ரோடு | 300 | 122.44 |
| 90 | 8 | 94 | பாளியம்மன் கோயில் தெரு | 250 | 78.65 |
| 91 | 8 | 103& 104 | புரசைவாக்கம் நெடுஞ்சாலை (பகுதி) | 500 | 202.40 |
| 92 | 8 | 100 | அண்ணா நகர் 3வது நிழற்சாலை | 1200 | 648.62 |
| 93 | 9 | 123 | சி.வி.ராமன் ரோடு | 250 | 64.28 |
| 94 | 9 | 123 | ஆர்.ஏ.புரம் 3வது குறுக்கு ரோடு | 155 | 41.10 |
| 95 | 8 | 103 | பால்பர் ரோடு | 450 | 192.15 |
| 96 | 9 | 114 | திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை | 1550 | 473.58 |
| 97 | 8 | 105 | ரசாக் தோட்ட ரோடு | 835 | 223.12 |
| 98 | 9 | 121 | வி.எம்.தெரு | 195 | 50.85 |
| 99 | 9 | 114 | பாபு ஜெகஜீவன் ராம் சாலை | 730 | 210.69 |
| 100 | 9 | 114 | வாலாஜா ரோடு | 900 | 435.93 |
| 101 | 9 | 111 | ஹாடாஸ் ரோடு | 775 | 238.63 |
| 102 | 9 | 123 | டிசில்வா ரோடு | 320 | 68.97 |
| 103 | 9 | 118 & 119 | டி.டி.கே.ரோடு | 2520 | 822.60 |
| 104 | 9 | 123 | வேரன் ரோடு | 620 | 131.13 |
| 105 | 9 | | மகாலிங்கபுரம் பிரதான சாலை | 610 | 214.02 |
| 106 | 9 | 121,126 | நடேசன் சாலை | 1190 | 272.27 |
| 107 | 9 | | உட்ஸ் ரோடு | 300 | 100.49 |
| 108 | 9 | 125 | டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை | 600 | 245.57 |
| 109 | 9 | 124 | வெங்கடேச அக்ரஹாரம் ரோடு | 420 | 114.35 |
| 110 | 9 | 124 | மந்தைவெளி தெரு | 630 | 157.72 |
| 111 | 9 | 126 | மாதா சர்ச் ரோடு | 440 | 111.08 |
| 112 | 9 | 126 | வெங்கடகிருணண ரோடு | 360 | 105.61 |
| 113 | 8 | 94 | சிட்கோ நகர் 1வது பிரதான சாலை | 650 | 115.68 |
| 114 | 9 | 126 | தெற்கு கேனால் பங்க் ரோடு | 910 | 226.51 |
| 115 | 9 | 122 | டர்ன் புல்ஸ் ரோடு | 400 | 181.08 |
| 116 | 9 | 122 | பொன் முத்துராமலிங்க தேவர் சாலை | 2300 | 795.46 |
| 117 | 9 | 125 | காரணீஸவரர் பகோடா தெரு | 580 | 173.58 |
| 118 | 10 | 128 & 137 | திருவள்ளுவர் முதல் சாலை, பிள்ளையார் கோயில் தெரு, ஏரிக்கரை சாலை மற்றும் ராமபுரம் பிரதான சாலை | 1565 | 282.90 |
| 119 | 9 | 123 | லஸ் சர்ச் ரோடு | 1150 | 421.99 |
| 120 | 9 | 126 | தேவநாதன் தெரு | 320 | 62.64 |
| 121 | 9 | 123 | பி.எஸ்.சிவசாமி சாலை | 950 | 273.22 |
| 122 | 9 &10 | 117 & 136 | வெங்கட் நாரயணா ரோடு | 1250 | 506.62 |
| 123 | 8 | 94 | ரெட்டி தெரு | 300 | 80.05 |
| 124 | 10 | 127 & 128 | காளியம்மன் கோயில் தெரு | 3200 | 848.87 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 125 | 13 | 171 | சர்தார் பட்டேல் ரோடு (அண்ணா சாலை சந்திப்பு முதல் காந்தி மண்டபம் ரோடு வரை) | 2150 | 932.65 |
| 126 | 13 | 177 | ஏ.ஜி.எஸ்.காலனி ஸ்கூல் ரோடு | 135 | 20.73 |
| 127 | 13 | 176 | பெசன்ட் நிழற்சாலை (பெசன்ட் நகர் 3வது நிழற்சாலை சந்திப்பு முதல் எல்லையம்மன் கோயில் வரை) | 1200 | 379.68 |
| 128 | 13 | 180 | சிஎஸ்ஐஆர் ரோடு | 1350 | 564.31 |
| 129 | 13 | 176 | பெசன்ட் நகர் 3வது நிழற்சாலை | 450 | 127.34 |
| 130 | 13 | 177 | ஏ.ஜி.எஸ்.காலனி 4வது தெரு | 500 | 80.98 |
| 131 | 13 | 171 & 172 | காந்தி மண்டபம் ரோடு | 2295 | 775.66 |
| 132 | 13 | 172 & 175 | சர்தார் பட்டேல் ரோடு (காந்தி மண்டபம் சாலை சந்திப்பு முதல் துர்காபாய் தேஷ்முக் சாலை (ஆவின் பார்க்) வரை) | 1950 | 846.12 |
| 133 | 13 | 177 | ஆண்டாள் நகர் 6வது குறுக்கு தெரு | 210 | 35.98 |
| 134 | 13 | 179 | எல்.ஐ.சி காலனி பிரதான சாலை | 160 | 24.37 |
| 135 | 13 | 182 | காமராஜர் நகர் 22வது தெரு | 200 | 45.83 |
| 136 | 10 | 136 | கோபதி நாரயண சாலை (பகுதி) | 800 | 345.96 |
| 137 | 9 | 114 | சுவாமி சிவாணந்தா சாலை | 500 | 264.27 |

மேற்கண்டபணிகளை செயல்படுத்திட தயாரிக்கப்பட்ட 137 திட்டமதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி மற்றும் சிப்பங்களாக ஒப்பங்கள் கோருவதற்கு நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 19.12.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.12.2014 அன்று தீர்மான எண். 490/2014ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 22.12.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.12.2014 அன்று தீர்மான எண். 510/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இப்பொருளை மன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தலைமை பொறியாளர் (பொது) (பொறுப்பு) அவர்கள் இன்று காலை சுமார் 10.15 மணிக்கு கொண்டு வந்ததால், எந்தெந்த சாலைகளில், எத்தனை எண்ணிக்கையிலான சாலைகளில் எத்தகைய பணிகளை (அதாவது, தார் சாலை அல்லது சிமெண்ட் கான்கிரீட் சாலை) மேற்கொள்ளலாம் என்பது குறித்து மேற்பார்வை பொறியாளர் (பேருந்து சாலைகள் துறை), தலைமை பொறியாளர்(பொது) (பொறுப்பு), துணை ஆணையாளர் (பணிகள்), முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் மற்றும் மேயர் அவர்கள் கலந்து ஆலோசித்து அதன் அடிப்படையில் முடிவு செய்யப்படும் என்ற கருத்தின் அடிப்படையில் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.

******

**<u>பே.சா.து.ந.க.எண்.பி1/3518/2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.12.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.635/2014 பொருள் எண்.45

**<u>தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2014–15 (TURIP 2014-15) பேருந்து தட சாலைகள் வலுப்படுத்தி புதுப்பிக்கும் பணி – மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதியும் மற்றும் சிப்பங்களாக ஒப்பங்கள் கோருவதற்கும் அனுமதி</u>**

சென்னை மாநகரில் இயற்கை சீற்றத்தினாலும், சேவைத் துறையினரின் புதுப்பிக்கும் பணிகளாலும் பழுதடைந்த பேருந்து தட சாலைகளை பொது மக்களின் நலன் மற்றும் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு தார் சாலைகளை உடனடியாக சீர் செய்ய வேண்டிய கட்டாயமாகிறது.

இச்சாலைகளை மேம்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2014–15 (TURIP 2014-15) கீழ் 93.02 கி.மீ. நீளமுள்ள 113 பேருந்து தட சாலைகளை ரூ.195.06 கோடி உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இயக்குநர், நகராட்சி நிர்வாகம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இவற்றில் மண்டலம் –6, 9, 10 மற்றும் 13–ல் அமைந்துள்ள 46 சாலை பேருந்து தட சாலைகளை மட்டும் மேம்படுத்த ரூ.74.88 கோடி நிதி ஒதுக்கீடு செய்து இயக்குநர், நகராட்சி நிர்வாகத்தால் நிர்வாக அனுமதியினை பார்வையில் கண்டுள்ள செயல்முறை ஆணையில் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 46 சாலை பணிகளை மேம்படுத்த தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளில் கேம்பர் கரக்ஷன் (Camber Correction), சேவைத்துறையினரின் உபயோகத்திற்கென சாலைகளின் குறுக்கே குழாய்கள் பதித்தல், இரவு நேரத்தில் சாலைகளில் பிரதிபலிக்கும் மிளிர்வான்கள் (Road Studs), வெள்ளை வர்ணத்தில் சாலைகளை பிரிக்கும் கோடுகள் அமைத்தல் (Hot applied thermoplastic Compound), நீரோடும் பாதைகள், போக்குவரத்து அபிவிருத்தி பணிகள் மற்றும் தாருடன் பிளாஸ்டிக் கழிவுகளை உபயோகித்து வலுப்படுத்தி புதுப்பிக்கவும் வழிவகை செய்யப்பட்டது இதனால் 46 சாலை பணிகளின் திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.106.66 கோடி ஆகும்.

இந்த 46 சாலை பணிகளுக்கான திட்ட மதிப்பீட்டுத் தொகையில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2014–15 (TURIP 2014-15) கீழ் நிதி ஒதுக்கீடு செய்த தொகை ரூ.74.88 கோடி போக மீதமுள்ள தொகையான ரூ.31.78 கோடி செலவீனத்தை மாநகராட்சி மூலதன நிதி மூலம் மேற்கொள்ளவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

பணிகளின் விவரங்கள்

| வ. எண் | மண்டலம் | வார்டு எண் | சாலையின் பெயர் | நீளம் (மீட்டரில்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 6 | 70, 73 | டாக்டர்.அம்பேத்கர் கல்லூரி சாலை | 1470 | 355.04 |
| 2 | 6 | 77 | டெமொல்லாஸ் சாலை | 950 | 218.21 |
| 3 | 9 | 110 | ஸ்டெர்லிங் சாலை | 1235 | 340.51 |
| 4 | 9 | 111 | கல்லூரி சாலை | 1370 | 401.05 |
| 5 | 9 | 111 | பின்னி சாலை | 270 | 134.87 |
| 6 | 9 | 111 | ஒயிட்ஸ் சாலை | 1000 | 336.86 |
| 7 | 9 | 111 | கிரீம்ஸ் சாலை | 1310 | 428.89 |
| 8 | 9 | 113 | உத்தமர் காந்தி சாலை | 1525 | 551.26 |
| 9 | 9 | 110 & 113 | வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலை (உத்தமர் காந்தி சாலை முதல் கல்லூரி சாலை வரை) | 350 | 111.19 |
| 10 | 9 | 122 | செனடாப் சாலை | 575 | 130.27 |
| 11 | 9 | 123 | ராஜா அண்ணாமலைபுரம் 2வது பிரதான சாலை | 690 | 203.63 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | 9 | 115 | பீட்டர்ஸ் சாலை சந்திப்பு முதல் கான்ரான்ஸ்மித் சாலை சந்திப்பு வெஸ்ட்காட் சாலை | 1240 | 384.66 |
| 13 | 9 | 124,126 &173 | ராமகிருஷ்ணமடம் சாலை | 2230 | 554.59 |
| 14 | 9 | 125 & 126 | சாந்தோம் நெடுஞ்சாலை | 1570 | 459.08 |
| 15 | 9 | 110 | ஸ்டெர்லிங் அவென்யூ | 175 | 76.59 |
| 16 | 9 | 63, 114 & 116 | பாரதி சாலை | 1900 | 489.35 |
| 17 | 9 | 118 | மேயர் சுந்தர்ராவ் சாலை | 285 | 65.91 |
| 18 | 9 | 123 | சி.பி.ராமசாமி சாலை | 1200 | 330.78 |
| 19 | 10 | 128 | காமராஜர் சாலை(விருகம்பாக்கம்) | 150 | 30.91 |
| 20 | 10 | 128 | ரெட்டி தெரு | 390 | 60.00 |
| 21 | 10 | 141 | சிஜடி நகர் 4வது பிரதான சாலை | 215 | 32.36 |
| 22 | 10 | 141 | சிஜடி நகர் 3வது பிரதான சாலை | 150 | 30.87 |
| 23 | 10 | 134 | ரெங்கராஜபுரம் பிரதான சாலை (பகுதி) | 600 | 172.95 |
| 24 | 10 | 139 | ஆர்ஆர் காலனி தெற்கு தெரு | 250 | 51.84 |
| 25 | 10 | 139 | ஆர்ஆர் காலனி 1வது தெரு | 350 | 71.72 |
| 26 | 10 | 133 | அசோக்நகர் 12வது நிழற்சாலை | 150 | 29.44 |
| 27 | 10 | 139 | ஜாபர்கான்பேட்டை பிரதான சாலை | 850 | 144.23 |
| 28 | 10 | 135 | பிருந்தாவன் தெரு | 600 | 92.99 |
| 29 | 10 | 136 | துரைசாமி தெரு | 210 | 51.42 |
| 30 | 10 | 132 | காமராஜர் சாலை(கே.கே.நகர்) | 1000 | 234.32 |
| 31 | 10 | 141 | சிஜடி நகர் 1வது பிரதான சாலை | 525 | 150.69 |
| 32 | 10 | 141 | தெற்கு உஸ்மான் சாலை | 500 | 168.22 |
| 33 | 10 | 136 | உஸ்மான் சாலை | 1325 | 378.55 |
| 34 | 13 | 175 | வடக்கு கால்வாய்கரை சாலை | 1079 | 283.55 |
| 35 | 13 | 174 &179 | வேளச்சேரி பிரதான சாலை | 4000 | 1013.99 |
| 36 | 13 | 171 | தாலுக்கா அலுவலக சாலை | 775 | 327.42 |
| 37 | 13 | 175 | இந்திராநகர் 1வது பிரதான சாலை | 750 | 170.25 |
| 38 | 13 | 173 | காமராஜர் சாலை (ஆர்ஏ புரம்) | 680 | 161.03 |
| 39 | 13 | 173 | பி.எஸ். குமாரசாமி ராஜா சாலை | 1000 | 191.28 |
| 40 | 13 | 175 | மரு.முத்துலட்சுமி சாலை | 1000 | 298.49 |
| 41 | 13 | 177 | பிருந்தாவன் நகர் | 425 | 60.97 |
| 42 | 13 | 177 | மகாலட்சுமிநகர் பிரதான சாலை | 275 | 44.72 |
| 43 | 13 | 179 | மகாத்மாகாந்தி சாலை | 650 | 170.72 |
| 44 | 13 | 175 | கல்கி கிருணணமூர்த்தி சாலை | 1000 | 298.29 |
| 45 | 13 | 175 | இந்திராநகர் 3வது பிரதான சாலை | 720 | 176.32 |
| 46 | 13 | 175 | இந்திராநகர் 2வது பிரதான சாலை | 800 | 195.88 |

எனவே,

1) மேற்கண்ட பணிகளுக்காக தயாரிக்கப்பட்ட 46 திட்டமதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதியும்

2) 46 பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மொத்த திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.106.66 கோடி ஆகும் இதில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2014–15 (TURIP 2014-15) கீழ் நிதி ஒதுக்கீடு செய்த ரூ.74.88 கோடி போக மீதமுள்ள தொகை ரூ.31.78 கோடி செலவீனத்தை மாநகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்ளவும்

3) மேற்கண்ட பணிகளை சிப்பங்களாக ஒப்பங்கள் கோரவும்

மேற்கண்ட பணிகளை செயல்படுத்திட தயாரிக்கப்பட்ட 46 திட்டமதிப்பீடுகளுக்கும், 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கும் நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 19.12.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.12.2014 அன்று தீர்மான எண். 491/2014ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 22.12.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.12.2014 அன்று தீர்மான எண். 511/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>பே.சா.து.ந.க.எண்.பி1/3498/2014</u>**

**<u>ஆணையர்(பொறுப்பு) அவர்களின் 26.12.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.636/2014 பொருள் எண்.46

**<u>பேருந்து தட சாலைகள் மேம்படுத்துதல் – சென்னை பெருநகர வளர்ச்சித் திட்ட நிதியின்(CMCDM) கீழ் அல்லது பெருநகர கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (MIDF) யின் கீழ் நிதி கோருவதற்கு அனுமதி</u>**

சென்னை நகரில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக சென்னை மாநகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு கட்டமாக சென்னை நகரிலுள்ள பேருந்து தட சாலைகளை மேம்படுத்தும் நோக்கில் 137 பேருந்து தட சாலைகளை ரூ.361.02 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மழையின் காரணமாகவும், பல்வேறு சாலை வெட்டு பணிகளாலும் சேதமடைந்த இச்சாலைகளை புதுப்பிப்பது மிக்க அவசியமான ஒன்றாகும். இப்பணிகளை மேற்கொள்வதன் மூலம் வாகனங்கள் செல்வதற்கு எளிதாகவும், பொது மக்களுக்கு வசதியாகவும் அமையும். மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்காக தேவைப்படும் நிதியை சென்னை பெருநகர வளர்ச்சித் திட்ட நிதியின்(CMCDM) கீழ் அல்லது பெருநகர கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (MIDF) யின் கீழ் பெறுவதற்கு நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 19.12.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.12.2014 அன்று தீர்மான எண். 492/2014ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 22.12.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.12.2014 அன்று தீர்மான எண்.512/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>பே.சா.து.ந.க.எண்.பி1/3510/2014</u>**

**<u>ஆணையர்(பொறுப்பு) அவர்களின் 26.12.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.637/2014 **பொருள் எண்.47**

**<u>பேருந்து தட சாலைகள் மேம்படுத்துதல் – தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2014 –2015 – சாலைப் பணிகளுக்கான ஒப்பம் கோருதல் அனுமதி</u>**

சென்னை நகரில் மழையினால் பாதிக்கப்பட்ட பேருந்து தட சாலைகளை மேம்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2014 –2015-ன் கீழ் 93.02 கி.மீ. நீளமுள்ள 113 பேருந்து தட சாலைகளை ரூ.195.06 கோடி உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இயக்குநர், நகராட்சி நிர்வாகம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இவற்றில் மண்டலம் –6, 9, 10 மற்றும் 13–ல் அமைந்துள்ள 46 பேருந்து தட சாலைகளை மேம்படுத்த ரூ.74.88 கோடி ஒதுக்கீடு செய்து இயக்குநர், நகராட்சி நிர்வாகத்தால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மண்டலம் –6, 9, 10 மற்றும் 13–ல் அமைந்துள்ள 46 பேருந்து தட சாலைகளை கள ஆய்வு செய்து தயாரிக்கப்பட்ட இறுதி மதிப்பீடானது ரூ.106.66 கோடியாகும். இச்சாலை பணிகளுக்கான ஒப்பம் கோருவதற்கு நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 19.12.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.12.2014 அன்று தீர்மான எண். 493/2014ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 22.12.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.12.2014 அன்று தீர்மான எண்.513/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**நி.நி.பி.ந.க.எண்.க&மா–1/3401/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.12.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.6382014 பொருள் எண்.48

**சென்னை மாநகராட்சி – இந்தியன் வங்கி – மூலதனப் பணிகள் 2014–2015 ஆம் நிதியாண்டில் ரூ.1000.00 கோடி மற்றும் 2015–2016 ஆம் நிதியாண்டில் ரூ.800.00 கோடி கடன் பெறுவதற்கு அனுமதி**

2014–15 நிதியாண்டில் சென்னை மாநகராட்சி அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் (15 மண்டலங்கள்) பல்வேறு வளர்ச்சிப் பணிகள் அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக TURIF, CMCDM (GRID WORK) இப்பணிகளுக்காக அரசிடமிருந்தும், நிதி நிறுவனங்களிடமிருந்தும் மான்யம் மற்றும் கடன்பெறுவதில் காலதாமதமும், 10000 Roads Scheme பணிகளுக்காக நிதி நிறுவனங்களிடமிருந்தும் கடன்பெறுவதில் காலதாமதமும் ஏற்பட்டு வருகிறது.

2014–2015–ஆம் நிதியாண்டில், ரூ.2600.00 கோடியளவில் மூலதனப் பணிகள் மேற்கொள்ள திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அதில் இதுவரை சுமார் ரூ.1500.00 கோடியளவில் பணிகள் நிறைவு பெற்றுள்ளது. இதில் தற்பொழுது ரூ.200.00 கோடியளவிற்கு பட்டிகள் தீர்வு செய்யப்பட வேண்டியுள்ளது. எஞ்சியுள்ள மூன்று மாத கால அளவில் தோராமாக ரூ.900.00 கோடியளவிற்கு பணிகள் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மூலதனப் பணிகளுக்கான பட்டிகளும் தீர்வு செய்யப்பட வேண்டியுள்ளது. இதனை கருத்திற்கொண்டு, சென்னை மாநகராட்சியின் அன்றாடப் பணியில் தொடர்புடைய இந்தியன் வங்கியில் 2014–2015 ஆம் நிதியாண்டில் தோராயமாக ரூ.1000.00 கோடி கடனாக பெறலாம் என உத்தேசிக்கப்பட்டு, 26.11.2014 அன்று துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) மற்றும் இந்தியன் வங்கி துணை பொது மேளாலர், உதவி பொது மேலாளர் மற்றும் பிற இந்தியன் வங்கி அலுவலர்களுடன் இணைந்து கடன் பெறுவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்வது தொடர்பாக நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் மேற்படி கடன் பெறுவது பற்றி விவாதிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) அவர்களின் ஆணையின்படி கணக்கு அலுவலர் (வரவு மற்றும் செலவு) அவர்கள், இந்தியன் வங்கி பொது மேலாளர் (வடக்கு) மற்றும் உதவி பொது மேலாளர், இந்தியன் வங்கி, எம்.ஜி.டி கிளை அவர்களுடன் 15.12.2014 அன்று ஆலோசிக்கப்பட்டது. நடப்பு நிதியாண்டில் இனி வரும் மாதங்களில் மேற்கொள்ளப்படவுள்ள மூலதனப் பணிகளுக்கும் கடன் அளிக்க பரிசீலிக்கப்படும் என இந்தியன் வங்கி அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது.

தற்போது சென்னை மாநகராட்சியில் 2014–2015 ஆம் நிதியாண்டில் நடைபெற்று கொண்டிருக்கும் மூலதனப் பணிகளுக்கு தோராயமாக ரூ.500.00 கோடி முதல் ரூ.1000.00 கோடி வரை பற்றாக்குறை ஏற்படும் வாய்ப்பினை தவிர்க்க, முதற்கட்டமாக இப்பணிகளின் மீது கடன் வழங்க இந்தியன் வங்கி ESCROW முறைப்படி அடமானம், அரசுப் பிணை மற்றும் வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுவதை இந்தியன் வங்கியிடம் தெரிவிப்பது போன்ற நிபந்தனைகளிலிருந்து விலக்கு அளித்து வழங்க துணை பொது மேலாளர், இந்தியன் வங்கி வாய்மொழி ஒப்புதல் அளித்துள்ளார்.

தற்பொழுது சென்னை மாநகராட்சியின் கடன் சுமை ரூ.513.34 கோடியாக உள்ளது. இதற்கான ஆண்டு தோறும் செலுத்த வேண்டிய அசல் மற்றும் வட்டி தோராயமாக ரூ.160.00 கோடி ஆகும். மேலும், **சென்னை மாநகர முனிசிபல் சட்டம் 1919, பிரிவு எண்.144ல், நிலம் மற்றும் கட்டடம் ஆகியவற்றின் ஆண்டு மதிப்பில் 12.50 விழுக்காடு அளவிற்கு கடன் மற்றும் வட்டியினை திருப்பி செலுத்துமளவிற்கு அனுமதித்துள்ளது. இதனடிப்படையில் சென்னை மாநகராட்சியின் தற்போதைய சொத்து வரியின் ஆண்டு மதிப்பில் தோரயமாக ரூ.430.00 கோடியளவிற்கு அசல் மற்றும் வட்டியினை திருப்பி செலுத்த தகுதியுள்ளது.**

**நடப்பு நிதியாண்டில் இந்தியன் வங்கியிலிருந்து நீண்டகால கடனாக பெறப்படவுள்ள ரூ.1000.00 கோடிக்கான அசல் மற்றும் வட்டியினை திருப்பி செலுத்தும் தகுதி உள்ளது.**

தமிழக அரசின் தொலைநோக்கு திட்டம்–2023ன் படி, சென்னை நகரத்தின் அனைத்து விதமான அடிப்படை வசதிகளையும் உருவாக்குவதில் சென்னை மாநகராட்சி அடுத்த பத்து ஆண்டுகளில் ரூ.26,000.00 கோடியளவில் மூலதனப் பணிகளை மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள வல்லுநர்கள், சென்னை மாநகராட்சியின் மூலதன செலவினங்களில் 95 விழுக்காடு ஆண்டுதோறும் வளர்ச்சி இருக்குமென தெரிவித்துள்ளனர். மேலும், சென்னை மாநகராட்சியின் தற்பொழுதுள்ள சொத்து வரி ஆண்டு மதிப்பின்படி ரூ.1800.00 கோடி வரை கடன் பெறும் தகுதி உள்ளதெனவும் தெரிவித்துள்ளனர்.

2015–2016–ஆம் நிதியாண்டில் தோராயமாக ரூ.2000.00 கோடி அளவிற்கு பணிகள் மேற்கொள்ள மண்டல அலுவலர்கள் மற்றும் துறைத் தலைவர்களிடமிருந்து வரவு செலவு திட்ட அறிக்கைகள் பெறப்பட்டுள்ளது. தற்பொழுதுள்ள சென்னை மாநகராட்சியின் நிதி நிலைமையினை கருத்திற்கொண்டு அடுத்த நிதியாண்டான 2015–2016–ல் மேற்கொள்ளப்படவுள்ள மூலதனப் பணிகளுக்கு ரூ.800.00 கோடியளவில் இந்தியன் வங்கியில் கொள்கை அடிப்படையில் கடன் உறுதி பெற (In-Principle Sanction) உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டவாறு இந்தியன் வங்கியிலிருந்து கடன் பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டியது அவசியமாகிறது.

எனவே,

1. நடப்பு நிதியாண்டில் நடைபெற்று வருகின்ற மூலதனப் பணிகளுக்கான திட்ட மதிப்பீட்டுத் தொகையில் ரூ.1000.00 கோடியினை இந்தியன் வங்கியிலிருந்து கடன் பெறவும்,
2. அடுத்த நிதியாண்டான 2015–2016–ல் மேற்கொள்ளப்படவுள்ள மூலதனப் பணிகளில் தோராயமாக ரூ.800.00 கோடிக்கு இந்தியன் வங்கியில் கொள்கை அடிப்படையில் கடன் உறுதி பெறவும்,
3. இனிவருங்காலங்களில் மூலதனப் பணிகளுக்கான செலவினங்களை எதிர்கொள்ள தேவைப்படும் நிதியினை சென்னை மாநகராட்சியின் பணி தொடர்புடைய வங்கிகளிலிருந்து கடன் பெற சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அனுமதி வழங்கிடவும்,

மேற்குறிப்பிட்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> “ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 22.12.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.12.2014 அன்று தீர்மான எண். 514/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண். ஈ3 / 5760 / 2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.12.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.639/2014 **பொருள் எண்.49**

**பணியமைப்பு**

30.01.2014 நாளிட்ட மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையில், திரு.எஸ்.பாலாஜி, தனி வட்டாட்சியர், (நி.எ) அலகு–4, சிப்காட், திருமங்கலம், மதுரை மாவட்ட வருவாய் அலகு என்பவரை, சென்னை மாநகராட்சிக்கு அயற்பணியில், அயற்பணிக்குரிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் ‘‘ஒரு வருட காலம்’’பணிபுரிய ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, 14.02.2014 நாளிட்ட முதன்மைச் செயலர்/ஆணையர், சென்னை மாநகராட்சி அவர்களின் செயல்முறை ஆணையின்படி, திரு.எஸ்.பாலாஜி, தனிவட்டாட்சியர் அவர்கள் சென்னை மாநகராட்யில் நிர்வாக அலுவலர் ஆக அயற்பணியில் 01.02.2014 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

தற்போது இவர் சென்னை மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு மாணவ, மாணவிகளின் தேர்ச்சி சதவீதத்தை 100 சதவீதமாக கொண்டுவரும் வகையில் பள்ளி மாணவர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறார்.

திரு.எஸ்.பாலாஜி, தனி வட்டாட்சியர்/ நிர்வாக அலுவலர், சென்னை மாநகராட்சி அவர்களின் அயற்பணிகாலம் 31.01.2015ல் ஓராண்டு முடிவடைகிறது. 2014–15ம் கல்வி ஆண்டின் இறுதித்தேர்வுகள் நடைபெற இருப்பதாலும் சென்னை மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் தேர்ச்சி சதவீதத்தை 100 சதவீதமாக கொண்டுவரும் முயற்சியினை கருத்தில் கொண்டும் சிறப்பு நிகழ்வாக கருதி தனியரின் அயற்பணிக் காலத்தினை 01.02.2015 முதல் 18 மாதத்திற்கு நீட்டிக்க வேண்டி தனியரின் தாய்த்துறையான வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ9/1537/2012.**

**முதன்மைச்செயலர் / ஆணையரின் 23.10.2014 ஆம் நாளிட்ட குறிப்பு.**

தீர்மான எண்.640/2014 **பொருள் எண்.50**

**மண்டலம் –8, கோட்டம் – 104, சென்னை மாநகராட்சி– நிலம் மறறும் உடைமைத்துறை ஓட்டேரி செங்கற் சூளை சாலை சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான (தனி) காலி நிலத்தினை த.நா.கு.மா. மாற்று வாரியம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கு நில உரிமை மாற்றம் செய்ய அனுமதி.**

வணக்கத்திற்குரிய மேயர் 10.11.2013 அன்று கோட்டம்–104க்கு உட்பட்ட திடீர் நகர் பகுதியில் ஆய்வு மேற்கொண்டபொழுது அப்பகுதி பொதுமக்கள் கோரியதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திடீர் நகர் திட்டப்பகுதியின் அருகில் குடியிருக்கும் குடிசைத்தாரர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட வேண்டி அதன் அருகில் அமைந்துள்ள ஒட்டேரி மயானத்தை விரிவாக்கம் செய்யும் பொருட்டு மாநகராட்சியால் கையகப்படுத்தப்பட்ட புரசைவாக்கம் கிராமம் புல எண்.3077 முதல் 3081 வரையுள்ள மாநகராட்சி தனி நிலத்தை குடிசை மாற்று வாரியத்திற்கு நிலமாற்றம் செய்ய கோரியதின் அடிப்படையிலும் 104–வது மன்ற உறுப்பினர் வணக்கத்திற்குரிய மேயரிடம் அளித்துள்ள மனுவின் அடிப்படையிலும் 24.12.2013 நாளிட்ட மண்டல அலுவலரின் குறிப்பில் மேற்குறிப்பிட்டுள்ள நிலத்தை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில மாற்றம் செய்ய கோரப்பட்டுள்ளது.

23.12.2013 நாளிட்ட தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரிய நிர்வாக பொறியாளரின் கடிதத்தில் திடீர் நகர் குடிசை திட்டப்பகுதி அருகில் மாநகராட்சி நிலத்தில் குடியிருக்கும் 750 குடும்பங்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு கட்டுவதற்காக மேற்குறிப்பிட்ட மாநகராட்சி தனி நிலத்தை வாரியத்திற்கு நில மாற்றம் செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட நிலம் (புரசைவாக்கம் கிராமம் மேற்படி புலஎண்.3077 முதல் 3081 வரையில் உள்ள நிலம்) மயான விரிவாக்கத்திற்கென்று கையகப்படுத்தப்பட்ட சென்னை மாநகராட்சி தனிநிலம் (35 மனை 375 ச.அடி) என்பதாலும், தற்போது ஆக்கிரமிப்பு இன்றி காலியாக உள்ளதாலும், அரசாணை எண்.35, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்–17.02.1997–இன்படி மேற்கண்ட நிலத்திற்கு சந்தைவிலை அடிப்படையில் நிலக்கிரயத்தொகை செலுத்துவதற்கு இசைவு தெரிவிக்குமாறு தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய மேலாண்மை இயக்குநரை கேட்டுக்கொள்வதற்கும், வாரியத்தால் கிரயத்தொகை செலுத்திய பிறகு அரசு விதிமுறைக்குட்பட்டு (Change of classification and withdrawal of notification) நிலமாற்றம் / முன்நுழைவு அனுமதி வழங்க இயலும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வார்டு குழு பரிந்துரையினை எதிர்நோக்கி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்க 23.01.2014–ஆம் நாளிட்ட முதன்மைச் செயலர்/ஆணையரின் ஒப்புதல் பெறப்பட்டது.

மன்றத்தீர்மான எண்.96 / 2014 நாள்.24.01.2014–ல் மேற்படி 35 மனை 375 ச. அடி பரப்புள்ள மாநகராட்சி தனி நிலத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள ஏழை எளியமக்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் 1000 அடுக்கு மாடி குடியிருப்பு வீடுகள் கட்டித்தரும் பொருட்டு மனை ஒன்றுக்கு ரூ.10,000/– வசூலித்துக் கொண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திக்கு நிலம் மாற்று செயலாம் எனவும் அவசரம் அவசியம் கருதி இப்புலத்தில் முன்நுழைவு (Enter Upon Permission) செய்து கொள்ள அனுமதிக்கலாம் என மன்றம் அனுமதி அளித்துள்ளது.

18.02.2014 ஆம் நாளிட்ட வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் குறிப்பில் வணக்கத்திற்குரிய மேயர், முதன்மை செயலர்/ஆணையர், துணை ஆணையர்(வ.ம.நி), மாவட்ட வருவாய் அலுவலர்(நிமஉது), தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய பொறியாளர் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில் மாநகராட்சிக்குச் சொந்தமான 86 மனை நிலத்தை வாரியத்துக்கு நிலமாற்றம் செய்ய முடிவெடுக்கப்பட்டது. மேலும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் கோரியுள்ள 86 மனை நிலத்தை வழங்குவதற்கு பதிலாக, அங்கு கட்டப்படவுள்ள குடியிருப்பு பகுதியின் கட்டட பகுதி, பூங்கா, நியாயவிலை கடை, திறந்தவெளி நிலம் போன்றவற்றிற்கு எந்தெந்த புல எண்களில் எவ்வளவு பரப்பளவு நிலம் தேவை என்பதை வாரியத்திடமிருந்து பெற்று, அதன் அடிப்படையில் நில மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கலாம் எனவும், வாரியம் அடுக்குமாடிக்குடியிருப்பு கட்டிய பின்னர், மாநகராட்சி நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வரும் குடிசைதாரர்களை அக்குடியிருப்பில் குடி அமர்த்தியவுடன், குடிசைதாரர்கள் தற்போது குடியிருந்து வரும் 22 மனை 537ச.அடி, பரப்பு நிலம், MUDP திட்டத்தில் ஏற்கனவே வாரியத்திடம் மாநகராட்சி ஒப்படைத்துள்ள 11 மனை 772 ச.அடி என மொத்தம் 33 மனை 1309 ச.அடி பரப்பு நிலத்தை மாநகராட்சியின் எதிர்கால தேவைக்காக ஆக்கிரமிப்பு ஏதுமின்றி வாரியம் மாநகராட்சியிடம் ஒப்படைக்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

25.02.2014 நாளிட்ட வாரிய செயற்பொறியாளரின் கடிதத்தில் மேற்கண்ட புல எண்.3077 முதல் 3086 வரை உள்ள காலியாகவுள்ள 64 மனை 509 சதுர அடி நிலத்தில் சுமார் 70 சதவிகித இடத்தில் குடியிருப்புகள் கட்டவும், எஞ்சியுள்ள 30 சதவிகித இடத்தில் பூங்கா, ரேஷன் கடைகள், பொது உபயோக பயன்பாட்டிற்குரிய இடங்களாக ஒதுக்கப்படவேண்டும் என சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் (CMDA) வழிகாட்டுதல் உள்ளதாகவும், எனவே 64 மனை 509 சதுர அடியில் சுமார் 500 குடியிருப்புகள் மட்டுமே கட்ட வாய்ப்பு உள்ளதால் மொத்தமாக உள்ள ஆக்கிரமிப்புதாரர்களுக்கு குடியிருப்புகள் கட்ட இயலாது என்று தெரிவித்து, காலியாக உள்ள புல எண்.3085 மற்றும் 3086–க்கு தெற்கு பக்கத்தில் உள்ள புல எண்.3065 முதல் 3068 வரையிலான 23 மனைகள் 1344 சதுர அடி பரப்பு நிலத்தையும் சேர்த்து மொத்தமாக 89 மனைகள்1853 சதுர அடி நிலத்தை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றுவாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்து கொடுத்தால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள அனைத்து குடிசை வாசிகளுக்கும் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டிக்கொடுத்து ஆக்கிரமிப்பு செய்துள்ள 22 மனை உள்ளிட்ட 33 மனைகள் 1299 சதுர அடி நிலத்தை சென்னைமாநகராட்சிக்கு ஒப்படைக்க இயலும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் உயர் நீதிமன்றத்தில் திரு. பாலசுப்பிரமணியம் என்பவர் தன் தந்தை சண்முகம் என்பவரிடமிருந்து புரசைவாக்கம் கிராமம் புல எண்.3077 – 3081–ல் சுமார் 35 மனை பரப்பு நிலத்தை மாநகராட்சி 1949–ஆம் ஆண்டில் ஒட்டேரி மயானத்தை விரிவாக்கம் செய்யும் பொருட்டு கையகப்படுத்தியதாகவும், ஆனால் இன்று வரை அந்நிலம் விரிவாக்கம் செய்யப்படாமல் காலியாக இருப்பதாகவும் குறிப்பிட்டு, அந்நிலத்தை தமக்கு அரசு விதிகளின்படி மீள வழங்க ஆணையிடுமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்கு (நீதி பேராணை மனு எண்.24597/2006) தொடுத்தார். அவ்வழக்கு மீதான 02.07.2012–ஆம் நாளிட்ட தீர்ப்பில் மாநகராட்சி வழக்குரைஞர் நாளுக்கு நாள் பெருகிவரும் மக்கள் தொகையின் காரணமாக எதிர்காலத்தில் மயான விரிவாக்கத்திற்கு அந்நிலம் தேவைப்படும் என வாதாடியதை நீதிமன்றம் ஏற்றுகொண்டு அதனை தீர்ப்புரையில் குறிப்பிட்டு அவ்வழக்கை தள்ளுபடி செய்துள்ளது.

எனவே, நிலம் கொடுத்தவர் இந்நிலத்தை திரும்ப பெறுவதற்கு மீண்டும் வழக்கு தொடர வாய்ப்பு உள்ளதா என்ற விவரத்தை தெரிவிக்குமாறு சட்ட அலுவலரிடம் கருத்துரு கோரப்பட்டது.

மேற்படி சட்ட அலுவலரின் 29.05.2014–ஆம் நாளிட்ட குறிப்பில் உயர்நீதிமன்ற தீர்ப்பில் பொது பயன்பாட்டுக்கு நிலம் கொடுத்தவர் அந்நிலத்தை திரும்ப கோருவதற்கு எவ்வித உரிமை இல்லை எனவும், ஏற்கனவே, 35 மனை 375 ச. அடிக்கு மன்ற தீர்மானத்தில் வாரியத்திற்கு முன்னுழைவு அளித்தது போக தற்போது கூடுதலாக கோரியுள்ள 54 மனை 1478 ச. அடி நிலம் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நில மாற்றம் செய்வதற்கு முதன்மை செயலர் / ஆணையரின் ஒப்புதல் சட்ட அலுவலர் மூலம் பெறப்பட்டது.

எனவே,

அ) தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஏழை எளிய மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு கட்ட கோரியுள்ள புல எண்.3077 முதல் 3081 வரையுள்ள 35 மனை 375 ச. அடி காலி நிலத்திற்கு மன்றம் ஒரு மனைக்கு ரூ.10,000/– என நிலக்கிரயம் நிர்ணயித்து மன்றத்தீர்மான எண்.96/2014 நாள்.24.01.2014–ல் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதால் இந்நிகழ்வுகளுக்கு அரசாணை எண்.35, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.17.02.1997–லிருந்து தளர்வு செய்து மனைக்கு ரூ.10,000/– என நிலக்கிரயம் நிர்ணயித்து அரசாணை வழங்குமாறும், மேலும் மயான வகைப்பாடு கொண்ட இந்நிலத்தை குடியிருப்பு பயன்பாட்டிற்கு மாற்றம் செய்வதற்கு அனுமதி அளிக்கமாறு அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையினரை கேட்டுக் கொள்வதற்கும் மேற்படி விவரத்தை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய மேலாண்மை இயக்குநருக்கு தெரிவிப்பதற்கும்,

ஆ) மேலும் தற்போது கூடுதலாக வாரியம் கோரியுள்ள புல எண்.3082 முதல் 3086 வரை மற்றும் 3065 முதல் 3068 வரையுள்ள 54 மனை 1478 ச. அடி நிலத்திற்கு சந்தை விலை அடிப்படையில் நிலக்கிரயத் தொகை செலுத்துவதற்கு இசைவு தெரிவிக்குமாறு தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய மேலாண்மை இயக்குநரை கேட்டுக் கொள்வதற்கும், மாநகராட்சி நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வரும் 22 மனை 537 ச. அடி மற்றும் MUDP திட்டத்தில் ஏற்கனவே, வாரியத்திடம் ஒப்படைத்துள்ள 11 மனை 772 ச. அடி என மொத்தம் 33 மனை 1309 ச. அடி பரப்பு நிலத்தை மாநகராட்சி எதிர்கால தேவைக்காக ஆக்கிரமிப்பு ஏதுமின்றி வாரியம்

மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்படும் என்று வாரியத்தால் உறுதி மொழி அளிக்க வேண்டும் என்றும் அதன் பின்னர் மேற்கண்ட நிலத்திற்கு வாரியத்தால் கிரயத்தொகை செலுத்திய பிறகு அரசு விதிமுறைக்குட்பட்டு (Change of classification and withdrawal of Notification) நிலமாற்றம், முன்நுழைவு அனுமதி வழங்க இயலும் என்ற நிபந்தனைக்குட்பட்டு மண்டல வார்டு குழு பின்னேற்பின் அடிப்படையில் பரிந்துரையினை எதிர் நோக்கி நிலைக்குழு (வமநி) மூலமாக மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது.

<u>மேற்படி தீர்மானம் எண். 317/2014 நாள்.30.05.2014—ஆம் மன்றத்தீர்மானத்தில்</u>

1 24.01.2014 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான எண்.96/2014, நாள்.24.01.2014 ன்படி, மண்டலம் –8, கோட்டம் –104, ஓட்டேரி செங்கற் சூளை சாலை, திடீர் நகர் குடிசை பகுதியில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான தனி நிலத்தில் 35 மனை 375 சதுர அடி (புல எண்.3077 முதல் 3081 வரை) நிலத்தை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு கிரவுண்ட் ஒன்றிற்கு ரூ.10,000/— வீதம் தருவதற்கு முன்னர் நிர்ணயம் செய்துள்ளபடியும்,

2 தற்போது மேற்கொண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு தேவைப்படும் 54 மனை 1478 சதுர அடி (புல எண்.3065 முதல் 3068 வரை மற்றும் 3082 முதல் 3086 வரை) நிலத்திற்கு ஒரு கிரவுண்ட் ஒன்றிற்கு அதே தொகையான ரூ.10,000/— வீதம் வசூலிக்கவும்,

3 தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் மேற்கண்ட புலத்தில் கட்டப்படும் 1000 குடியிருப்பு வீடுகளில் சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கு என 250 குடியிருப்பு வீடுகளை தனியாக ஒதுக்கி அளிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடனும்,

4 இதே புல எண்களில் ஏற்கனவே தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்ட 33 மனை 1309 சதுர அடி நிலத்தை, மாநகராட்சியின் எதிர்கால தேவைக்காக, எவ்வித ஆக்கிரமிப்பு ஏதுமின்றி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் சென்னை மாநகராட்சியிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடனும்,

5 ஏற்கனவே 24.01.2014 அன்று நடைபெற்ற மன்றக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி அரசின் ஆணை கிடைக்கும் வரை காத்திராமல், அப்பகுதி வாழ் குடிசை மக்கள் நலன் கருத்தில் கொண்டு இதனை அவசரம் மற்றும் அவசியம் கருதி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மேற்கண்ட புலங்களில் உள்ள நிலத்தில் முன்நுழைவு செய்துக்கொள்ளவும் (Enter Upon Permission) வரைப்படம் தயாரித்தல், ஒப்பம் கோரல் போன்ற எல்லா பணிகளையும் ஆரம்பிக்கலாம் என மன்ற தீர்மானத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால், மேற்கண்ட நிலம் மயான வகைப்பாடு கொண்டுள்ளதால் இந்நிலத்தை குடியிருப்பு வகைப்பாட்டிற்கு மாற்றம் செய்த பின்னரே மேற்கண்ட நிலத்தில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நிலம் மாற்றம் மற்றும் முன்நுழைவு அனுமதி வழங்க இயலும்.

எனவே,

1. மேற்படி மன்ற தீர்மான எண்.96/2014 நாள்.24.01.2014—ல் தெரிவித்துள்ள தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் நிலம் கோரியுள்ள புல எண்.3077 முதல் 3081 வரை உள்ள 35 மனை 375 ச.அ. நிலத்திற்கு நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானத்தை ரத்து செய்வதற்கும்,
2. தற்போது இயற்றப்பட்ட மன்ற தீர்மானம் எண்.317/2014 நாள்.30.05.2014—ல் தெரிவித்துள்ள தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் கூடுதலாக நிலம் மாற்றம் கோரியுள்ள புல எண்.3082 முதல் 3086 மற்றும் 3065 முதல் 3068 வரை உள்ள 54 மனை 1478 ச.அ. நிலத்திற்கு நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானத்தை ரத்து செய்வதற்கும்,
3. மயான வகைப்பாடு கொண்டுள்ள கீழ்காணும் புல எண்களான 3065 முதல் 3086 வரையுள்ள 89 மனை 1853 ச.அடி உள்ள இந்நிலத்தை குடியிருப்பு வகைப்பாட்டிற்கு மாற்றம் செய்வதற்கும், மேற்படி நிலம் சென்னை மாநகராட்சி தனி நிலம் என்பதாலும் தற்போது இந்நிலம் காலியாக உள்ளதாலும் இந்நிலத்திற்கு சந்தை விலை அடிப்படையில் நில கிரயத் தொகை பெற்றுக்கொண்டு தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரியத்திற்கு நில மாற்றம் செய்வதற்கும்,

| வ.எண். | கிராமம் | பகுதி எண். | புல எண். | பரப்பளவு |
|---|---|---|---|---|
| 1 | புரசைவாக்கம் | 49 | 3065 | 04.0690 |
| 2 | புரசைவாக்கம் | 49 | 3066 | 04.2300 |
| 3 | புரசைவாக்கம் | 49 | 3067 | 04.1059 |
| 4 | புரசைவாக்கம் | 49 | 3068 | 11.2095 |
| 5 | புரசைவாக்கம் | 49 | 3077 | 07.0280 |
| 6 | புரசைவாக்கம் | 49 | 3078 | 07.0005 |
| 7 | புரசைவாக்கம் | 49 | 3079 | 07.2083 |
| 8 | புரசைவாக்கம் | 49 | 3080 | 06.1867 |
| 9 | புரசைவாக்கம் | 49 | 3081 | 06.0940 |
| 10 | புரசைவாக்கம் | 49 | 3082 | 05.1970 |
| 11 | புரசைவாக்கம் | 49 | 3083 | 06.0210 |
| 12 | புரசைவாக்கம் | 49 | 3084 | 07.2032 |
| 13 | புரசைவாக்கம் | 49 | 3085 | 04.0152 |
| 14 | புரசைவாக்கம் | 49 | 3086 | 05.0570 |
| மொத்தம் | | | | 89.1853 |

4. மாநகராட்சி நிலம் புலன் எண்.3087 பகுதி, 3088, 3089/1,2 வரையுள்ள 22 மனை 537 சதுர அடியில் ஆக்கிரமித்து குடியிருந்து வரும் குடியிருப்புதாரர்களையும், MUDP திட்டத்தில் உள்ள 11 மனை 772 ச.அடியில் குடியிருந்து வரும் குடியிருப்புதாரர்களையும் உடனடியாக காலி செய்து அப்பகுதியை மாநகராட்சி எதிர்கால தேவைக்கு ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் அரசின் அனுமதி கோருவதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 22.12.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.12.2014 அன்று தீர்மான எண்.515/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இப்பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள நிலத்தின் மீது உயர்நீதிமன்றம் “ஏற்கனவே நில உரிமையாளர் தொடுத்துள்ள வழக்கின் மீது தீர்ப்பளித்துள்ளது.” இது குறித்து உரிய சட்டக் கருத்துரு பெற்று, அதனடிப்படையில் பின்னர் தீர்மானிக்கலாம் என இதனை இதற்கு மன்றம் ஒத்திவைக்கின்றது.”

********